கோகுலம்

Gokulam

ஜூலை 83 ரூ 2




"Spencer's biscuits, make me smile."
Glucose, Zoologicals, Hicount – with twice the energy, twice the taste...
So crisp, golden and irresistible—there's a smile in every Spencer's biscuit!
Enjoy Spencer's Glucose, Zoologicals and Hicount. The crunchiest, munchiest biscuits in town!
Spencer's GLUCOSE
Spencer's GLUCOSE
Spencer's Glucose
Spencer's
Spencer & Co. Ltd., Bangalore.
'Energy' never tasted so delicious!

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கோகுலம்


கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா
மலர்—1 இதழ்—6
1983 ஜூலை மாத இதழ்

தனிப்பிரதி ரூ. 2/-
ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்
கிண்டி, சென்னை-600 032



இந்த இதழ் எழுத்தாளர்கள்



மாயூரன்



செல்ல கணபதி



செம்பை சேவியர்




குழ. கதிரேசன்



குந்தவை



எல். விஜயலட்சுமி




ஜோதி காந்தன்



எம். ஆர். ராஜன்




நா. ஜெயபாலன்



ஆர். ஆனந்த்

அருமைச் சிறுவர் சிறுமியரே



வெளியே தலை காட்ட முடியாத அளவு வெய்யில்; பருவமழை தவறியதால் தண்ணீர்ப் பஞ்சம். இரண்டும் சேர்ந்து உங்கள் விருப்பம் போல் விடுமுறையைக் கொண்டாட முடியாமல் செய்து விட்டன.

நீங்கள் தேர்விலே பெற்ற வெற்றி, இந்தச் சிரமங்களை யெல்லாம் மறக்கும்படி செய்திருக்கும். இப்போது, பள்ளிக்கூடங்களெல்லாம் மீண்டும் திறக்கப்பட்டு விட்டன. உங்களில் பெரும்பாலோர் மேல் வகுப்புகளுக்குச் சென்றிருப்பீர்கள். உங்கள் எல்லாருக்கும் கோகுலத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள்.

உங்களில் ஒருசிலர் 'பழைய வகுப்புகளிலேயே இருக்கும்படி ஆகி விட்டதே!' என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

'நம் வாழ்க்கையில் ஓராண்டு என்பது சாதாரண காலமா? இந்த ஓராண்டும் நம் பெற்றோர் நமக்காக எப்படி எப்படியெல்லாம் பாடு பட்டார்கள்! கடுங் குளிரானாலும் சரி, தனக்கு உடல்நிலை சரியில்லாத போனாலும் சரி, அம்மா அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அதி காலையிலே எழுந்து, உணவு தயாரித்து, குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் பம்பரம் போல் சுழன்று சுழன்று செய்தார்களே! அப்பா நமக்கு வேண்டிய புத்தகங்கள், உடைகள், இன்னும் தேவையானவற்றை யெல்லாம் மனம் கோணாமல் வாங்கித் தந்து, நம்மை நன்றாகப் படிக்கும்படி அடிக்கடி தூண்டி வந்தார்களே! அவர்களுக்கு இது எவ்வளவு பெரிய ஏமாற்றம்! நம்முடன் படித்தவர்களெல்லாம் மேல் வகுப்பில் இருக்கும்போது, நாம் அதே வகுப்பில் இருக்கிறோமே!'' என்றெல்லாம் அந்த மாணவர்கள் கவலைப் படலாம்.

அவர்கள் கவலைப்பட வேண்டாம். 'இந்த ஆண்டு படிப்பிலே மிகுந்த கவனம் செலுத்தி, நிறைய நிறைய மதிப்பெண்களைப் பெற்று, அப்பா அம்மாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஊட்டுவேன்' என்ற உறுதி யுடன் அவர்கள் உழைத்தால், வெற்றி நிச்சயம். அவ்வாறு வெற்றி பெறப்போகும் அவர்களுக்கும் முன்கூட்டியே நமது வாழ்த்துக்கள்.

- அழ. வள்ளியப்பா

ரோஜாப்பூ என்ற பாம்பின் கதை

கதை: மகாகவி பாரதியார்
சித்திரம்: வி. ஜெயன்




ஆ! நான் பெண்ணாக மாறி விட்டேன்!
பெண்ணே நீ யார்?
நான் சிங்கள அரசனின் மகள்.
ஆஹா! தேவ லோக ரம்பை அல்லது நாக கன்னிகை போல் அழகாக இருக்கிறாயே!
ஆ! நாக கன்னிகை என்கிறாரே! என்னைக் கண்டு பிடித்து விட்டாரோ! பயத்தால் உடம்பு நடுங்குகிறதே! இனியும் இங்கு நின்றால் முனிவர் சொன்னது போல் உயிருக்கு ஆபத்துதான்!
இவள் யாராக இருக்கும்? மிக அழகாக இருக்கிறாளே!
ஐயா, தாகமாக இருக்கிறது. அதோ அந்தக் கிணற்றிலே தண்ணீர் எடுத்து வந்து...
இதோ எடுத்து வருகிறேன்!
உனக்காக எதையும் செய்யத் தயார்... இதோ கிணற்றுக்குள் ஒரு தண்ணீர்ப் பாம்பு! இதற்கா பயப்படுவேன்?
ஐயோ! இவரும் பாம்பு என்கிறாரே! பயமாயிருக்கிறதே! பயம் வந்தபின் நிற்கலாமா! உயிருக்கு ஆபத்து! ஆபத்து!

திருக்குறள் புதிர்

புதிர் ①





புதிர் ②

மேலே இரு படங்கள் உள்ளன. முதல் படத்தைப் பார்த்ததுமே உங்களுக்கு ஒரு குறள் நினைவுக்கு வரும். அதேபோல் அடுத்த படத்தைப் பார்த்ததும் இன்னொரு குறள் நினைவுக்கு வரும்.

இந்த இரண்டு குறள்களையும் உங்களால் பிழையின்றி எழுத முடியுமா? எங்கே, அவற்றை ஒரு தாளில் எழுதுங்கள். எழுதியவை சரிதானா என்று 25ஆம் பக்கம் உள்ள விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இதே போல் இனி ஒவ்வோர் இதழிலும் திருக்குறள்—சித்திரப் புதிர்களைக் காண்பீர்கள்.





பம்பரம் பிறந்த இடம்

பம்பரம் முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டது 'கோமா' என்ற கொரியாவில்தான். கி. பி. 794-ஆம் ஆண்டு ஜப்பானுக்குப் பம்பரம் அறி முகமானது. 1191-ஆம் ஆண்டில் மிக வும் பிரபலமானது.

பம்பரம் சுழற்றுவதும், பந்தயம் கட்டுவதும் பெரிய சூதாட்டமாக மாறி யது. இதனால் மக்களின் மனம் கெடு கிறது என்று இதைத் தடை செய்ய ஜப்பான் அரசு நான்கு முறை முயன் றது; முடியவில்லை.

இன்று ஜப்பானில் மிகப் பெரிய குடிசைத் தொழில் பம்பரம் செய்வது தான்!

—என். மாதவன் (204)
திருச்சி-14



ரேடியோவைக் கண்டுபிடித்தவர்

ஆசிரியர்: ரேடியோவைக் கண்டு பிடித் தவர் யார்? எப்போது?

ராமு: ரேடியோவைத் தூக்கிக் கொண்டு போன திருடன், அதை விற் கும்போது ஒரு போலீஸ்காரர் கையும் களவுமாகக் கண்டு பிடித்தார் சார்.

-கோ. கோபிகிருஷ்ணன் (1363)
கூனூர்



தேசபக்தரின் பெட்டி

நம் தேச விடுதலைக்குப் பாடுபட்ட வர்களில் ஒருவர் மதன் மோகன் மாள வியா. அவர் ஒரு முறை ரயிலில் செல் லும்போது, அவருடைய பெட்டியை எவனோ திருடிச் சென்று விட்டான். அதில் முக்கியமான சில காகிதங்கள் இருந்தன.

மாளவியா போலீஸில் ரிப்போர்ட் கொடுத்து, பத்திரிகைகளிலும் செய் தியை வெளியிட்டார்.

சில தினங்கள் கழித்து மாளவியா வுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத் துடன் பார்சலுக்கு உரிய ரசீதும் இருந் தது. கடிதத்தில்,

"ஐயா, ஒரு தேச பக்தரின் பெட்டி யைத் திருடியதற்கு மிகவும் வருந்து கிறேன். அதில் இருந்தவற்றைப் பார்த்ததும், என் மனம் மிகவும் வேத னைப்பட்டது. பெட்டியை இன்று பார்ச லில் தங்களுக்கு அனுப்பி யிருக்கிறேன். இன்று முதல் திருடும் தொழிலை விட்டு விட்டேன். என்னை மிகவும் மன்னிக்குமாறுகேட்டுக்கொள்கிறேன்."

—மீ. பட்டாபிராமன் (207)
மதுரை

பிருந்தாவனம்-2



எங்கள் பாப்பா

எட்டும் பொருளை எடுப்பாள்
எதையும் தனக்குக் கேட்பாள்

பட்டாம் பூச்சி பிடிப்பாள்
பாடப் புத்தகம் கிழிப்பாள்

மண்ணில் அமர்ந்து சிரிப்பாள்
மலரைக் கண்டால் பறிப்பாள்

அண்ணா என்றே அழைப்பாள்
அம்மா பார்த்தால் குதிப்பாள்

எங்கள் பாப்பா குறும்பு
என்றும் எமக்குக் கரும்பு


—க. பெ. சுந்தரவேல் முருகன்
ஈரோடு-2 (173)

சேவல் பாட்டு

சின்னச் சின்னச் சேவல்இது
சிப்பாய் நடை நடக்குது
சின்னச் சின்னத் தலையின்மேலே
செப்புக் கொண்டை குலுங்குது.

கொக்க ரக்கோ என்று தினமும்
கூவி நம்மை எழுப்புது
கொத்திக் கொத்தி இரைகளையே
நித்தம் தின்று வாழுது.

—எம். பி. குருராசன் (518)
என். தட்டக்கல்



எதிலிருந்து கிடைக்கிறது?

ஆசிரியர்: மீனு, பட்டு எதிலிருந்து கிடைக்கிறது?
மீனு: பட்டுப் பூச்சியிலிருந்து.
ஆசிரியர்: வெரி குட். கம்பளி எதிலிருந்து கிடைக்கிறது?
மீனு: கம்பளிப் பூச்சியிலிருந்து.

—டி. ரவிசந்திரன் (2085)
பணம்பூண்டி



புத்தகத்தைக் காப்பது எப்படி?

புத்தகத்தைப் பிரித்தபடியே கவிழ்த்து வைக்கக் கூடாது. அடையாளத்திற்காக மூலையை மடிக்கக் கூடாது. புத்தகத்தை வைக்கும்போதும், கொடுக்கும்போதும் வீசி எறிதல் கூடாது. கூடுமானவரை சிறுகுழந்தைகளிடம் புத்தகத்தை கொடுக்க வேண்டாம். எண்ணெய், தண்ணீர் பட்ட கைகளுடன் தொட வேண்டாம். முக்கிய பகுதிகளைக் கிழிக்க வேண்டாம்.

—ஆர். நாச்சியப்பன் (75)
திருச்சி



முதல் ஆங்கில நூல்

இந்தியாவில் முதன் முதலாக அச்சிடப்பட்ட ஆங்கில நூல் எது? தாமஸ் டிச் என்பவர் எழுதிய 'எ கைட் டு தி இங்கிலீஷ் டங் (A Guide to the English Tongue) என்ற புத்தகம் தான். 1716ல் வெளிவந்தது.

—அ. அன்பரசு (1201)
வேலாண்டி பாளையம்

பிருந்தாவனம்-3



நியூட்டனும் முட்டையும்

விஞ்ஞானி நியூட்டன் மிகவும் கடினமான ஆராய்ச்சி ஒன்றில் ஈடுபட்டிருந்தார். அவர் சாப்பிட மறந்துவிடுவார் என்று நினைத்த வேலைக்காரி, அவருடைய காலை ஆகாரமான முட்டையையும் ஒரு கிண்ணத்தில் நீரையும் எடுத்து வந்தாள்.

''மேரி, வைத்துவிட்டுப் போ. நானே அவித்துச் சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்றார் நியூட்டன்.

''நீங்கள் முட்டையை நான்கு நிமிடங்களுக்கு அவிக்க வேண்டும். அப்போதுதான் சாப்பிடப் பதமாக இருக்கும்'' என்று சொல்லிவிட்டுப் போனாள் மேரி.

சிறிது நேரம் சென்றது. மேரி திரும்பி வந்து பார்த்தாள். நியூட்டன் அடுப்பின் அருகிலே நின்று கொண்டிருந்தார். கிண்ணத்தில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. உள்ளே முட்டைக்குப் பதிலாகக் கைக்கடிகாரம் கொதித்துக் கொண்டிருந்தது. கையிலுள்ள முட்டையை அவர் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். ''நாலு நிமிடம் ஆகிவிட்டதா? என்று அவர் முட்டையைப் பார்க்கிறாரோ!'' என்று நினைத்து மேரி உள்ளூரச் சிரித்தாள்.

—அ. இந்துமதி (1675), மதுரை

ரைட் சகோதரர்கள்

''உங்கள் பையன்கள் இருவரும் என்ன வேலை பார்க்கிறார்கள்?''

''இரண்டு பேருமே கண்டக்டர் வேலை பார்க்கிறார்கள்.''

''அப்போ 'ரைட்' சகோதரர்கள் தானே!''

—க. கிருஷ்ணராஜ் (770) சங்கரன்கோவில்



எந்த எண்?

இரண்டு எண்கள் கொண்ட ஒரு தொகை. அத்தொகையிலுள்ள இரண்டு எண்களையும் கூட்டி, அந்தக் கூட்டுத் தொகையில் உள்ள எண்ணைப் போல் இன்னொரு எண்ணால் பெருக்கினால், முதலில் கூறிய தொகையே விடையாக வரும். அந்த எண் எது?

விடை: 81. (8+1=9; 9×9=81)

—க. த. கிருஷ்ணன் (2533) சாத்தூர்





என்ன சினிமா?

சாந்தி: உமா, உன் அக்காள் எங்கே போயிருக்கிறாள்?

உமா: அக்காளும் அவள் மாமியாரும் சினிமாவுக்குப் போயிருக்கிறார்கள்.

சாந்தி: என்ன சினிமாவுக்கு?

உமா: 'மாமியாரா? மருமகளா?' சினிமாவுக்கு.

—க. பத்மலோசனா (1446) மேட்டூர் அணை

பிருந்தாவனம்

பூனையாரே!


பூனையாரே, பூனையாரே,
எங்கே போறீங்க?
பால் இருக்கும் இடத்தைத் தேடிப்
பையச் செல்கிறேன்.

பூனையாரே, பூனையாரே,
எங்கே போறீங்க?
தயிர் இருக்கும் இடத்தைத் தேடித்
தாவிச் செல்கிறேன்.

பூனையாரே, பூனையாரே,
எங்கே போறீங்க?
எலி இருக்கும் இடத்தை நோக்கி
எம்பிக் குதிக்கிறேன்.

பூனையாரே, பூனையாரே,
எங்கே போறீங்க?
விருந்து உண்ட மகிழ்ச்சி யோடு
வீடு திரும்புறேன்.

—எஸ். சந்திரசேகர் (1201)
செங்கற்பட்டு






மூழ்கிய படிகள்

ஒரு துறைமுகத்தில் ஒரு கப்பல் இருக்கிறது. அதிலிருந்து ஒரு கயிற்று ஏணி ஒரு பக்கத்தில் தொங்குகிறது. அதில் பத்துப் படிகள் இருக்கின்றன. ஒவ்வொரு படிக்கும் ஓரடி இடைவெளி இருக்கிறது. ஏணியின் அடிப்பாகம் கடல் நீரைப் பட்டும் படாமலுமாய்த் தொட்டுக் கொண்டிருக்கிறது.

மணி ஒன்றுக்கு எட்டு அங்குலம் வீதம் கடலின் நீர் மட்டம் உயர்கிறது. ஆறு மணி நேரத்துக்குப் பிறகு கயிற்றேணியில் எத்தனை படிகள் கடலுக்குள் மூழ்கியிருக்கும்?

விடை: நீரோடு கப்பலும் உயருவதால் ஏணிப் படி மூழ்காது.

—ப. விஜயகுமார்
சென்னை-7 (241)



எதிர்ப் பத ஊர்கள்

பள்ளியில் நமக்கு எதிர்ப் பதங்கள் கற்றுத் தருகிறார்கள். ஊர்களின் பெயர்களிலும் எதிர்ப் பத ஊர்கள் உள்ளனவே! இதோ சில:

மேட்டூர் — பள்ளத்தூர்
இராஜபாளையம் — ஆண்டிப்பட்டி
கருப்பூர் — வெள்ளூர்
புதுக்கோட்டை — பழையகோட்டை
மேலூர் — கீழூர்
தர்மபுரி — கஞ்சம்பட்டி
மணலூர் — பாறைப்பட்டி
பெரியகுளம் — சிறுக்குளம்
கரிசல்குளம் — செவல்குளம்

—எம். எஸ். கோமதி (37)
குமாரபுரம்

அது என்ன?

முதல் இரண்டு எழுத்துக்கள் மதிப்பைக் குறிக்கும். அடுத்த இரண்டு எழுத்துக்கள் தானியத்தைக் குறிக்கும். கடைசி இரண்டு எழுத்துக்கள் பாதுகாப்பைக் குறிக்கும். அந்த ஆறு எழுத்துப் பெயர் எது?

விடை: திருநெல்வேலி


—அ. விவேகானந்தன் (2181)
கும்மிடிப்பூண்டி

பங்கு பெற்றோர்:
கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள்



செவ்வனின் சிபாரிசு

எவ. நல்லதம்பி



தலைமை ஆசிரியர் தணிகாசலம் அறைக்கு முன்னால் பெரிய கூட்டம் காத்திருந்தது. பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பதற்காகப் பெற்றோர், தலைமை ஆசிரியரைக் காணக் காத்திருந்தார்கள். குழந்தைகளை அழைத்து வந்திருந்த தாய்மார்களும் நின்றிருந்தார்கள்.

பள்ளிக்கூடம் திறந்து பதினைந்து தினங்கள் ஆகிவிட்டன. பள்ளி முழு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும், குழந்தைகளைச் சேர்க்கும் பிரச்னை தீர்ந்த பாடில்லை.

தலைமையாசிரியர் தணிகாசலத்தைப் பொறுத்தவரை, குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது என்பது முடிந்து போய்விட்ட செயல். ஆனாலும் பெற்றோர்கள் விட்டபாடில்லை. அந்தப் பள்ளிக்கு அந்த வட்டாரத்தில் நல்ல பெயர் வேறு.

தலைமையாசிரியர் வெளியே வந்தார்.

கூட்டத்தைப் பார்த்து ஒரு பெரிய வணக்கம் செலுத்தினார். பிறகு பேசினார்: ''பெரியோர்களே, எங்கள் பள்ளியில் இனி ஒரு குழந்தையைக்கூடச் சேர்க்க முடியாது. எல்லா வகுப்புகளும் நிரம்பி வழிகின்றன. ஆகவே, தயவுசெய்து வேறு பள்ளியைப் பாருங்கள்'' என்று கண்டிப்பாகக் கூறினார்.

நின்றிருந்த கூட்டத்தில் ஒரிருவர் நகர்ந்தனர். அவர்களுக்கு வேறு வேலை இருந்ததுபோல் தெரிகிறது. சற்று நேரம் ஆன பின்னர், மேலும் ஒரிருவர் புறப்பட்டார்கள். ''இன்று காத்திருப்பது பயனில்லாதது. தலைமையாசிரியர் மகிழ்ச்சியாக இருக்கும் சமயம் பார்த்துப் பேசுவோம்'' என்று அவர்கள் நினைத்தார்கள் போலும்.

சற்று நேரம் கழித்துத் தலைமையாசிரியரின் சேவகர் வெளியே தலையை நீட்டிப் பார்த்துவிட்டு உள்ளே சென்றார்.

தலைமை ஆசிரியர் பார்த்து வரச் சொல்லியிருந்ததால், அவர் அவ்வாறு பார்த்திருக்க வேண்டும். மீண்டும் வெளியே வந்த சேவகர், ''நிற்பவர்கள் வரிசையாக நில்லுங்கள். தலைமையாசிரியரைப் பார்க்க விரும்புகிறவர்கள் பெயர்களை எழுதிக் கொடுங்கள்'' என்று கேட்டார். வெளியில் நின்றிருந்த ஐந்தாறு பேருக்கும் சற்று நம்பிக்கை ஏற்பட்டது. பெயர்களை உடனே எழுதிக் கொடுத்து விட்டு நம்பிக்கையுடன் வரிசையில் நின்றார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் முதல் நபர் உள்ளே அழைக்கப்பட்டார். பார்ப்பதற்கு அவர் வாட்ட சாட்டமாக இருந்தார். தலைமை ஆசிரியர் அறைக்குள் நுழைந்தார். ''உட்காருங்கள்'' என்று தலைமை ஆசிரியர் வரவேற்றார். பிறகு ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

முதல் நபர் பேசினார்: ''தணிகாசலம் சார்! என் பெயர் சங்கர். சென்னை அண்ணா சாலையில் பெரிய நகைக் கடை வைத்திருக்கிறேன். உங்கள் பள்ளிக்குக் குளிர் நீர் தரும் 'ரிஃப்ரிஜிரேட்டர்' ஒன்றை ஐயாயிரம் ரூபாய் போட்டு வாங்கித் தருகிறேன். என் பையன் முரளிக்கு ஏழாம் வகுப்பில் இடம் வேண்டும். தயவுசெய்து....'' என்று இழுத்தார்.

தலைமை ஆசிரியர், ''சங்கர்ஜி! எங்கள் பள்ளியில் இனி ஒரு மாண

வனைக்கூடச் சேர்க்க முடியாது. நான்தான் முன்பே சொல்லி விட்டேனே! என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றார்.

மீண்டும் சங்கர்ஜி ஏதோ சொல்ல வாயெடுத்தார். தலைமை ஆசிரியர் பெரிய வணக்கம் போட்டவுடன், மேற்கொண்டு எதுவும் பேச முடியாமல் அவர் திரும்பி விட்டார்.

வரிசையில் நின்ற இரண்டாமவருக்கு அழைப்பு வந்தது. அவர் தம்முடன் அழைத்துவந்த பையனை வெளியே நிற்க வைத்துவிட்டு, தாம் மட்டும் உள்ளே நுழைந்தார். தலைமை ஆசிரியருக்கு வணக்கம் செலுத்தினர். தலைமையாசிரியர் பதில் வணக்கம் சொன்னவுடன், அந்த இரண்டாம் நபர் பணிவாக ஒரு காகித உறையைக் கொடுத்தார். தலைமையாசிரியர் வாங்கிப் படித்தார். அவருக்குக் கோபம் வந்தது.

''ஏன் சார், என் உறவினரிடமிருந்து கடிதம் வாங்கி வந்தால் மட்டும் புதிதாக இங்கு இடம் முளைத்துவிடுமா? நான் உங்களுக்கு எத்தனை முறை சொல்லி விட்டேன். மீண்டும் மீண்டும் இப்படி என்னைத் தொல்லை செய்யலாமா? இது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா? நான் என் உறவினர் கடிதங்களுக்கு மதிப்பு அளித்து இடங்கள் தருவதாக இருந்தால், இன்னொரு பள்ளிக்கூடம் கட்ட வேண்டியதுதான்'' என்று கர்ஜித்தார், தலைமையாசியர். இரண்டாம் நபர் பேச முடியாமல் திரும்பி விட்டார்.

மூன்றாவதாகப் பெண்மணி ஒருவர் உள்ளே நுழைந்தார். தலைமையாசிரியருக்கு அவரை எங்கோ பார்த்த நினைவு. அந்தப் பெண்மணியே முதலில் பேச்சை ஆரம்பித்தார். ''வணக்கம் சார், என்னைத் தெரிகிறதா? போன வாரம் என் பெண்ணுக்கு ஆறும் வகுப்பில் இடம் கொடுத்தீர்கள். அவள் பெயர் நிர்மலா. நினைவு இருக்கிறதா?'' என்றார்.

தலைமையாசியர், ''நினைவிருக்கிறதே! நன்றாக நினைவு இருக்கிறது. அவளுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''எல்லாம்வாங்கிக்கொடுத்தாயிற்று. சார். இப்போது உங்களிடம் இன்னொரு உதவிக்காக வந்திருக்கிறேன்'' என்று லேசாகத் தலையைச் சொறிந்தார்.

''என்ன, உபகாரச் சம்பளமா? அதற்கு இன்னும் கொஞ்ச நாள் ஆகும். விண்ணப்ப பாரம் அடுத்த வாரம் தருவோம்.'' என்றார் தணிகாசலம்.

''அது இல்லை சார். என் அக்கா பெண்ணுக்கும் தங்கள் பள்ளிக்கூடத்தில் ஆறும் வகுப்பில் இடம் வேண்டும். அக்கா இரண்டாயிரம் ரூபாய் டொனேஷன் தருகிறேன் என்கிறாள். தயவு செய்து...'' என்று இழுத்தார்.

''உங்கள் அக்கா பெயர் தனலட்சுமி தானே!'' என்று தலைமை ஆசிரியர் கேட்டார்.

''ஆமாம்'' என்று ஆவலாகத் தலையாட்டினார் அந்த அம்மையார்.

''அவருடைய பையனுக்கு இங்கு ஏற்கெனவே இடம் கொடுத்தாயிற்று. மேற்கொண்டும் உங்களுக்கே இடம் கொடுத்தால், இந்தப் பகுதியில் மற்றவர்கள் யாரும் இந்தப் பள்ளியில் படிக்க முடியாது. தயவு செய்து போய்விடுங்கள்'' என்று தலைமையாசிரியர் கூறி, தம் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டார். அம்மையார் மௌனமாக வெளியேறினர்.

தலைமையாசிரியரின் சேவகர் மீண்டும் வெளியே வந்தார். இன்னும் யாரேனும் நிற்கிறார்களா என்று பார்த்தார். பேண்ட் அணிந்த ஒருவர் இன்னும் காத்திருந்தார். அவரை உள்ளே அழைத்தார். தலைமையாசிரியர் அவரை அமரும்படி கூறி, ''என்ன சார், சொல்லுங்க'' என்று கேட்டார்.

''ஹெட்மாஸ்டர் சார்! நான் ஒரு அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்க்கிறேன். தங்கள் பள்ளிக்கு எங்கள் அலுவலகத்தில் தேவைப்படும் உதவிகளை என்னல் விரைவில் முடித்துத் தர முடியும். சற்றுச் சலுகையும் தங்கள் பள்ளிக்குக் கிடைக்கும். என் பையன் வசந்தனுக்குத் தயவுசெய்து ஒன்பதாம் வகுப்பில் இடம் கொடுக்க வேண்டிக் கொள்கிறேன். ப்ளீஸ், இல்லை என்று சொல்லிவிடாதீர்கள்!''

தலைமையாசிரியர், ''சார், நீங்களும் ஒரு பதவியில் இருப்பவர். முடியாத காரியத்தை முடியுங்கள் என்று சொல்வதில் ஏதாவது பொருள் இருக்கிறதா? எதற்கும் ஒரு எல்லை உண்டு. அந்த எல்லைக்கு நாங்கள் வந்து விட்டோம். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்.'' என்று தலைமையாசிரியர் நயமாக இடம் இல்லை என்பதை உணர்த்தினர். வந்திருந்த அலுவலர் மறுபேச்சின்றி வெளியேறினர்.

ஒரு பாட வேளை முடிந்து மறு பாட வேளை தொடங்குவதற்குப் பள்ளி மணி அடித்தது. தலைமையாசிரியருக்கு அப்போது பாட வகுப்பு இருந்தது. ஆகவே புத்தகத்தை எடுத்துக் கொண்டு, தம் அறையை விட்டு வெளியே வந்தார்.

தம் அறைக்கு முன்னே நின்றிருந்த வேப்ப மரத்தை நோக்கி ஆசிரியர்கள் சிலரும் மாணவர்கள் சிலரும் ஓடினர்.

அங்கு சிறுவன் ஒருவன் மயக்க மடைந்து விழுந்திருந்தான். வெய்யி லில் வெகு நேரம் நின்றதால் அவன் அப்படி விழுந்திருக்கக் கூடும் என்று ஓர் ஆசிரியர் கூறினார். அவன் கையில் ஏதோ சில பேப்பர்கள் இருந்தன. அவனை வேப்ப மர நிழலில், மணல் பரப்பில் நன்கு படுக்க வைத்தார்கள். சிலர் அருகில் உள்ள குழாயடிக்குச் சென்று குவளையில் நீர் கொண்டு வந் தார்கள். ஓர் ஆசிரியர் தம் கையில் நீரைத் தொட்டு, விழுந்திருந்த அந்தப் பையன் கண்களில் தடவினார். பிறகு நெற்றியிலும் கன்னங்களிலும் பின்னர் முகம் முழுவதும் தண்ணீரைத் தெளித் தார். பையன் கண் விழித்துப் பார்த் தான். சில நொடிகளில் எழுந்து உட் கார்ந்தான்.

தலைமையாசிரியர் அந்தக் கூட்டத் தில் என்ன நடக்கிறது என்று பார்க்க அருகில் சென்றார். நின்றிருந்த மாண வர்களும் ஆசிரியர்களும் வழி விட் டார்கள். தலைமையாசிரியர் அந்தச் சிறுவனைப் பார்த்தார். அவன் உடம் பில் சட்டை இல்லை. இடுப்பில் மட்டும் அரைக் கால் சட்டை காக்கித் துணி யில் போட்டிருந்தான்.

தலைமை ஆசிரியருக்கு அந்தப் பையனை எங்கோ பார்த்தது போல் ஒரு நொடி தோன்றிற்று. அன்று காலையில் அவர் வந்த டவுன் பஸ்ஸில்தான் அவனும் வந்தான். அவருக்கு நன்றாக நினைவு வந்தது.

''தம்பி, நீ எங்கிருந்து வருகிறாய்? இங்கு எதற்கு வந்தாய்?'' என்று கேட் டார்.

அவனுக்கு விக்கல் எடுத்தது. பேச முடியவில்லை. குடிப்பதற்கு ஒரு குவளை தண்ணீர் கொண்டு வரும்படி தலைமை ஆசிரியர் சொன்னார். ஒரு பையன் சிட் டாய்ப் பறந்தோடிக் குவளையில் தண் ணீர் கொண்டு வந்தான். அதை வாங்கி அந்தச் சிறுவன் ஆவலோடு குடித்தான்.

தலைமை ஆசிரியர் அந்தச் சிறுவனைத் தம் அறைக்கு அழைத்துச் சென்றார். உதவித் தலைமை ஆசிரியரையும் தம் முடன் வருமாறு கூறினார். பையன் தயங்கியபடி அவர்கள் பின் சென்றார்.

தணிகாசலம், உதவித் தலைமையாசிரி யரைப் பார்த்து, ''இவனைப் பற்றி ஒரு சிறப்பான செய்தி சொல்கிறேன், வாருங்கள்'' என்று நடந்து கொண்டே சொன்னார்.

தலைமையாசிரியர் அறை வந்தது. அங்கு அதற்குள் ஒரு சிறு கூட்டமும் சேர்ந்து விட்டது. கூட்டத்தைப்



பார்த்த சிறுவன் கண் கலங்கினான். எல்லோரும் நல்ல உடை தரித்து நிற்கும் போது, தான் மட்டும் மேல் சட்டை இல்லாமல் வெற்றுடம்பாக இருந்தது அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

தேம்பியவாறு கண்களைத் துடைத்துக் கொண்டான். தலைமை ஆசிரியர் அவனைத் தட்டிக் கொடுத்து ''அழாதே தம்பி, உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

பையன் தயங்கித் தயங்கி ஆரம்பித்தான்: ''சார், நான் பக்கத்தில் உள்ள கிராமத்திலிருந்து வருகிறேன். எனக்கு அப்பா இல்லை, அம்மா மட்டும் தான் இருக்கிறார். நாங்கள் ஏழை. நான் எங்கள் கிராமப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு முடித்திருக்கிறேன். இங்கு சேரலாம் என்று இன்று காலையில் வரும்போது....'' என்று சொன்ன சிறுவன் தயங்கினான்; அழுதான்.

உடனே தலைமை ஆசிரியர், ''பரவாயில்லை, தம்பி, பயப்படாதே. அழாதே! மேற்கொண்டு நடந்தது எனக்குத் தெரியும்'' என்று சொல்லிவிட்டுத் தலைமையாசிரியர் கூட்டத்தைப் பார்த்தார்.

பிறகு பேசினார்: ''இன்று என் கண்ணால் பார்த்தேன். ஒரு நொடியில் அது நடந்து விட்டது. நான் வந்த பஸ்ஸில் தான் இவனும் வந்தான். நாங்கள் வண்டியை விட்டு இறங்கியபோது ஒரு அம்மா அடிபட்ட காயத்துடன் கிடந்தார்கள். அந்த அம்மாவின் முழங்கால் ஒடிந்து இருந்தது. கொட கொட என்று ரத்தமும் கொட்டியது. 'ஐயோ அம்மா' என்று முனகிக் கொண்டு இருந்தார். ஏதோ குடும்பச் சண்டையில் அந்த அம்மாவை யாரோ அப்படி அடித்துப் போட்டு இருக்கிறார்கள். பார்த்தால் ஏழை போல் தெரிந்தது. நான் உட்படப் பலரும் அந்தக் காட்சியைக் கண்டு நின்றோம். வேறு ஒன்றும் செய்யவில்லை. சிலர், 'ஐயோ பாவம்' என்றார்கள். இன்னும் சிலர் அதுகூடச் சொல்லாமல், ஒன்றும் நடவாதது போல் நடந்து சென்றார்கள். இந்தச் சிறுவன்தான் தன் சொக்காயைக் கழற்றிக் கொடுத்து அந்த அம்மாவின் கால்களில் கட்டிக் கொள்ளச் சொன்னான். அது அந்த அம்மாவால் முடியாமல் போகவே, தானே கட்டியும் விட்டான்'' என்று சொன்னார். எல்லோரும் ஆச்சரியத்துடன் தலைமை ஆசிரியர் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவர் மேலும் தொடர்ந்தார். ''அது மட்டுமல்ல.; தான் கொண்டு வந்திருந்த மூன்று இட்டிலிகளையும் அந்த அம்மாவுக்கு ஊட்டி விட்டான். இவனுடைய இந்த நல்ல செயலை எண்ணி எண்ணி வியந்து போனேன். என்னால் அந்த இடத்தில் நெடு நேரம் நிற்க முடியாமல் பள்ளிக் கூடத்துக்கு உடனே வர வேண்டியதாயிற்று.'' என்றார் அவர்.

உதவித் தலைமை ஆசிரியர்: ''அப்படியா, இந்த நகரில் யார் இப்படி உதவியாக இருக்கிறார்கள்? இது அவசர யுகம் ஆயிற்றே!'' என்று சொன்னார். ''தம்பி, உன் பெயர் என்னப்பா?'' என்று அன்போடு கேட்டார்.

''என் பெயர் செல்வன் சார். என் அம்மா என்னை வேலைக்கு வரும்படி கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறார். நான் தான் ஆறுவது படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு பஸ்ஸுக்கு அம்மாவிடம் காசு வாங்கிக் கொண்டு வந்தேன். 'எப்படியோ தொலைந்துபோ' என்று அனுப்பினார்கள். இங்கோ, பள்ளியில் சேருவது மிகவும் கஷ்டம் போல் தெரிகிறது. இங்கு நின்றிருந்த பலரும் 'இடம் கிடைக்கவில்லை' என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் இப்போது வெற்றுடம்போடு திரும்பினால் அம்மா 'சட்டை எங்கே?' என்று கேட்டு அடிப்பார்கள்'' என்று சொல்லி அழுதான்.

அது அங்கு இருந்தவர்கள் அனைவரையும் மனம் உருகச் செய்து விட்டது. உதவித் தலைமையாசிரியர் அழுதுவிட்டார். செல்வனின் கள்ளம் இல்லாத பிஞ்சு உள்ளத்தில் ஏற்பட்ட கவலையும் ஏக்கமும் அவரை அப்படி அழச் செய்து விட்டன.

தலைமை ஆசிரியர் கம்பீரமான குரலில், ''செல்வா! உனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தில் இடம் கொடுத்து விடுகிறேன். அழாதே! அத்துடன் என் செலவில் புதுச் சட்டையும் வாங்கித் தருகிறேன்'' என்று சொன்னார்.

அதைக் கேட்ட அனைவரும் மகிழ்ந்தார்கள்.

எத்தனையோ பேர் எது எதையோ சிபாரிசாகக் கொண்டு வந்தும் தலைமையாசிரியரிடம் இடம் வாங்க முடியவில்லை. செல்வனின் மனிதாபிமானச் செயல் அவரது மனத்தை மாற்றியது. அதுவே அவனுக்குச் சிபாரிசாகவும் இருந்துவிட்டது.

வாழ்க செல்வனின் செயல்!

புகைப்பட ஆல்பம்





ஹாய்யா! விமானப் பைக்குள்ளே
வித்தியாசமான குடை!



'மழையண்ணன் வாரான்; குடையைப் பிடி' என்கி
றார்கள். குடைதான் நிறைய இருக்குதே!

புகைப்படங்கள்: எம். நடராஜன், சென்னை-15.






எல்லா உயிர்களும்
எங்களின் நண்பர்கள்!



புகைப்படங்கள்: 1 + 4
பி. கந்தராஜ்,
சென்னை-35.


புகைப்படங்கள்: 2 - 3
எம். நடராஜன்
சென்னை-15





அம்மாவுக்கு உதவியாய்
தையல்மிஷின் ஓட்டுவேன்; சட்னி செய்வேன்
மிக்சியில்!

புகைப்படங்கள்: எஸ். நாகராஜன் கல்கத்தா-1



ஏருமையின் பின்னே பொறுமையாய் நடக்கும்
அருமைத் தம்பி!

புகைப்படம்: எம். நடராஜன், சென்னை-15



கேள்வி நேரம்

கேள்வி கேட்பவர்:

பால நடராஜன்

பங்கு பெறுவோர்:

சி. பத்மஜா
ம. இராஜலெட்சுமி
கி. சுப்பிரமணியன்

பால நடராஜன்: நம் தேச விடுதலைக்காகப் பாடுபட்ட ஒரு தந்தையும் மகனும் ஒரே நாளில் சிறைப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் யார், யார் என்று தெரியுமா?

பத்மஜா: நேரு மாமாவும் அவரது தந்தை பண்டித மோதிலால் நேருவும்.

பால: அடே, பத்மஜா சரியாகக் கூறிவிட்டாளே! 6–12–1921ல் இருவரையும் ஆங்கிலேயர் கைது செய்தார்கள். சரி, நான்கு வேதங்கள் என்று சொல்கிறார்களே, அவை யாவை?

சுப்பிரமணியன்: ரிக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம்

பால: சரியாகச் சொன்னாய்.... நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் முதல் முதலாகச் சிறை சென்ற பெண்மணி யார்?

இராஜலெட்சுமி: சரோஜினி தேவி.

பால: ரொம்ப சரி. உலகிலுள்ள பறவைகளிலே மிகப் பெரியது எது?

பத்ம: வான்கோழிதானே?

பால: இல்லை.

சுப்பிர: நெருப்புக் கோழி.

பால: சரியான விடை. அது இரண்டரை மீட்டர் உயரம் இருக்கும்.. எடையும் ஏறத்தாழ 130 கிலோ கிராம் இருக்கும்.... தாஜ்மஹாலைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அதைக் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆயின என்பது தெரியுமா?

மூவரும்: (மௌனம்)

பால: என்ன, யாருக்குமே தெரியாதா? சரி, நானே சொல்லி விடுகிறேன். 21 ஆண்டுகள் ஆயின. 1632ல் ஆரம்பித்தது.... நவரத்தினங்கள் என்கிறோமே, அவைகளின் பெயர்களைக் கூற முடியுமா?

பத்ம: வைரம், நீலம், மாணிக்கம், புஷ்பராகம்,...அப்புறம்...அப்புறம்...

இராஜ: மரகதம், கோமேதகம், முத்து, வைடூரியம்.

பால: ஆக மொத்தம் எட்டுத்தானே சொன்னீர்கள்? இன்னொன்று...?

சுப்பிர: பவளம்.

பால: உம், மூவரும் சேர்ந்து கூறி விட்டீர்கள். சரி, இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்.



சிறிய வயதில் எடுக்கப்பட்ட ஒரு பெரிய தலைவரின் படம். யார் என்று..

மூவரும்: காந்தித் தாத்தா படம்.

பால: அடே, மூவரும் ஒரே குரலில் சரியாகச் சொல்லி விட்டீர்களே! ...நம் தேசத்தில் உள்ள மாநிலங்களிலேயே மிகப் பெரியது எது?

சுப்பிர: உத்தரப்பிரதேசம்.

பால: தவறு.

இராஜ: மத்தியப்பிரதேசம்தான் மிகப் பெரியது.

பால: இராஜலட்சுமி சொன்னதுதான் சரி... பெரும்பாலான தமிழ் மருந்துகளில் மூன்று பொருள்களைச் சேர்ப்பார்கள். அவற்றில் ஒன்று மிளகு. மற்றவை?

சுப்பிர: சுக்கு, மிளகு, திப்பிலி என்பார்களே!

பால: ஆமாம், அந்த மூன்றும்தான்... பூட்ஸ் போல வடிவம் உள்ள ஒரு நாடு இருக்கிறது. அது எந்த நாடு?

பத்ம: இத்தாலி.

பால: பத்மஜா, சரியாகச் சொல்லி விட்டாய்.
'கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தம் ஒன்று வருகுது'
என்று தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்?

சுப்பிர: நாமக்கல் கவிஞர்.

பால: சரி, அவருடைய முழுப் பெயர்?

சுப்பிர: நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை.

பால: அதுவும் சரி... நம் தமிழ் நாட்டின் தலைநகரம் சென்னை... 'சண்டிகர்' என்ற அழகான நகரம் இரண்டு மாநிலங்களுக்குத் தலைநகரமாயிருக்கிறது. அவை எந்த எந்த மாநிலங்கள் என்று கூற முடியுமா?

பத்ம: டில்லி, ஹரியானா.

பால: ஹரியானா என்பது சரி. ஆனால் டில்லி என்பது தவறு.

இராஜ: டில்லி இல்லை, பஞ்சாப்.

பால: ரொம்பக் கரெக்ட். இப்போது கோடைக்காலம். எல்லாப் பெட்டிக் கடைகளிலும் சோடாக் கலர்களாக இருக்கின்றன. இந்தச் சோடா பானத்தை முதல் முதலில் தயாரித்தவர் யார், தெரியுமா?

இராஜ: ஐசக் நியூட்டன்.

பால: இல்லை. பத்மஜா, சுப்பிரமணியம், உங்களால் கூற முடியுமா?

பத்ம, சுப்பிர: தெரியவில்லையே!

பால: சரி, நானே சொல்லிவிடுகிறேன். ஜோசப் பிரீஸ்ட்லி என்ற இங்கிலாந்துக்காரர்தான் முதன் முதலில் சோடாபானத்தைத்தயாரித்தவர்... முதல் முதலில் மோட்டார் கார்களைப் பெரும் அளவிலும், குறைந்த செலவிலும் தயாரித்தவர் யார்?

பத்ம: ஹென்றி ஃபோர்டு.

பால: பத்மஜா சொன்னது சரியான விடை. அந்த ஹென்றி ஃபோர்டு, 'ஃபோர்டு நிறுவனம்'(Ford Foundation) என்ற அறநிலையம் ஒன்றை ஏற்படுத்தினார். அந்த அறநிலைய உதவியுடன் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் நல்ல புத்தகங்களை வெளியிட, சென்னையிலே ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. அதன் பெயர் தெரியுமா?

பத்ம: எனக்குத் தெரியும். அந்த நிறுவனம்வெளியிட்ட 'பறக்கும் பாப்பா' என்ற புத்தகத்தை நான் படித்திருக்கிறேன். அதன் பெயர் 'தென்மொழிப் புத்தக நிறுவனம்'.

பால: ஆம். Southern Languages Book Trust என்பது அதன் ஆங்கிலப் பெயர்... கண்ணன் பிறந்து வளர்ந்த கோகுலமும், விளையாடித் திரிந்த பிருந்தா வனமும் எங்கே இருக்கின்றன?

சுப்பிர: [illegible]டியில்.
(மற்றவர்கள் சிரிக்கிறார்கள்.)

இராஜ: மதுராவில் இருக்கின்றன.

பால: சரியான விடை... உத்தரப் பிரதேசத்தில் யமுனை ஆற்றங்கரையில் உள்ளது 'மதுரா' என்ற நகரம். அதை 'வட மதுரை' என்றும் அழைப்பார்கள்.... தமிழ் டிக்ஷனரியை அதாவது, அகராதியை முதல் முதலில் தயாரித்தவர் யார் என்று தெரியுமா?

இராஜ: தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர்.

பால: இல்லை.

சுப்பிர: 'பரமார்த்த குரு' என்ற வேடிக்கைக் கதையை எழுதினாரே, அவர் பெயர்... தொண்டை வரை வந்து விட்டது.

பால: உம், சீக்கிரம் வாய்க்கு வரவழை.

சுப்பிர: இதோ வரவழைத்து விட்டேன். வீரமா முனிவர்.

பால: சுப்பிரமணியா, சரியாகச் சொன்னாய். இத்தாலி நாட்டைச் சேர்ந்த அவர் தயாரித்த சதுரகராதிதான், பிறகு வெளிவந்த தமிழ் அகராதிகளுக்கெல்லாம் முன்னோடி... இதுவரை உலகிலேயே மிகப் பெரிய பரிசான நோபல் பரிசைப் பெற்ற இந்தியர்கள் யார், யார்?

பத்ம: இரவீந்திரநாத தாகூர், சர் சி. வி. ராமன்.

பால: கரெக்ட்... பாம்புகளிலே சிலவற்றுக்கு விஷம் உண்டு. ஆனால், பல பாம்புகளுக்கு விஷம் இல்லை. விஷம் இல்லாத பாம்புகளில் நான்கைச் சொல்ல முடியுமா?

இராஜ: தண்ணீர்ப் பாம்பு, பச்சைப் பாம்பு....

சுப்பிர: கட்டுவிரியன்.

பால: ஐயோ, அது பொல்லாத விஷப் பாம்பு! நான் கேட்டது விஷம் இல்லாத பாம்புகளை. இராஜலட்சுமி இரண்டு பாம்புகளின் பெயர்களைச் சரியாகச் சொன்னாள். இன்னும் இரண்டு?

பத்ம: சாரைப் பாம்பு... மலைப்-பாம்பு.

பால: ரொம்பக் கரெக்ட்... புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு, அவரது பெற்றோர் வைத்த பெயர் என்ன?

சுப்பிர: கனக சுப்புரத்தினம்.

பால: சரியான விடை.... 'அம்பர்' என்ற வாசனைப் பொருள் எங்கிருந்து கிடைக்கிறது?

இராஜ: ஒருவித மரத்திலிருந்து.

பால: இல்லை.

சுப்பிர: பூக்களிலிருந்து.

பால: தவறு. பத்மஜா, உனக்குத் தெரியுமா?

பத்ம: தெரியவில்லை.

பால: நானே சொல்லி விடுகிறேன். திமிங்கிலத்தின் குடலிலிருந்துதான் அம்பர் எடுக்கப்படுகிறது... சரி, 'சுங்க வரி' என்கிறார்களே, அப்படியென்றால் என்ன?

இராஜ: வெளி நாடுகளிலிருந்து டி.வி., டிரான்சிஸ்டர், கடிகாரம், காமிரா— இப்படிச்சில பொருள்களைக் கொண்டு வரும்போது, அவற்றிற்கு வரி விதிக்கிறார்கள். அதற்குப் பெயர்தான் சுங்க வரி.

பால: இராஜலட்சுமி, நீ சொன்னது ஓரளவு சரிதான். ஆனால், வெளிநாட்டிலிருந்து நம் நாட்டில் இறக்குமதியாகும் பொருள்களுக்கு மட்டுமல்ல; நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கும் வரி விதிக்கிறார்கள். அதுவும் சுங்க வரிதான்... பெரிய கோயில்களில் 63 நாயன்மார்களின் திருவுருவங்களைப் பார்த்திருப்பீர்கள். அவர்களில் பெண்கள் யார் யார் தெரியுமா?

பத்ம: காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார்.

பால: இன்னும் ஒருவர் உண்டு. அவர் பெயர் இசை ஞானியார்... கடைசியாக ஒரு கேள்வி. சில ஆண்டுகளுக்கு முன்பு, ஓர் எழுத்தாளர் ஒரு கதை எழுதியிருந்தார். அதில் ஒரு பகுதியைக் கூறுகிறேன்:

''தீபாவளிக்கு முதல் நாள் இரவு செல்வம் மொட்டை மாடியில் நின்று கம்பி மத்தாப்புக் கொளுத்தினான். அதைப் பார்த்து அவன் தம்பி சேகரும், தங்கை கல்யாணியும் துள்ளிக் குதித்து மகிழ்ந்தார்கள். அப்போது வானத்திலேயிருந்த பூரணச் சந்திரனும் அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தது.''

இதில் ஒரு தவறு இருக்கிறது. அது என்ன தவறு?

இராஜ: தீபாவளி சமயத்திலே அமாவாசையாகத்தானே இருக்கும்? அப்போது சந்திரனைப் பார்க்க முடியுமா? அதுவும் பூரணச் சந்திரனை...?

எல்லாரும்: முடியாது, முடியாது. (சேர்ந்து சிரிக்கிறார்கள்.)

புகைப்படம்: **பி.எல். பழனியப்பன்**



காக்கைக் குஞ்சுக்குக் கல்யாணம்

காக்கைக் குஞ்சுக்குக் கல்யாணம்
காவடி ஆட்டம் தேரோட்டம்
நாலு கரண்டி நல்லெண்ணெய்
நாற்பத் தெட்டுத் தீபாவளி
வாரூர் போரூர் சுப்பையர்
வழியை விலக்கடி மீனாட்சி!



காரணம் என்ன?

கொழுக்கட்டை, கொழுக்கட்டை,
ஏன் வேகலே?
அடுப்பு எரியலே; நான் வேகலே.
அடுப்பே, அடுப்பே, ஏன் எரியலே?
மழை பெய்தது, நான் எரியலே.
மழையே, மழையே, ஏன் பெய்தாய்?
புல்லு வளர நான் பெய்தேன்.
புல்லே, புல்லே, ஏன் வளர்ந்தாய்?
மாடு தின்ன நான் வளர்ந்தேன்.
மாடே, மாடே, ஏன் தின்றாய்?
பாலு கறக்க நான் தின்றேன்.
பாலே, பாலே, நீ எதற்கு?
பாப்பா அழுதால் குடிப்பதற்கு.
பாப்பா, பாப்பா, ஏன் அழுதாய்?
எறும்பு கடிச்சுது; நான் அழுதேன்.
எறும்பே, எறும்பே, ஏன் கடிச்சாய்?
என் புற்றிலே கையை விட்டால்
நான் சும்மா இருப்பேனா?

மொட்டையும் மொட்டையும்

மொட்டையும் மொட்டையும்
சேர்ந்திச்சாம்.
முருங்கை மரத்திலே
ஏறிச்சாம்.
கட்டெறும்பு கடிச்சுதாம்.
'காள் காள்'னு கத்திச்சாம்.



பாடல்



தொந்தி மாமா


தொந்தி மாமா வந்தாராம்.
தொப்பியை மாட்டிக் கொண்டாராம்.

சாக்குப் பையை எடுத்தாராம்.
சந்தைக் கடைக்குப் போனாராம்.

சந்தைக் கடைக்குப் போனாராம்
சக்கரை மிட்டாய் வாங்கினாராம்

எல்லாருக்கும் கொடுத்தாராம்.
எழுதப் படிக்கச் சொன்னாராம்.

பாட்டுப் பாடச் சொன்னாராம்.
பரவாயில்லை என்றாராம்.



கோனார் நல்ல கோனாரு

கோனார் நல்ல கோனாரு.
குளத்தங் கரைக்குப் போனாரு.

குளத்தங் கரைக்குப் போனாரு.
குனிஞ்சு குனிஞ்சு பார்த்தாரு.

நண்டைப் பிடிச்சாரு.
நறுக்குன்னு கடிச்சாரு.

வீட்டுக்கு வந்தாரு.
வெட்கப்பட்டுச் செத்தாரு.

டப்பா டப்பா வீரப்பா

டப்பா டப்பா வீரப்பா,
எப்ப டாப்பா கல்யாணம்?
மாசம் பிறக்கட்டும்
மல்லிகைப் பூப் பூக்கட்டும்.



அண்டார்க்டிகா - அறிமுகம்

அண்டார்க்டிகாவில் தரையைப் பார்க்கவே முடியாது. எங்கு பார்த்தாலும் பனிக்கட்டிகளாகவே இருக்கும். கோடை காலத்தில்கூட, தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகவே காட்சியளிக்கும்.

ஒரு நாளில், அரை நாள் பகலாகவும், அரை நாள் இரவாகவும் நமக்கு இருக்கிறது. ஆனால், அங்கு ஆறு மாதம் பகல்; ஆறு மாதம் இரவாக இருக்கும். ஆறு மாதமும் சூரியன் வானத்தில் தொடர்ந்து தெரிந்துகொண்டே இருக்கும். அடுத்த ஆறு மாதம் சூரியனைக் காணவே முடியாது. ஒரே இரவுதான்!

அங்கு மனிதர்களோ மிருகங்களோ வாழ்வதில்லை. சிறு சிறு பூச்சிகளும், சில தாவரங்களுமே வாழ்ந்து வருகின்றன. ஆனாலும், அங்கே ஒரு பறவை, அந்தக் குளிரிலும் நிம்மதியாக வாழ்ந்து வருகிறது. அதன் பெயர் பெங்குவின்!

அண்டார்க்டிகா எங்கே உள்ளது? பூமியின் தென் துருவத்தைச் சுற்றியுள்ள நிலப் பகுதியைத்தான் 'அண்டார்க்டிகா' என்று அழைக்கிறார்கள்.

உறைபனி, கடுங்குளிர், பனிப் புயல் போன்ற பல தொல்லைகள் அங்கே இருந்தாலும், அவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல், சிலர் அங்கே சென்று வந்திருக்கிறார்கள். இப்போது, பல நாட்டு விஞ்ஞானிகள் அங்கே சென்று ஆராய்ச்சிகள் நடத்துகிறார்கள்.

அறிமுகப்படுத்திவிட்டோம். இனி, முழுநீளக் கதையைப் படித்துச் சிரியுங்கள்

மிருகங்களைப் பற்றிய பழமொழிகள் - முடிவு

சென்ற மே மாத இதழில், மிருகங்களைப் பற்றிய பழமொழிகளை எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தோம். மொத்தம் 716 பேர் இப்போட்டியில் கலந்து கொண்டார்கள். அவர்களில் 146 பேர் 100 பழமொழிகளுக்கு மேல் எழுதியிருந்தார்கள்!

சிலர், மிருகங்களைப் பற்றிய பழமொழிகளுடன், பறவைகள், புழு, பூச்சிகளைப் பற்றிய பழமொழிகளையும் சேர்த்து எழுதிவிட்டார்கள். வேறு சிலர், புதுமொழிகள் சிலவற்றை இடை இடையே புகுத்தியிருந்தார்கள். ஒருசிலர், ஒரே பழமொழியைத் திரும்பத் திரும்ப எழுதி அல்லது கொஞ்சம் மாற்றி எழுதி எண்ணிக்கையை அதிகப்படுத்திக் காட்டியிருந்தார்கள். எல்லாவற்றையும் கவனமாகப் பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட முடிவை அறிவிக்கிறோம்:

முதல் பரிசு: *(அனுப்பிய பழமொழிகளில் சரியானவை - 548)*

எஸ். மாதவன் *(204)*
சி. 3/26, எஃப், கைலாசபுரம்,
திருச்சி-14.

இரண்டாம் பரிசு: *(அனுப்பிய பழமொழிகளில் சரியானவை - 343)*

இரா. சத்தியநாராயணன் *(201)*
58, முத்தைய தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-86.

முதல் பரிசு பெற்ற எஸ். மாதவனுக்குத் தொடர்ந்து ஓராண்டுக்கும், இரண்டாவது பரிசு பெற்ற இரா. சத்தியநாராயணனுக்குத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கும் 'கோகுலம்' இதழ், அன்புப் பரிசாக அனுப்பி வைக்கப்பெறும்.

பறவைகளைப் பற்றிய பழமொழிகள்

மிருகங்களைப் பற்றிய பழமொழிகளைப் போலவே, பறவைகளைப் பற்றிய பழமொழிகளும் தமிழில் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை 31-7-83க்குள் எழுதி அனுப்புங்கள். யார் அதிகமாகவும், சரியாகவும் எழுதி அனுப்புகிறார்கள் என்று பார்ப்போம்.

—ஆசிரியர்

திருக்குறள் புதிர் - விடை

புதிர்–1

பீலிபெய் சாகாடும் அச்சுஇறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (475)

மயில் இறகுகள் மிகவும் மென்மையானவையே. ஆயினும், அவற்றை அளவுக்கு அதிகமாக ஒரு வண்டியில் ஏற்றினால், வண்டியின் அச்சு முறிந்துவிடும்.

புதிர்–2

ஒலித்தக்கால் என்னும் உவரி, எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் (763)

எலியான பகை திரண்டு கடல் போல ஒலித்தாலும் என்ன பயன்? எலியின் பகையான நாகப் பாம்பு பெருமூச்சு விட்டாலே, எலிகள் அழிந்துவிடும்!


இருவித ஒலிகள்

ராமு: நம் பள்ளியின் மணி ஓசை இரண்டு விதமாய் ஒலிக்கிறதே, உனக்குத் தெரியுமா?

சோமு: அதெப்படி?

ராமு: பள்ளி ஆரம்பிக்கும்போது கொடூரமாகவும், முடியும்போது மிகவும் இனிமையாகவும் இருக்கிறதல்லவா?

–ஜி. ஸ்ரீதர்





அட்டை வண்ணப்படம்: உத்ரா.



சார், தபால்

நல்ல வேளை! 'கேள்வி நேரம்' பகுதியை மே இதழில் காணாததால், அதை நிறுத்தி விட்டீர்களோ என்று பயந்தேன். சென்ற இதழில் அப்பகுதியைப் படித்து மகிழ்ந்தேன். மிகவும் பயனுள்ள அப்பகுதியை நிறுத்தி விடாதீர்கள், பிளீஸ்.

—எம். ராம்குமார், திருவனந்தபுரம்

புகைப்பட ஆல்பம் பகுதியில் வரும் படங்கள் மிகவும் நன்றாக இருக்கின்றன. அவற்றைத் தனியாக எடுத்து நான் ஒரு ஆல்பம் தயாரித்து வருகிறேன்.

—சி. சொர்ணலட்சுமி, திருச்சி

அமரர் கல்கி எங்களைப் போன்ற சிறுவர்களுக்கும் எழுதியிருக்கிறார்: மிகவும் அற்புதமாக எழுதியிருக்கிறார் என்பதை எண்ணி எண்ணி ஆனந்தப்படுகிறேன்.

—க. சொக்கு, மேலூர்

ஏப்ரல் 83 இதழில் தமிழ்த் தாத்தா பிறந்த இடம் 'சூரிய மூலை' என்றிருக்கிறது. ஆனால், அவர் பிறந்த இடம் 'உத்தமதானபுரம்' அல்லவா?

—பா. மோகன், (94) பொன்னேரி

(உத்தமதானபுரம்தான் அவரது சொந்த ஊர். ஆனால், அவர் பிறந்தது அவரது பாட்டியின் ஊராகிய 'சூரியமூலை' என்ற கிராமத்தில்தான். —ஆசிரியர்)

'விஞ்ஞான விளையாட்டு' விடுமுறையில் இருக்கும் எங்களுக்கு நல்ல பொழுது போக்கு. தொடர்ந்து வெளியிடுங்கள்.

—தி. செழியன், பணகுடி.

'இளமையில் இவர்கள்' பெரிய பெரிய தலைவர்களைப் பற்றியும், அறிஞர்களைப் பற்றியும் சுருக்கமாக, ஆனால் சுவையாகக் கூறுகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உதவும்.

—வி. வேதா, தஞ்சை-2

'பிருந்தாவனப் பகுதி' வர வரப் பிரமாதமான பகுதியாக இருக்கிறது. சிறுவர், சிறுமியரின் கற்பனை வளரவும், எழுதும் திறமை ஓங்கவும் மிக உதவியாக இருக்கும்'

—கே. கார்த்திகேயன், கரூர்

51 இராகங்களில் பாடும் சண்முகப்ரியாவுக்கு வாழ்த்துக்கள். எத்தியோப்பிய நாட்டுக் கதைகளில் ஏழையின் சபதம் பேஷ்! குப்புசாமி—அப்புசாமி ஜோர்!

—கு. மா. சுப்பாராஜ், குமாரபுரம்

இந்த மாதம் கல்கி விடுமுறை மலர்-83ல் வெளிவந்த கோகுலம் பக்கங்களின் இரண்டு பகுதிகளுமே அருமை!

—நா. ஸ்ரீராம் (1406), ஈரோடு

அமரர் கல்கியின் படக் கதை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஓவியர் விஜயாவின் படங்களும் பொருத்தமாயிருந்தன.

—ஜி.கே. விஜயமுத்து

திருவாழத்தான் அவர்கள் எழுதிய 'நிஜ நாடகம்' கதையைப் படித்து அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

—கோ. சரவணன்

என் வீட்டில் எல்லோருடைய கைகளிலும் தவழும்ஒரே ஒருபத்திரிகை'கோகுலம்' தான்.

—க. ஸ்ரீப்ரியா

காமராஜரின் தந்தையின் பெயர் குமாரசாமி. குருசாமி அல்ல.

—அ. ராமச்சந்திரன், சென்னை-90

(ஆம், குமாரசாமிதான். கட்டுரையாளரின் கையெழுத்துத் தெளிவாக இல்லாததால், அச்சிடும்போது இத்தவறு நேர்ந்து விட்டது.
வருந்துகிறோம். —ஆசிரியர்)

சித்திரக் கதை தித்திக்கிறது. விரைவில் தொடர்கதை வெளியிடுங்கள்.

—பி. ஜெயப்ரியா, கும்பகோணம்

எழுத்தாளரின் புகைப்படங்களை வெளியிட்டு, ஒரு புதுமையைத் தாங்கள் செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது. அந்தந்தச் சிறு கதையின் அருகிலே அந்த எழுத்தாளரின் படத்தை வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

—மேலூர் தாசன், ஈரோடு

'இருண்ட குகையில் இரண்டு சிறுவர்கள்' நெடுங்கதை என் சகோதரனுக்கு உதவியது. என் சகோதரன் ஊமையானவன். மிகவும் மனம் நொந்து போயிருந்த அவன், 'முருகன்' ஊமையாக இருந்தும் ஒரு கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்ததைப் படித்து, இப்போது உற்சாகமாக இருக்கிறான். பூதலூர் முத்து அவர்களுக்கு நன்றி.

—த. அருள்செல்வபாலன் (471)
செங்கல்பட்டு-2



கறுப்பன்

டாக்டர் பூவண்ணன்

கந்தன் அந்தக் தெருவுக்குப் புதியவன். நேற்றுத்தான் அவன் பெற்றோர் அந்தத் தெருவில் ஏழாம் எண் வீட்டுக்குக் குடி வந்தனர். தனி வீடு. சென்னை நகரத்தின் எல்லையைத் தொட்டு எழுந்த புதிய குடியிருப்புகளில் ஒன்றில்தான் அந்தத் தெருவும் வீடும் இருந்தன.

புதிய வீட்டின் வசதியும், அமைதியான சூழ்நிலையும் கந்தனுக்குப் பிடித்திருந்தன. பள்ளிக்கூடம்தான் சிறிது தொலைவில் இருந்தது. முன்பெல்லாம் பத்து மணிப் பள்ளிக் கூடத்துக்கு ஒன்பதரை மணிக்குப் புறப்பட்டால் போதும். புது வீட்டிலிருந்து ஒன்பது மணிக்கே புறப்பட்டால்தான் நேரத்தில் பள்ளியை அடையலாம். இதைத் தவிர, அவனுக்குக் குறைவேதும் தெரியவில்லை.

''கறுப்பா! கறுப்பா!''

எதிர் வீட்டிலிருந்து எழுந்த குரல் கந்தனின் காதைத் தொட்டது.

''யாரது கறுப்பன்? ரமேஷ், ராஜேஷ் என்றோ, சேரன், செழியன் என்றோ பேர்களை வைத்துக் கொள்ளும் இந்தக் காலத்தில், கறுப்பன் என்று வெட்கமில்லாமல் பேர் வைத்துக் கொண்ட ஆளைப் பார்க்க வேண்டும்'' என்று நினைத்த கந்தன், அறையை விட்டு வெளியே வந்து கவனித்தான். எதிர் வீட்டில் ஓர் அம்மாள் 'கறுப்பா கறுப்பா' என்று மீண்டும் அழைத்தபடி நின்று கொண்டிருந்தாள்.

சில விநாடிகளில் ஒரு நாய் 'லொள் லொள்' என்று குரைத்துக் கொண்டு வாலை ஆட்டிக் கொண்டு எங்கிருந்தோ ஓடி வந்தது. அந்த நாய் கறுப்பு நாய். அதைப் பார்த்த அம்மா, ''ஏண்டா கறுப்பா, உனக்குப் பசிக்கலையா? வாடா உள்ளே'' என்று பெற்ற மகனை அழைப்பதைப் போல் பிரியத்தோடு அழைத்தாள். அது, ''வருகிறேன்'' என்பது போல் ஒரு முறை குரைத்து விட்டு வீட்டுக்குள் சென்றது.

கந்தன் இந்தக் காட்சியைக் கண்டான். அவன் முகத்தில் வெறுப்பு தவழ்ந்தது. ''சே... கேவலம், ஒரு நாயைப் போய் இப்படிக் கொஞ்சிக் கூப்பிடறாங்களே'' என்று நினைத்தபடி வீட்டுக்குள் போய் விட்டான். கந்தனுக்கு நாய், பூனை இவையெல்லாம் பிடிக்காது. அவற்றைக் கண்டால் விரட்டுவான். இது அவன் பிறவிக் குணம்.

அன்று மாலை!

கந்தன் வீட்டுக்கு வெளியே வந்தான். வீட்டுக் காம்பவுண்டின் மீது கறுப்பன் தன் சிவப்பு நாக்கைத்தொங்க விட்டவாறு படுத்திருப்பதைப் பார்த்தான். 'என் வீட்டுச் சுவரின் மீது என்ன திமிரோடு இந்த நாய் உட்கார்ந்திருக்கிறது' என்று நினைத்தபோது கந்தனின் கோபம் குன்றாய் உயர்ந்தது. ஒரு கல் கிடைத்தது. கந்தன் கல்லை எடுத்தான். குறி பார்த்து எறிந்தான். கல் பறந்து சென்று கறுப்பனைத் தாக்க, அது கத்திக் கொண்டே தெருவில் குதித்து ஓடியது. கந்தன் ஏதோ ஒரு சாதனையைச் செய்த திருப்தியோடு வீட்டுக்குள் சென்றான்.

அது முதல் கறுப்பனைக் கண்டால் கந்தன் கல்லைத் தேடுவான். அவனைக் கண்டவுடனேகறுப்பன்ஓட்டமெடுக்கும் அந்த அளவுக்குக் கந்தன் செயல்பட்டான். 'கந்தனைக் கண்டால் கறுப்பனைக் காணோம்' என்று புது மொழி வழங்கும் அளவு அவனது புகழ் ஓங்கி விட்டது.

ஒரு நாள் இரவு. மணி ஏழு இருக்கும்.

கந்தனின் அம்மா, ''கந்தா, சீக்கிரம் கடைக்குப் போய் ஒரு கால் கிலோ கடலை எண்ணெய் வாங்கி வா. ராத்திரி சாப்பாட்டுக்குத் தொட்டுக் கொள்ள ஒன்றுமில்லை. எண்ணெய் வந்தால் அப்பளம் பொரிக்கலாம்'' என்றபடி அவனிடம் ஐம்பது ரூபாய் நோட்டையும், எவர்சில்வர் தூக்கு ஒன்றையும் கொடுத்தாள்.

கந்தன் இரண்டையும் வாங்கிக் கொண்டு, ''ஐம்பது ரூபாய்க்குச் சில்லறை இல்லை யென்றால் என்னம்மா செய்வது? ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டு இல்லையாம்மா?'' என்று கேட்டான்.

''இந்த ஐம்பது ரூபாயைத் தவிர வேறு நோட்டே இல்லை. மளிகைக் கடையில் சில்லறை தருவார்கள். பத்திரமாக வாங்கிக் கொண்டு வா'' என்றாள் அம்மா.

கந்தன் வீட்டை விட்டு வெளியே வந்தான். வீதி இருண்டிருந்தது. அது புதிய குடியிருப்பு. அதனால் தெரு விளக்கு வரவில்லை. தெருவிலிருந்து வீடுகளில் பெரும்பாலானவற்றில் முன் பக்கம் விளக்கு எரியவில்லை. வீட்டுக்குள்எரிந்தவிளக்குகளின் வெளிச்சம் 'போனால் போகிறது' என்று, வீதியையும் எட்டிப் பார்த்தது. அந்த மங்கல் ஒளியில் கந்தன் நடந்தான். தெரு முனையை அடைந்தான். அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி நடந்தான்.



அந்தத் தெருவில் இன்னும் வீடுகள் எழவில்லை. அதனால் இருபுறமும் வேலிகாத்தான் செடிகள் புதர்களாகத் தழைத்திருந்தன. அங்கே துளி வெளிச்சமும் இல்லை.

கந்தன் அந்த இருட்டில் நடந்து பழக்கப்பட்டவன். அதனால் நடந்தான். அந்தத் தெருவின் முனையில் பஸ் செல்லும் பெரிய சாலை. அங்கே வரிசையாக ஐந்து கடைகள் இருந்தன.

அவற்றில் ஒன்று மளிகைக் கடை. கந்தன் கடையில் எண்ணெய் வாங்கிக் கொண்டான். கால் கிலோ எண்ணெய் விலை மூன்று ரூபாய் போக, மீதி நாற்பத்தேழு ரூபாயை வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். குடியிருப்பின் இருண்ட தெருவில் நுழைந்தான்.

கந்தன் நாற்பத்தி ஏழு ரூபாயை எண்ணிப் பார்த்துச் சட்டையில் போட்டுக்கொண்டதைப் பக்கத்தில் டீக் கடையில் டீ குடித்துக் கொண்டிருந்த ஒரு தடியன் பார்த்துக் கொண்டே இருந்தான். கந்தன் புறப்பட்டதும், பாதி டீயைக் குடிக்காமல் அப்படியே வைத்துவிட்டு, டீக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு அவன் கந்தனைப் பின்தொடர்ந்தான்.

இருண்ட தெருவில் நடந்து கொண்டிருந்த கந்தனுக்கு முன்னே யாரும் செல்லவில்லை. கந்தன் தலையைத் திருப்பிப் பின்னால் பார்த்தான். 'அப்பாடா. பின்னாடி யாரோ ஒருவர் வருகிறாரே!' என்று திருப்திப்பட்டவனாக நடந்தான். பின்னே வந்து கொண்டிருந்த தடியனின் நோக்கம் தெரிந்திருந்தால் கந்தன் திருப்தியடைந்திருக்க மாட்டான்; திடுக்கிட்டிருப்பான். அங்கிருந்து ஓட்டமாய் ஓடியிருப்பான்.

இன்னும் கொஞ்ச தூரம் போனால் கந்தனின் தெரு வந்து விடும். அதற்குள் தடியன் வேகமாக நடந்து வந்து கந்தனை அடைந்தான். கந்தனைக் கடந்து சென்று அவன் முன்னே வழி மறித்து நின்றான். ''டேய், பையா, பாக்கெட்டில் வைத்த பணத்தை எடு!'' என்று கரகரத்த குரலில் கேட்டான்.

அப்போதுதான் வந்தவன் வழித் துணையல்ல; வழிப்பறி செய்பவன் என்பது கந்தனுக்குப் புரிந்தது. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த கந்தனின் தந்தைக்கு நாற்பத்தேழு ரூபாய் பெரிய தொகை. அதை இவனிடம் கொடுக்கக் கூடாது என்று நினைத்த கந்தன், ஓர் அடி பின் வாங்கினான்.

''என்னடா, ஓடிவிடலாம்னு பார்க்கறையா?'' என்றபடி ஒரு கையால் அந்தத் தடியன் கந்தனின் தோளைப் பற்றிக் கொண்டு, ''அடி உதை வாங்கறதுக்கு முன்னே எடு பணத்தை.'' என்று மிரட்டினான்.

''முடியாது! நான் பணம் தர மாட்டேன்'' என்று அச்சத்தோடு கத்தினான், கந்தன்.

''தரமாட்டே?'' என்று உறுமியபடி தடியன், ''நீ தராவிட்டால் என்ன, நானே எடுத்துக்கறேன்'' என்று கையை நீட்டினான். உடனே கந்தன் சட்டைப் பையைக் கையால் பற்றிக் கொண்டு, ''முடியாது! என் டணத்தைத் தர மாட்டேன்'' என்று கத்தினான். கோபம் கொண்ட தடியன், ''தர மாட்டையா'' என்றபடி கந்தனின் கன்னத்தில் ஓர் அறை விட்டான்.

''அம்மா....'' — கந்தனின் அலறல் அந்தத் தெருவின் அமைதியைக் குலைத்தது. ஆனாலும் அதைக் கேட்டு உதவிக்கு வர, அந்தத் தெருவில் யாரும் இல்லை.

தடியன் இன்னொரு அடி கொடுக்கக் கையை ஓங்கினான்.

''என்னை அடிக்காதே! அடிக்காதே!'' கந்தன் கத்தினான்.

தடியனின் கை கந்தனின் கன்னத்தை நோக்கி வேகமாக இறங்கியது. அந்த அறை விழுந்திருந்தால் கந்தனின் பற்களில் இரண்டு உதிர்ந்திருக்கும். அதற்குள் 'லொள்... லொள்' என்ற ' குரைப்போடு பாய்ந்த

தாயார் தினம்

ஹங்கேரி நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மேமாதம் முதல்ஞாயிற்றுக் கிழமையை எல்லா வயதுக் குழந்தைகளும் தங்களது தாயார் தினமாகக் கொண்டாடிக் களிக்கின்றனர்.

எஸ். விஜயா சீனிவாசன்



ஒரு நாய் தடியனின் கையைக் கவ்விக் கொண்டது.

இப்போது தடியன் அலறினன்.

''ஐயோ, அம்மா'' என்று அலறிய படி கையை உதறினன். கையை விட்டு விட்ட நாய் அவன் காலேக் கவ்வியது. ''ஐயையோ, காலு போச்சே!'' என்று அலறிய தடியன், காலே உதறி விடுவித்துக் கொண்டு அங்கிருந்து ஓடி னன். நாய், 'லொள்' 'லொள்' சத்தத் தோடு தடியனே மேலும் பின் தொடர்ந்து ஓடியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்தச் செயலேக் கண்டு கந்தன் களிப்பும் திகைப்பும் அடைந்தான். பணத்தைப் பறிகொடுக்காததால் ஏற் பட்டது, களிப்பு! எதிர்பாராத நேரத் தில் ஒரு நாய் தன்னைக் காப்பாற்றிய தால் ஏற்பட்டது திகைப்பு!

தடியனும், நாயும் ஓடிய திசையைப் பார்த்துக்கொண்டே கந்தன் நின்ருன்.

தடியனேச் சாலே வரை விரட்டி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந் தது நாய்.

கந்தன் அந்த நாயைப் பார்த்தான். அது கறுப்பன் என்பதைப் புரிந்து கொண்டான்.

நாய் அவனே நெருங்காமல் சற்றுத் தூரத்திலேயே நின்றது.

''ஓ! நான் அதை வெறுப்பவன் என் பதால் விலகி நிற்கிறது போலும்'' என்று எண்ணிய கந்தன், ''கறுப்பா'' என்று பாசத்தோடு அழைத்தான். உடனே கறுப்பன் வாலே ஆட்டிக் கொண்டு கந்தனின் அருகே வந்தது.

''கறுப்பா, நீ நல்லவன்! உன்னைக் கல்லால் அடிப்பவனேயும் காப்பாற்றும் கருணை உள்ளவன். இனிமேல் நீ என் நண்பன். நான் உன் நண்பன்'' என்று கூறியவாறு அதைத் தடவிக் கொடுத் தான் கந்தன்.

வாலேக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா:

—பாரதியார்

கோகுலம் சிறுவர் சங்க விழா: கோணுபட்டு அக்ரஹாரத்திலுள்ள கோகுலம் சிறுவர் சங்கம் 3—4—83ல் குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நிகழ்ச்சியை நடத்தியது. அண்ணுமலேப் பல்கலேக் கழகப் பேராசிரியர் மு. அண்ணுமலே தலேமையில் கவிஞர்கள் ஜோசப் ஸ்டாலின்,பால நடராஜன் ஆகியோர்குழந்தைகளுக்குக் கதை சொல்லி மகிழ்வித்தார்கள்.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

433. ர. சீனுவாசன், 30-டி, டைவர்ஷன் ரோடு, போளூர்-606803
434. எல். சங்கர், 14-ஏ, வசந்தராயப்பிள்ளை, தோண்டார் வீதி, திருச்சி-2
435. A.V. Amudavalli, D/o. A.P. Viswanathan, Sri Sai Baba Temple, Picket, Secunderabad-500 003
436. க. சங்கர், 103, என். ஜி. ஜி. ஓ. நகர், செங்கல்பட்டு-1
437. என். ஆர். கிருஷ்ணா, 193, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-5
438. வி. கணேஷ் நாராயணன், 286, ஜ. எஸ். ஐ. ஹாஸ்பிடல் ரோடு, சங்கர்நகர் அஞ்சல் -627357
439. ம. சுரேஷ்குமார், 1/86-எப், காமராஜ் சாலை, பாண்டிச்சேரி-605011
440. ஜி. கிருஷ்ணன், 68, கும்பேஸ்வரன் தெற்குத் தெரு, கும்பகோணம்-1
441. இரா. விஷ்ணுப்ரியா, 20, டி.கே. எம். காலேஜ் ரோடு, சங்கரன்பாளையம், வேலூர்-632001
442. எல். குருஷங்கர், 47, தாணியூர் சைல்யா தெரு, கொரநாடு, மயிலாடுதுறை
443. வி. ராமநாதன், 6-ஏ, டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சி-2
444. ரா. பாலபத்ரிநாத், 121, பெரிய கடை வீதி, பழனி
445. Sangeetha G. Bhat, D/o. T. Gopal Bhat, M. No. 134/2, Mahajan Galli, Gokak-591307 (Karnataka)
446. பி. டி. ஜெகதீசன், 1/193-ஏ, பிள்ளையார் கோயில் தெரு, துருகம் கிராமம், ஒண்ணுபுரம் அஞ்சல், வ. ஆ. மாவட்டம்
447. அ. கோகுல ஆனந்த், தென்றலகம், பூலாம்பட்டி-637107, சேலம் மாவட்டம்
448. G. REVATHI, C/o. V. GOVINDAN, 213, Sarat Bose Road, Calcutta-700029
449. சு. சுப்பிரமணி, 26, கிருஷ்ணன் கோயில் மேற்கு ரத வீதி, நாகர்கோவில்-1
450. க. உஷா, 10/2741, பூக்கார மேரித் தெரு, தஞ்சாவூர்-613001
451. க.செல்லம்மாள், 7, இராஜ அக்ரகாரம், இராஜ கோபாலபுரம், குத்தாலம்-609801
452. R. Sai Prakash, T.C. 34/830, Annai Kottil St., Fort, Trivandrum-23
453. ஆர். கே. ஸ்வர்ணா, 48, லேக் வ்யூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை-33
454. என். பத்மநாப ராகவன், 20, கே. கடைமாடன் கோவில் தெரு, திருநெல்வேலி-6
455. கே. முரளி, 80/9, ஐ. சி. எப். கிழக்குக் காலனி, சென்னை-38
456. என். மணிவண்ணன், 17, எத்திராஜ் தெரு, ராஜாஜி நகர், பல்லாவரம், சென்னை-43
457. க. செந்தில் ஆறுமுகம், 33, மு. ந. ப. 2வது தெற்குத் தெரு, திருநெல்வேலி, பேட்டை-627004.
458. த. பாக்கியலட்சுமி, C/o. தெ. தமிழ்க்குமரன், பணகுடி-629109
459. தி. கு. குமரன், 7-பி, சோழிய செட்டித் தெரு, தெற்கு வாசல், மதுரை-1
460. டி. என். சித்ரா, C/o. டி.டி. என். ராகவன், மானேஜர், கனரா பாங்க், கொம்பை-626522, மதுரை மாவட்டம்
461. ஜெ. மாதவன், S/o. ஜி. ஜெயராமன், ஆசிரியர், உமையாள்புரம்-636119
462. ஜி. ராஜவேல், 128, ராஜவீதி, காஞ்சிபுரம்
463. க. இளவரசு, S/o கனகசபை, சுப்பிரமணிய கோவில் தெரு, புதுப்பாளையம்-606705
464. சாய். வெங்கடேஷ், 11, காங்கேயநல்லூர் ரோடு, காந்திநகர், வேலூர்-632006
465. டி. எ. ராமநாதன், பழனி ஆண்டவர் இல்லம், கீழ புத்தேரி, நாகர்கோவில்-1
466. கோ. ரகுநாதன், 13, காளி அம்மன் கோயில் தெரு, முதல் வீதி, கிருஷ்ணாபுரம், ஆம்பூர், வ.ஆ. மாவட்டம்
467. பா. தரணிதரன், 5/ஏ, புது கார்கானாத் தெரு, திருவண்ணாமலை
468. ஜெ. முத்துக்குமார், 411, செங்கப்பா பெரிய தெரு, இராஜபாளையம்-626117
469. க. சே. வித்யா, 6, முத்துவேலப்ப வீதி, ஈரோடு
470. மு. ஆவிர்சி, 27, வடக்கு மாசி வீதி, மதுரை
471. என். சங்கரசுப்பிரமணியன், 5, இளாவடி விநாயகர் கோவில் தெரு, சங்கரன்கோவில்-627756
472. மு. வெங்கடாசலமூர்த்தி, 11-பி, பள்ளிக்கூட வீதி, கணியூர்-638203
473. தி. பாலசந்தர், 8, தாண்டவராயன் முதலி தெரு, சென்னை-7
474. இரா. சுந்தரேசன், 1/11, எல். ஐ. சி. குடியிருப்பு, க. க. நகர், சென்னை-78
475. செ. குணாளன், 38-இ/2, முத்துராஜபுரம், குளித்தலை-639104
476. ரேணுகாதேவி, த/பெ. பொ. முருகேசன், அக்ரகாரம், பள்ளிபாளையம்-ரோடு-8
477. என். மகாலட்சுமி, 3, திரௌபதியம்மன் கோவில் தெரு, குமாரகுப்பம், வளவனூர் 605108
478. இ. ஸ்ரீராம், 427, கீழ 3ம் வீதி, புதுக்கோட்டை
479. என். செந்தில், 1-10, வடக்குத் தெரு, சிக்கல்-611108
480. க. இரவிசங்கர், 48, ப. அ. லெ. தெரு, காரைக்குடி-1
481. ஆர். பவானி, 5, ஜெகநாதன் தெரு, ராமவர்மபுரம், நாகர்கோவில்-1

482. ஆர். சத்தியபாமா, 10, சி. என். வில்லேஜ், திருநெல்வேலி ஜங்ஷன்
483. இ. ராஜராஜேஸ்வரி, 106, அயல் நாயக்கர் தெரு, தூத்துக்குடி-1
484. ஜி. வேளாங்கண்ணி மரிய கிறிஸ்டோபர், D/o நோசாலி கணேசன், ரெட்டியார்தெரு, கல்லக்குடி
485. சி. மீனாட்சிசுந்தரம், 52, இ. மில்ஸ் காலனி, கப்பலூர், திருமங்கலம், மதுரை மாவ.
486. க. க. இரமணு, விவேகானந்தா கல்லூரி, திவேடகம் மேற்கு-624217
487. என். வி. வினித்குமார், S/o என்.பி. வல்சலன், ஹெல்த் இன்ஸ்பெக்டர், சாயல்குடி-626120.
488. கோ. ஷீலா, D/o அ. கோவிந்தராஜன், இளநிலை பொறியாளர், மின்நிலையம்-5 நீலகிரி-643280.
489. ர. ரேவதி, 98, காமராஜ் ரோடு, வரதராஜபுரம், கோவை-641015
490. ஏ. குணசேகரன், 32, பாலசுந்தரம் வீதி, கிருஷ்ணராயபுரம், கோவை-6
491. ஆர். சவுந்தரராஜன், 42, காமராஜ் தெரு, நெராவி-609604
492. ஏ. பி. பழனிசாமி, சு-13, காவலர் குடியிருப்பு, அவிநாசி ரோடு, உப்பிலிபாளையம்-641018
493. கே. கவிதா, 1001, திருச்சி ரோடு, சிங்காநல்லூர், கோவை-5
494. கே. ஸ்ரீதர், 172, ஏழாவது தெரு, காந்திபுரம், கோவை-12
495. இ. பார்த்தசாரதி, 4-சி, லட்சுமிபுரம், 5வது வீதி, பீளமேடு, கோவை-4
496. மு. ராஜமுருகன், கே.2, அவுளிங் போர்டு, சேலம்-8
497. பி. அண்ணல், 99, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1
498. ஆர். கணேசன், 5/4,எ, பெருமாள் கோவில் தெரு, போடிநாயக்கனூர்-626513
499. எஸ். தெய்வானை, 65, பழைய கீழ் மதுரை, ஸ்டேஷன் ரோடு, மதுரை-9
500. ஆர். ரவிக்குமார், 23, 5வது குறுக்குத் தெரு, செங்குந்தபுரம், கரூர்-639002.
501. அ. பி. குமார் ராஜசேகர், 1482, குதிரைக்கட்டித் தெரு, கரந்தை, தஞ்சை-613002
502. ஏ. அன்பு செல்வன், 29/33, நாடார் வீதி, கோவை
503. அ. கணேசன், எட்டாம்படி, 'இ' பிரிவு, காந்தி நிகேதன் மேல்நிலைப் பள்ளி, தே. கல்லுப்பட்டி-626702
504. வீரால. எஸ். சுஜாதநன், த/பெ. ஜீ. சுந்தரராஜன், வாழைத்தோட்ட வலசு, கஸ்தூரிபா கிராமம்-638114
505. ஆ. ராஜசிம்மன், 63/1, வீரேஸ்வரன் கோவில் தெரு, வடகரை, பெரியகுளம்626501
506. ஷாநவாஸ், 8/16, ஜெ. என். பாளையம், தொப்பம்பட்டி அஞ்சல், கோவை-641017
507. தி. இரமேஷ், C/o. வி. தீர்த்தகிரி, கன்னிகைப்பேர் அஞ்சல், 601104
508. கே. முத்துசேரன், 7, கண்ணப்ப ஆசாரி இல்லம், யாதவர் தெரு, அச்சரப்பாக்கம்-603301
509. சி. ரமேஷ், 21, வடக்குக் கோட்டை வீதி, விருத்தாசலம்-606001
510. ஜெ. சங்கரநாராயணன், பிளாட் 52, லட்சுமி நகர், சென்னை-44
511. எஸ். ஹேமமாலினி, 20, சண்முகம் பிள்ளை வீதி, செக்காலை, காரைக்குடி-2
512. டி. ஸ்ரீவித்யா, 187, கிழக்கு உத்தர வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி-6
513. எஸ். அனந்தகிருஷ்ணன், 22, ராமகவுண்டு தெரு, செய்யாறு-604407
514. இ. கே. ரங்கராஜன், 41, பாரதி நகர் மெயின் ரோடு, ஜமீன் பல்லாவரம்-600043
515. டி. ஆர். சீதாராமன், C/o. வே. இராமசுப்பிரமணியன், தேர்முட்டிச் சந்து, கீழ் ஆண்டார் தெரு, திருச்சி-2
516. அ. அருட்செல்வி, மூன்றாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி, தவசி604401
517. எஸ். பிரவீண் குமார், 5, பெருமாள் கோவில் சந்நிதி தெரு, திண்டிவனம்
518. எம். பி. குருராசன், த/பெ. ஆர். பாண்டுரங்கன், என். தட்டக்கல், நாகரசம்பட்டி-635204
519. கே. சுரேஷ், 65, காரணீஸ்வரர் கோவில் தெரு, சென்னை-4
520. எம். நிர்மலா, 9, செட்டி தெரு, சின்னகாஞ்சிபுரம்-631503
521. ஆர். மோகன்ராஜ், 81, வடக்கு வீதி, கிளையூர்-605753
522. ஆர். செந்தில்குமார், 18, மகேந்திர பல்லவன் தெரு, மாமல்லன் நகர், காஞ்சிபுரம்-
523. ரா. விஜயராகவன், 6, 4வது தெரு, சீனிவாச நகர், திருவானைக்காவல், திருச்சி-5
524. எஸ். கமலக்கண்ணன், 36, கிழக்கு மாட வீதி, திருவான்மியூர், சென்னை-41
525. பி. மணிகண்டன், 17/11, சொக்கன் செட்டி தெரு, திருமலாபுரம், போடிநாயக்கனூர்-626513
526. ஆர். ரவி, 16-பி, சொலவடி தெரு, திண்டுக்கல்-1
527. எஸ். ஏ. லெட்சுமி, 26, கிழப்பாளையம், தஞ்சை ரோடு, பட்டுக்கோட்டை.
528. மு. தமிழ் செல்வம், த/பெ. மா. முத்துச்சாமி, காளிபாளையம்-639114
529. ஆர். சத்தியசண்முகம், 73, சிவா தெரு, திருநெல்வேலி-6
530. கே.பி. சுப்பிரமணியம், 5,இ.P.F குவார்ட்டர்ஸ், டாக்டர் திருமூர்த்தி நகர், சென்னை 34
531. கோ. புனிதவதி, 8, இரமணபுரம், மேட்டுப்பாளையம் அஞ்சல், பாண்டிச்சேரி 605001
532. R. APARNA, 16B Southern Avenue, Calcutta-700026

(இன்னும் வரும்)

விருது பெற்ற விமல்



இந்த ஆண்டு மாஸ்டர் விமலுக்கு, மத்திய அரசாங்கம் குழந்தை நட்சத்திரத்துக்கான விருதினை வழங்கியிருக்கிறது. 'கோகுலம்' குழந்தைகளின் சார்பாக விமலுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு, அவனுடன் சிறிதுநேரம் உரையாட, சிறுவன் ரகுராம், சிறுமி கிரிஜா இரண்டு பேரையும் அழைத்துக்கொண்டு போனோம். அவர்கள் பேசியதன் தொகுப்பு இதோ:

நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் ஒரு சிறிய வீடு. ரகுராம், கிரிஜா இரண்டு பேரையும் அழைத்துச் சென்றபோது, விமலின் அம்மா சிரித்த முகத்துடன் வரவேற்று, உட்காரச் சொன்னார். ''விமல், விமல்'' என்று குரல் கொடுத்ததும், வெளியில் விளையாடிக் கொண்டிருந்த 6 வயது விமல் வீட்டுக்கு வந்தான்.

ரகுராமும், கிரிஜாவும் 'ஹலோ விமல்! கன்கராஜுலேஷன்ஸ்'' என்றதும், ''தேங்க்யூ'' சொல்லிக்கொண்டே இருவர் கைகளையும் பிடித்து வீட்டினுள் அழைத்துக் கொண்டு போய், கட்டில் மீது உட்காரச் சொல்லிவிட்டு, இரண்டு பேருக்கும் மத்தியில் தானும் உட்கார்ந்தான்.


இரண்டு பேரிடமும், ''உங்கள் பெயரென்ன?'' என்று கேட்டான். ''ரகுராம், கிரிஜா'' என்று அறிமுகம் முடிந்ததும், ரகுராம், 'விமல், உனக்கு ஏதோ ஒரு மலையாளப் படத்தில் நடித்ததற்காகத்தானே அவார்டு கிடைத்திருக்கிறது?'' என்றான். விமல் ''ஆமாம்... அந்தப் படத்தின் பெயர் ஆருடம்'' என்று பதில் சொன்னான்.

இதற்குள் விமல் எழுந்து போய், இரும்பு பீரோவைத் திறந்து ஒரு

டப்பாவிலிருந்து கை நிறைய சாக்லெட்டுகளை அள்ளிக்கொண்டு வந்து எல்லாரிடமும் தந்தான்.

விமலின் அம்மா ஜூஸ் எடுத்துக் கொண்டு வர, விமல், 'நான்தான் கொடுப்பேன்' என்று சொல்லியபடி கிளாஸ்களை வாங்கி ஆளுக்கு ஒன்றாய்க் கொடுத்துவிட்டுத் தானும் ஜூஸ் உறிஞ்சலானான்.

விமலின் அம்மா சொன்னார்: "ஆருடம் மலையாளப் படத்தின் கதை ஒரு குழந்தையைச் சுற்றிப் பின்னப்பட்டது. அந்தக் குழந்தைப் பாத்திரத்தில்தான் விமல் நடித்தான். அதில் சிறப்பாக நடித்ததற்குத்தான் இப்போது அவார்டு கொடுத்திருக்கிறார்கள்."



கிரிஜா, விமலிடம், "நீ எந்தக் கிளாஸ் படிக்கிறாய்?" என்று கேட்க, விமல் சொன்னான். "ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்டிலிருந்து செகண்ட் போகிறேன்".

உடனே ரகுராம் "எந்த ஸ்கூல்?" என்று கேட்க, விமல் "வெங்கடசுப்பாராவ் ஸ்கூல், தி. நகர்" என்றான்.


"நீ ஷூட்டிங் போனால் ஸ்கூலுக்கு லீவு போட்டு விடுவியா?"

"ஆமாம். அப்புறம் வந்து எல்லாவற்றையும் படித்து விடுவேன்."

"நீ என்னென்ன படத்துல எல்லாம் நடிச்சிருக்கே?"

'தமிழ், தெலுங்கு, மலையாளம் எல்லாப் படங்களிலேயும் நடிச்சிருக்கேன். ஹிந்திப் படத்திலே கூட நடிக்கிறேன்"

ரகுராம், 'அம்மா' படத்துல நீதானே நடிச்சிருக்கே!" என்றதும், "ஆமாம்... ஆமாம்... அந்தப் படத்துல நான் நடிச்சபோது, ரொம்ப ஜாலியா இருந்தது. சரிதா ஆண்டி எப்பப் பாரு, என்னைக் கூப்பிட்டு, மடியில உட்கார வெச்சுக்கிட்டுக் கொஞ்சுவாங்க" என்று விமல் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அவன் அம்மா சொன்னார்: "நடிக்கும்போது டைரக்டர்




ஜெயிப்பதன் காரணம்?

"ஒவ்வொரு முறையும் ஓட்டப் பந்தயத்திலே நீயே ஜெயித்து விடுகிறாயே! அது எப்படி?"

"அதுவா? பக்கத்து வீட்டு வேட்டை நாய் என்னைத் துரத்துவதாக நினைத்துக் கொண்டு ஒவ்வொரு பந்தயத்திலும் ஓடுவேன்."


—புத்தூர் செல்வம்

"கிரிக்கெட் காமண்டரி கேட்கணும்னு இதுக்கு பாட்டரி வீக்கா இருக்கு! ப்ளீஸ்! உங்க ஸ்டெதாஸ்கோப்பை இரவல் தாங்க, டாக்டர்!"



சார் எப்படி நடிக்கணும்னு சொல்கிறாரோ அதை நன்றாகக் கவனித்துக் கொள்வான். நடிக்கச் சொன்னதும், அப்படியே நடித்து விடுவான். பல சமயங்களில் டைரக்டர்கள் எதிர்பார்க்கறதுக்கும் மேலே நடிச்சுடுவான். செட்ல எல்லாருமே 'விமல் வெல்டன் விமல். வெரி நைஸ் பாய்' என்று இவனைப் பாராட்ட ஆரம்பிச்சிடுவாங்க.'

சக்கரம் கண்டுபிடித்த விஞ்ஞானி



சக்கரத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்? அவர் பெயர் என்ன? பிறந்த ஊர் எது? வாழ்ந்த காலம் எது? — எதுவுமே சரியாகத் தெரியவில்லை.

ஆயினும் சக்கரம் எவ்வளவு தூரம் அன்றாட வாழ்க்கையில் உதவுகிறது!

கட்டை வண்டி, சைக்கிள், மோட்டார் கார், ரயில் வண்டி, ஸ்கூட்டர், ஆட்டோ ரிக்ஷா எல்லாமே சக்கரம் இல்லாதபோனால் நகரக்கூட முடியாதே!

ஆகாய விமானத்திற்குக் கூட மேலே பறப்பதற்கு முன்னும், கீழே இறங்கும்போதும் சக்கரங்கள் உதவுகின்றன.

கடிகாரம், ஜெனரேட்டர், இன்னும் பல இயந்திரங்களால் சக்கரம் இல்லாதபோனால் இயங்க முடியுமா?

ஆயினும் இந்தச் சக்கரத்தைக் கண்டுபிடித்தவர் யார் என்று தெரியவில்லையே!

''விமல், நீ முதன் முதலிலே எந்தப் படத்துலே நடிச்சே?''

''வருவான் வடிவேலன். அதுலே நடிச்சது எனக்கே தெரியாது. நான் எட்டு மாதக் குழந்தையாம். மம்மி சொல்லுவாங்க.''

''அப்புறம்?''

'' 'பூந்தளிர்' சினிமாவிலே நடிச்சேன்.''

''... நீதானா பூந்தளிர்லே நடிச்ச குழந்தை, டி. வியிலே பூந்தளிர் சினிமா காட்டினபோது முழு சினிமாவும் நான் பார்த்தேன். எனக்கு உன்னை அந்தப் படத்திலே ரொம்பப் பிடிச்சுது. நீ ஒரு சீன்ல உன் அம்மாவைத் தேடிண்டு ஒரு பாட்டுப் பாடிக்கிட்டே போவாயே அந்த சீன்ல நான் அழுதுட்டேன்'' என்றாள் கிரிஜா.

விமலின் அம்மா, ''அந்தப் படத்தில் சுஜாதாவுடைய சிலை ஒன்றிருக்கும். அதைப் பார்த்ததும் 'அம்மா... அம்மா...'ன்னு கத்தியபடி ஓடிப்போய் அந்தச் சிலையைக் கட்டிக் கொண்டு கதறி அழ வேண்டிய சீன். அந்த சீனை ஷூட் பண்ணினப்போ, இவன் மிக தத்ரூபமாக நடிச்சதைப் பார்த்துட்டு ஷூட்டிங் பார்க்க வந்திருந்தவங்களிலே பலர் கண் கலங்கிட்டாங்க'' என்று சொன்னார்.

''அவார்ட் கிடைச்சதுன்னு உனக்கு யார் சொன்னாங்க?''

''டி. வி.யில் நியூஸ் படிச்சிக்கிட்டிருந்த அங்கிள் 'ஆருடம்', 'விமல்' அப்படீன்னெல்லாம் சொன்னார். நான் மம்மியைக் கூப்பிட்டேன். வந்தாங்க. நியூஸ் கேட்டுட்டு, 'டேய் விமல்! உனக்கு ஆருடத்திலே நடிச்சதுக்கு அவார்டு கிடைச்சிருக்குடா!'' அப்படீன்னாங்க. பக்கத்து வீட்டுப் பசங்க எல்லாம் ஓடிவந்து கன்கராஜுலேஷன்ஸ் சொன்னாங்க. நான் சாக்லெட் தந்தேன்.''


திடீரென எழுந்து போய் ஒரு ஆல்பத்தைக் கொண்டு வந்தான் விமல்.

''இது என் ஃபோட்டோ ஆல்பம்'' என்று ஒவ்வொரு போட்டோவாகக் காட்டினான். ரகுராமும், கிரிஜாவும் பார்த்து ரசித்தார்கள். பிறகு ''விமல்! நாங்க உன் வீட்டுக்கு வந்தோம். நீ எப்போ எங்க வீட்டுக்கு வர்றே?'' என்றனர்.

''என் மம்மி டாடி கிட்டச் சொல்லி, என்னை அழைச்சிக்கிட்டு வரச் சொல்றேன்.'' என்றான் விமல்.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி
போட்டோ: ஜெய்மோகன்

இளமையில் இவர்கள்


நல்ல பெயர் எடுத்தவர்!

பெரிய கட்டிடங்கள் இடியினால் தாக்கப்படாமல் இருப்பதற்கு 'இடிதாங்கி' என்ற ஒன்று கட்டிட உச்சியிலே இருக்கும். இதைக் கண்டு பிடித்துப் பல உயிர்களையும் பொருள்களையும் காப்பாற்றியவர் பெஞ்சமின் பிராங்க்ளின். சிறந்த விஞ்ஞானி என்பதோடு, பெரிய அரசியல் தலைவர் என்ற புகழையும் பெற்றவர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாகக் காரணமாயிருந்தவர்களில் இவரும் ஒருவர்.



பள்ளிப் பருவத்திலே ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் இவர் தம் நண்பர்களுடன் அருகில் உள்ள குளம், குட்டைகளுக்கு மீன் பிடிக்கத் தூண்டிலுடன் செல்வார். மீன் பிடிப்பது இவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு.

பிராங்ளின் அடிக்கடி சென்று மீன் பிடிக்கும் குட்டைக்கு அருகே சதுப்பு நிலமாக இருந்தது. அதனால், காலில் வெடிப்பு ஏற்படத் தொடங்கியது.

ஒரு நாள் இவரது நண்பன், ''நாம் மீன் பிடிக்கும் இடத்தில் ஒரு மேடையைக் கட்டிக் கொண்டால், சதுப்பு நிலத்தில் நிற்க வேண்டிய தேவையில்லையல்லவா?'' என்று யோசனை கூறினான்.

''நல்ல யோசனைதான். மேடை அமைப்பது எப்படி?'' என்று கேட்டார் பிராங்க்ளின்.

''அதோ அங்கே பார், கட்டிட வேலை நடக்கிறது. அங்கே நிறையச் செங்கற்கள் கிடக்கின்றன. ஆள் இல்லாத போது, நாம் சில செங்கற்களை எடுத்து வந்து சேறு இருக்கும் இடத்தில் மேடை அமைத்து விடலாம்'' என்றான்.

'சரி' என்றார் பிராங்க்ளின்.

இருவரும் யாருக்கும் தெரியாமல் செங்கற்களை எடுத்து வந்து மேடை கட்டி விட்டார்கள்.

செங்கற்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதைக் கண்ட வீட்டுக்காரர் குளத் தங்கரையில் மேடை கட்டியிருப்பதைக் கண்டு, அதன் மூலமாகக் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து விட்டார். உடனே பிராங்க்ளினுடைய தந்தையிடம் சென்று விவரத்தைக் கூறினார். தந்தை மகனை அழைத்து விசாரித்தார். பிராங்க்ளின் உண்மையை ஒப்புக் கொண்டார்.

''பிறருடைய பொருளை அவருடைய அனுமதி யில்லாமல் எடுப்பதற்கு என்ன பெயர் தெரியுமா? திருட்டு! நீ திருடன் என்று பெயர் எடுக்க விரும்புகிறாய்?'' என்று தந்தை கண்டித்தார்.

பிராங்க்ளின் தாம் செய்த குற்றத்தை உணர்ந்தார். ''இனி இந்த மாதிரி நடந்து கொள்ளவே மாட்டேன். நல்ல பெயர் எடுப்பேன்'' என்று உறுதி

கூறி மன்னிப்புக் கோரினார். பிற் காலத்தில் இவர் ஒரு துறையில் மட்டு மல்ல; பல துறைகளில் நல்ல பெயர் எடுத்து விட்டார்!

சிறிய வயதிலேயே எழுத்தாளர்!

நம் நாட்டின் மூன்றாவது ஜனாதிபதி யாக விளங்கிய ஜாகிர் உசேனுக்குச் சிறு வயதிலேயே தேச பக்தி அதிகமாக இருந்தது. தினமும் அதிகாலையில் அவர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்வார். அங்கே ஒரு பத்திரிகைக் கடை இருந் தது. அங்கேதான் எல்லாப் பத்திரிகை களும் முதலிலே வரும்.

உசேன் தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றை விலை கொடுத்து வாங்கி அங் கேயே படித்து விடுவார். பிறகு வீட்டுக்குக் கொண்டு வந்து, நண்பர் களையும் படித்துப் பார்க்கச் சொல்லு



வார். நாட்டு நடப்பைப் பற்றி நண்பர்களுடன் விவாதிப்பார்.

எட்டாவது வயதிலேயே தந்தையை இழந்த உசேன், 14வது வயதில் தமது அன்புத் தாயையும் இழந்தார். இவரை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை இவ ரது தூரத்து உறவினர் ஒருவர் ஏற்றுக் கொண்டார்.

அவர் உசேனை அடிக்கடி சிற்றுண்டிச் சாலைகளுக்கு அழைத்துச் செல்வார். உசேனுக்கு வேண்டியதை யெல்லாம் வாங்கிக்கொடுப்பார். ஆனால், அந்தப் பெரியவர் எதுவுமே சாப்பிடமாட்டார்! உசேனுக்கு அவர் சில சமயம் பணமும் கொடுப்பார். உசேன் அந்தப் பணத் தைத் தமக்காகச் செலவிட மாட்டார். சேர்த்து வைப்பார். தெரிந்த நண் பர்கள் அல்லது ஏழைகளுக்குக் கஷ்டம் வரும்போது முடிந்தவரை கொடுத்து உதவுவார்.

மாணவப் பருவத்திலே உசேன் கட் டுரைகள், கதைகள் எழுதி வந்தார். ஆனால், அவர் தமது சொந்தப் பெயரில் எழுதவில்லை. புனைபெயரில் எழுதி வந் தார்! உசேன் பெரியவரான பிறகும் சில கட்டுரை, கதைகளை, ஐந்து வயதில் இறந்துபோன தமது அருமை மகளின் பெயரில் எழுதி வந்தார். பெரியவர் களுக்காகப் பல புத்தகங்களை எழுதிய இவர், சிறுவர்களுக்காகவும் பல அற்புதமான கதைகள் எழுதியிருக் கிறார்.

நண்பருடன் வேடிக்கை!

'பரிணாமக் கொள்கை'யை வகுத்த விஞ்ஞானி சார்லஸ் ராபர்ட் டார்வி னுக்கு அந்தக் காலத்தில் பலத்த எதிர்ப்பு இருந்தது. '' 'குரங்கிலிருந்து மனிதன் வந்தான்' என்று கூறுகிறாரே, இது அநியாயம்'' என்று பலர் எதிர்த் தார்கள்.

அந்த எதிர்ப்பையெல்லாம் சமா ளித்த டார்வின், பள்ளியில் படிக்கும் போது, அடிக்கடி செடிகளின் அருகிலே போய் உட்கார்ந்து கொள்வார். அவற் றின் வேர்களைத் தோண்டிப் பார்ப்பார். செடிகளின் மேலே வந்து உட்காரும் பூச்சிகளைப் பிடித்துப் பரிசோதனை செய்வார். கிளிஞ்சல்களும், பழைய நாணயங்களும் எங்கேனும் கிடைக் குமா என்று தேடிப் பிடிப்பார்.

ஒரு நாள் டார்வின் சில வாளிகளை எடுத்து வந்தார். ஒவ்வொரு வாளி யையும் தண்ணீரில் நிரப்பினார். ஒவ் வொரு வாளித் தண்ணீரிலும் வெவ் வேறு வர்ணங்களைக் கரைத்தார். பிறகு, அங்கிருந்த செடிகளின் அருகே சென் றார். அவரது நண்பர்கள் அவரது செய்கையை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

''இப்போது நான் ஒவ்வொரு செடிக் கும் ஒரு வர்ணத் தண்ணீரை ஊற்றப் போகிறேன். நான் ஊற்றும் தண்ணீர் நிறத்திற்கு இந்தச் செடிகளின் நிறங்களை மாற்றிவிடப் போகிறேன்'' என்றார்.

எல்லாரும் அவர் சொன்னபடி நடக் கும் என்று எதிர்பார்த்து, ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தச் செடிகளை வந்து பார்த்தார்கள். செடிகளின் நிறங்கள் முன்போலவே இருந்தன; மாறவில்லை. ''நீ சொன்னபடி நடக்க

வில்லையே!'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

''செடிகளின் நிறம் மாறாது என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், நீங்கள் அந்தச் செடிகளை உற்றுப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே



இப்படிச் செய்தேன்'' என்று சிரித்துக் கொண்டே பதில் அளித்தார் டார்வின்.

இன்னொரு நாள் தோட்டத்திலிருந்த மரங்களில் ஏறி, நிறையப் பழங்களைப் பறித்து வந்து ஒரு மூலையில் கொண்டு போய்க் குவித்தார். அவற்றின் மேல் இலை தழைகளைப் போட்டு மூடினார். பிறகு, நண்பர்களிடம், ''நான் ஒரு பழக் குவியலைக் கண்டு பிடித்திருக்கிறேன். வாருங்கள், வாருங்கள்; வந்து பாருங்கள்'' என்றார்.

எல்லாரும் ஓடி வந்து இலை, தழைகளை நீக்கிவிட்டுப் பார்த்தார்கள். பழங்களைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் ஆச்சரியப்படுவதற்குள் குட்டு வெளிப்பட்டு விட்டது!


''சற்று முன்புதான் இவன் இந்தப் பழங்களைப் பறித்து வந்து இங்கே வைத்து மூடினான்'' என்று ஒருவர் கூறியவுடன், டார்வின், ''உண்மைதான். அதனாலென்ன, நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் பழங்களைச் சாப்பிடுவோமே!'' என்று கூறி அந்தப் பழங்களை எல்லோருக்கும் பங்கு வைத்துக் கொடுத்துத் தாமும் சாப்பிட்டு மகிழ்ந்தார்.

நண்பர்களிடம் இப்படி ஏதாவது செய்து அல்லது சொல்லி, அவர்களை மகிழ வைப்பதில் டார்வினுக்கு ஒரு தனிப் பிரியம்!

ஏழைகளுக்கு ராணியின் உதவி

வெள்ளையருடன் வீரப் போர் புரிந்து நாட்டுக்காக உயிரையே தியாகம் செய்தவர் ஜான்ஸி ராணி இலக்குமி பாய்.

அவர் அரசியாக இருந்து ஆட்சி புரிந்தபோது செவ்வாய்க் கிழமையும் வெள்ளிக் கிழமையும் மகாலட்சுமி-



பூஜை செய்வதற்காகக் கோவிலுக்குச் செல்வார்.

அப்போது நல்ல குளிர் காலம். ஒரு நாள் கோயிலிலிருந்து ராணி திரும்பி வரும்போது, நூற்றுக் கணக்கான ஏழைகள் வழியிலே கூட்டமாக நின்றார்கள். காரணம் என்ன என்று கேட்டபோது ''மகாராணி, எங்களால் குளிரைத் தாங்க முடியவில்லை. எங்களுக்கு உதவுங்கள்'' என்று வேண்டினார்கள்.

உடனே ஜான்ஸி ராணியின் உள்ளம் உருகியது.

''இன்று செவ்வாய்க் கிழமையல்லவா? வருகிற வெள்ளிக் கிழமை நீங்கள் எல்லோரும் இதே இடத்திற்கு வாருங்கள். உங்கள் குறையைத் தீர்த்து வைக்கிறேன்'' என்றார்.

சொன்னபடி வெள்ளிக் கிழமையன்று அங்கு வந்த ஏழைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு கம்பளிப் போர்வையும், ஒரு மேல் சட்டையும், ஒரு தொப்பியும் வழங்கினார் ஜான்ஸி ராணி.

குளிரிலிருந்து தங்களைக் காப்பாற்றிய ராணியை மனங் குளிர அவர்கள் வாழ்த்தினார்கள்.

உலகப்
புகழ்பெற்ற சிறுவர் கதை-4

டாம் மாமாவின் நல்ல இல்லம்

எச். கிருஷ்ணமூர்த்தி



சென்ற இதழ் தொடர்ச்சி

"நான் இறந்த பிறகு — இனிமேல் யாரும் அடிமைகளை வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வீர்களா, அப்பா?"

"சாகப் போகிறேன் என்று சொல்லாதே இவா. உலகத்திலேயே உன்னைத்தான் அதிகமாக நேசிக்கிறேன்."

"அடிமைகளும் தங்கள் குழந்தைகளை நேசிக்கிறார்கள், இல்லையா? டாம் அண்ணன் தன் குழந்தைகளிடம் உயிரையே வைத்திருக்கிறார். நான் போன பிறகு டாம் அண்ணனுக்கு விடுதலை தருகிறேன் என்று சொல்லுங்கள் அப்பா!"

"சரி, குழந்தை! நீ விரும்பிய படியே செய்கிறேன்."

கிளேர், இவாவை அன்போடு அணைத்துக்கொண்டார். பாட்டுப் பாடித் தூங்க வைத்தார்.

இவாவின் பலம் குறைந்துகொண்டே போயிற்று. அவள் பைபிள் படித்துக்கொண்டிருப்பாள். அல்லது ஜன்னல் வழியாகத் தோட்டத்து மலர்களைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஒரு நாள் இவா தன்னுடைய அழகான தலைமுடியைக் கத்தரித்து வைத்துக் கொண்டாள். அப்பாவிடம் சொல்லி எல்லா அடிமைகளையும் கூப்பிட்டாள். அவர்களை நோக்கி, "நண்பர்களே! எனக்குப் பிடித்த உங்களை எல்லாம் விட்டு விட்டுப் பிரியப் போகிறேன். ஏசுவின் கருணை உலகத்திற்குப் போகிறேன். அவரை வழிபட்டால் உங்களுக்கும் அவர் உதவி செய்வார். அவரைத் தொழுங்கள். அவருடைய புகழைப் படியுங்கள். ஆனால், பாவம், உங்களால் படிக்க முடியாதே!" என்று சொல்லி அழுதாள். வேலைக்காரர்கள் பலர் விம்மி அழுதார்கள்.

"உங்களால் படிக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. உங்களுக்காக நான் பிரார்த்தனை செய்து விட்டேன். தேவகுமாரன் உங்களை ரட்சிப்பார். அவரது அன்பை யாசியுங்கள். மற்றவர்களைக் கொண்டு பைபிளைப் படிக்கச் சொல்லிக் கேளுங்கள். நாம் மீண்டும் சொர்க்கத்தில் சந்திப்போம்" என்றாள் இவா.

"ஆண்டவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும்" என்று வேலையாட்கள் சிறுமியை வாழ்த்தினர். கத்தரித்து வைத்த தலைமுடியை எடுத்து ஆளுக்கு ஒரு சுருள் பரிசாக அளித்தாள். அவர்கள் வருத்தத்தோடு விடை பெற்றனர். உண்மையான அன்பையே எண்ணிக்கொண்டிருந்த இவா, சில நாட்களில் இந்த உலகத்தை விட்டு மறைந்தாள்.

* * *

சிறுமி இவாவின் மறைவுக்குப் பின் கிளேருக்கு வாழ்க்கை வெறிச்சென்றிருந்தது. அவர் பைபிள் படிக்க முயற்சி செய்தார். ஆனால் மனம் அதில் செல்லவில்லை.

ஒருநாள் டாம் அவரைப் பார்க்க வந்தபோது — "என்னுடைய கவலையை மறக்கப் பார்க்கிறேன். ஆனால், முடியவில்லை. டாம், நீதான் ஏசுவைப் பார்த்ததில்லையே, அவர் இருக்கிறார் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"ஐயா, நான் அடிமை. என்னை விற்றார்கள். மனைவியையும் குழந்தைகளையும் பிரிந்து புறப்படும்போது என் உள்ளம் உடைந்துபோயிற்று. ஏசு 'அஞ்சேல்' என்று எனக்குக் கருணை காட்டினார். என் உள்ளத்தில் அவர் வாழ்கிறார். அவரை நான் உணருகிறேன். அதனால் என்னால் அமைதியாக வாழ முடிகிறது. தேவ குமாரனிடம் அன்பு காட்டுவது என்பது அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம்" என்றான் டாம்.

"சர்வ வல்லமை பொருந்திய தேவ குமாரனை நம்பு — என்று என் அன்னை

அடிக்கடி கூறுவார். இனி அவர் சொற்படி நடப்பேன்'' என்றார் கிளேர்.

''இவா படித்தது போல நீங்களும் எனக்குப் பைபிள் படியுங்கள் ஐயா!'' என்று டாம் பணிவோடு வேண்டினான். கிளேர் படித்தார். டாம் ஆர்வத்தோடு கேட்டான்.

டாமின் விடுதலைக்காகக் கிளேர் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். அவரது முயற்சி வெற்றி பெறுவதற்கு முன்னரே, திடீரென்று அவர் ஒரு விபத்தில் மாண்டார். அவருடைய மனைவி அவரைப் போல அன்புள்ளம் படைத்தவள் அல்ல. டாமை அலட்சியமாக ஒதுக்கினாள். பண்ணையையும், அடிமைகளையும் விற்றுவிட்டுத் தன் அப்பாவின் வீட்டுக்குப் போகத் தீர்மானித்தாள். டாமையும் மற்ற அடிமைகளையும் ஒரு விடுதிக்கு அனுப்பினாள். அங்கிருந்து அவர்களை அடிமைச் சந்தையில் விற்க ஏற்பாடு செய்தாள்.

* * *

டாமும் தோழர்களும் அடிமைகள் தங்கும் விடுதியை அடைந்தார்கள். அது அவர்களுக்குப் புது அனுபவம். அவர்கள் நல்ல உடைகள் அணிந்து கொண்டு பெட்டி படுக்கைகளுடன் ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந்திருந்தனர். அவர்களின் உடைகளையும், அமைதியாக அவர்கள் இருப்பதையும் கண்ட விடுதிக் காப்பாளன் ஏளனமாகச் சிரித்தான். அதே அறையின் மற்றொரு மூலையில் மற்ற அடிமைகள் கொட்டமடித்துக் கொண்டிருந்தனர். கிழிசல் ஆடை அணிந்து கொச்சையாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் வேதனையை உணர்ந்ததாகவே தெரியவில்லை.

அடிமை விடுதியின் மற்றொரு பகுதி. அது பெண்கள் அறை. சிறுமிகள் முதல் வயது முதிர்ந்த பெண்கள் வரை பல பெண்கள் அடிமைகள் விற்பனைக்காக வந்திருந்தனர். ஒரு பத்து வயதுச் சிறுமி தரையில் படுத்தவாறே அழுது கொண்டிருந்தாள். அவள் தாயாரை ஏற்கெனவே விற்றிருந்தனர். அவளுக்கு யாருமே துணை இல்லை. ஆடுமாடுகளை விற்பனைக்காக அடைத்து வைப்பது போல, உயிரும் உணர்ச்சியும் உள்ள சுமார் ஐம்பது அடிமை மனிதர்களை அந்த விடுதியில் அடைத்து வைத்திருந்தனர்.

* * *

நியூ ஆர்லின்சில் இருந்த அடிமைச் சந்தை மிகப் பெரியது. பண்ணையாளர்களும், பணக்காரர்களும் கூடும் இடம். ஜடப் பொருளைத் தேர்ந்தெடுப்பது போல் அடிமைகளை அங்கம் அங்கமாகப் பரிசோதித்து விலை பேசினர். பண்ணையாளர்களில் ஒருவர் கட்டையாக, குட்டையாக இருந்தார். அழுக்குச் சட்டை. அதைவிட அழுக்கு விரல்கள். பயங்கர முகம். அவர் அடிமைகளை முரட்டுத்தனமாகப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பதைக் கண்ட டாம் நடுங்கிப் போனான்.

சந்தையின் நடுவில் பண்ணையாளர்கள் கூடியிருந்தனர். அவர்களுக்கு முன்னால் ஒரு சிறிய மேடை. அதன் மேல் ஒவ்வொரு அடிமையாக ஏறி நின்றனர். விற்கப்பட்டனர். டாமின் முறை வந்தது. மேடையில் நின்றான். கட்டையாக, குட்டையாக பயங்கர முகத்துடன் இருந்தாரே, அந்தப் பண்ணையார் டாமையும், வேறு சிலரையும் விலைக்கு வாங்கினார். சந்தையில் அடிமைகள் விற்பனை ஆவதை டாம் கவனித்தான். கணவன் ஒரு புறம்: மனைவி ஒரு புறம். தாயார் ஒருபுறம்: குழந்தை ஒரு புறம். அவர்களைத் தனித் தனியாக விற்றார்கள். குடும்பம் சிதறியது. டாம் பரிதாபப் பட்டான்.


டாமின் புதிய எஜமானரின் பெயர் சைமன் லெக்ரி. அவர் டாமின் பெட்டியைத் திறந்தார். அதிலிருந்த ஒரு பழைய சட்டையை எடுத்துக் கொடுத்து அணியச் சொன்னார். டாம் அவ்வாறே செய்தான். பைபிளைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

என்ன தினம்?

ஆசிரியர்: நேரு பிறந்த தினத்தை நம் அரசு என்ன தினமாகக் கொண்டாடுகிறது?

மாணவன்: விடுமுறை தினமாக!

—பெருமழை தமிழ்ச்செல்வன்



"உனக்கு அந்தச் சட்டையே போதும். வீணாகப் பல சட்டைகள் எதற்கு?" என்று சொல்லிவிட்டு, டாமினுடைய பெட்டியையும் அதிலிருந்த மற்றத் துணி மணிகளையும் விற்றார். பணத்தைத் தாமே எடுத்துக் கொண்டார். பிறகு டாமின் சட்டைப் பையில் தேடிப் பார்த்தார். பைபிள் இருந்தது.

"ஓ! நீ மத ஆசாரங்களையெல்லாம் பின்பற்றுபவனா?. எனக்கு அதெல்லாம் பிடிக்காது. விட்டுவிடு. இனிமேல் உனக்கு நான்தான் கோயில். நான் சொல்கிறபடிதான் நீ நடக்க வேண்டும்." என்றார் லெக்ரி.

டாம் மௌனமாக இருந்தான். அவன் உள் மனம் லெக்ரியின் பேச்சை எதிர்த்தது. இவா படித்த ஏசுவின் மொழிகள் அவனுக்கு நினைவு வந்தன. "பயப்படாதே! நான் உன்னை மீட்டுவிட்டேன்! நீ என்னுடையவன்!" என்று டாமின் மனத்தில் ஒரு குரல் ஒலித்தது. லெக்ரியின் காதுகளில் அந்தக் குரல் விழவில்லை. ஏனென்றால் அந்தக் குரல் அவருக்குப் பழக்கமில்லை.

டாமையும் மற்ற அடிமைகளையும் ஏற்றிக்கொண்டு வண்டி லெக்ரியின் வீட்டுக்கு வந்தது. வீடு பெரிய பருத்தித் தோட்டத்தில் இருந்தது. லெக்ரி வீட்டையும் பழுது பார்க்கவில்லை; தோட்டத்தையும் சீரமைக்கவில்லை; அடிமைகளையும் கவனிக்கவில்லை. பணம் சம்பாதிப்பது ஒன்றே குறியாக இருந்தார். அவர்களை நான்கு பயங்கர நாய்கள் எதிர்கொண்டு அழைத்தன.

"ஓடும் அடிமைகளைத் துரத்திப் பிடிக்க இந்த நாய்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறேன். நீங்கள் ஓட முயன்றால், அவை உங்களைப் பிடித்துக் குதறிவிடும். ஜாக்கிரதை!" என்றார் லெக்ரி.

அருகில் நின்றிருந்த இரண்டு முரட்டு நீக்ரோக்களைச் சுட்டிக் காண்பித்தார். "இவர்களும் காவல் இருப்பார்கள். உங்களைத் தக்கபடி கவனிப்பார்கள்" என்றார்.

தனக்கு ஒரு வீடு தருவார்கள் என்றும், அதைச் சுத்தமாக வைத்திருந்து, ஓய்வு நேரங்களில் பைபிள் படிக்கலாம் என்றும் டாம் எண்ணினான். அவனுக்குப் பெருத்த ஏமாற்றம் காத்திருந்தது. ஓர் ஆள் அவர்களுக்குச் சில அசுத்தமான குடிசைகளைக் காண்பித்தான்.

"இவற்றில் நீங்கள் எதில் வேண்டுமானாலும் தங்கலாம். ஏற்கெனவே ஆட்கள் வசிக்கிறார்கள். நீங்களும்



அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்'' என்றான்.

லெக்ரியின் பருத்தித் தோட்டம் பெரியது. அவர் அடிமைகளை நன்றாக வேலை வாங்கினார். அங்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், அநீதிகளையும் கண்டு டாம் வேதனைப்பட்டான். இருந்தாலும் கடவுளை நம்பினான். வேலைகளை விரைவில் கற்றான். கடமைகளைச் சரிவரச் செய்தான்.

காலையிலிருந்து மாலை வரை அடிமைகள் கூடை நிறையப் பருத்தி பறிக்க வேண்டும். மாலையில் கூடைகள் எடை போடப்படும். குறைவாகப் பறித்தவர்களுக்குத் தண்டனை நிறையக் கிடைக்கும்.

புதிதாக வந்த ஒரு பெண் அடிமைக்கு உடம்பு சரியில்லை. அவளால் வேகமாகப் பறிக்க முடியவில்லை. டாம் அவளுக்கு உதவி செய்தான். லெக்ரிக்குச் செய்தி எட்டியது. அவர் இருவருக்குமே ஒரு பாடம் புகட்ட நினைத்தார். டாமைக் கூப்பிட்டு அந்தப் பெண் அடிமையை நன்றாக உதைக்கச் சொன்னார்.

''எனக்கு என்ன வேண்டுமானாலும் தண்டனை கொடுங்கள்; ஏற்கிறேன். நான் மற்றவர்களைத் துன்புறுத்தமாட்டேன். அது சரியில்லை'' என்று தீர்மானமாகச் சொன்னான்.

லெக்ரி டாமை மிரட்டினார். காலால் உதைத்தார். தம் கட்டளையை நிறைவேற்றச் சொன்னார். டாமுக்கு முகத்திலிருந்து ரத்தம் வழிந்தது. உடம்பில் காயம்; வலி. எல்லாவற்றையும் அவன் பொறுத்துக் கொண்டான். ''நான் தவறு என்று நினைக்கும் காரியத்தைச் செய்ய மாட்டேன். செய்யவே மாட்டேன்.'' உறுதியாகச் சொன்னான்.

லெக்ரி மேலும் அவனை மிரட்டினார். ''நான் உன்னை விலை கொடுத்து வாங்கியிருக்கிறேன். உன் உடலும் உள்ளமும் எனக்குத்தானே சொந்தம்?'' என்று டாமை அதட்டினார்.

''என்னுடைய உள்ளத்தை நீங்கள் வாங்கவில்லை. அதை ஏற்கெனவே ஆண்டவன் வாங்கி விட்டார். அவர்தான் அங்கு குடியிருக்கிறார். எனக்கு வழி காட்டுகிறார்.'' என்றான் டாம் அமைதியாக.

''ஒரு நீக்ரோ அடிமைக்கு இவ்வளவு திமிரா? உன்னை வழிக்குக் கொண்டு வர எனக்குத் தெரியும்'' என்று கோபித்துக்கொண்டே அகன்றார் லெக்ரி.

டாமை அன்பு நெறியிலிருந்து வன்முறைக்குத் திருப்ப லெக்ரி என்ன என்னவோ செய்து பார்த்தார். ஒன்றும் பலன் அளிக்கவில்லை. டாம் தன் கொள்கையில் உறுதியாக இருந்தான். ஆயினும் டாமின் துன்பங்கள் அதிகரித்தன. அவன் பலம் குன்றிப் படுத்த படுக்கையாகி விட்டான். அங்கிருந்த சில வேலையாட்கள் டாமின் மீது இரக்கப்பட்டனர். தப்பித்துச் செல்லும்படி ஆலோசனை கூறினர். எல்லா உதவிகளையும் அளிக்க அவர்கள் முன்வந்தனர்.

''நான் இங்கேயேதான் இருப்பேன். கடவுள் எனக்குத் துணை இருப்பார்'' என்று சொல்லி உதவிகளை மறுத்துவிட்டான், டாம்.

* * *

டாமின் இரண்டாவது எஜமானனான கிளேர், டாமின் விடுதலைக்காகச் சில முயற்சிகளைத் தொடங்கி வெற்றி பெறு முன்பே இறந்து விட்டாரல்லவா? இப்போது, முதல் எஜமானனான ஷெல்பியின் மகனுக்குத் தொழில் சீரடைந்து விட்டது. அவன் டாமை விடுவித்து அழைத்துக் கொண்டு போக விரும்பினான். அவன் டாமைத் தேடிப் புறப்பட்டான். லெக்ரியின் பண்ணையில் சந்தித்தான். டாமின் பரிதாப நிலையைக் கண்டு வருந்தினான்.

''எனக்காக வருத்தப்படாதீர்கள். கென்டகியை விடச் சிறந்த இடமான கடவுள் சந்நிதானத்துக்குப் போகிறேன். கடைசிவரையில் எனக்குக் கடவுள் துணை இருந்தார் என்று மட்டும் என் மனைவிக்கும் மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்'' என்றான் டாம். அவன் ஆவி பிரிந்தது.

* * *

ஷெல்பியின் மகன், டாம் மாமாவின் உடலை ஒரு நல்ல இடத்தில் அடக்கம் செய்தான். தன் வாழ்நாள் முழுவதையும் அடிமைகள் விடுதலைக்காக அர்ப்பணம் செய்வதாக உறுதி பூண்டான்.

கென்டகி திரும்பியதும், அவன் தன் அடிமைகளை அழைத்தான். ''டாம் மாமாவின் நல்ல இல்லத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவருடைய அன்பு வழிகள் உங்கள் நினைவுக்கு வரட்டும்'' என்று சொல்லித் தன் அடிமைகளை விடுவித்தான். அதற்கான சான்றிதழ்களையும் வழங்கினான்.

Mrs. Harriet Beecher stowe எழுதிய Uncle Tom's cabin என்ற ஆங்கிலக் கதை, சுருக்கமாக மேலே சொல்லப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்க தேசத்துக் குட்டிக்கதைகள்

தேவி

நீச்சல் போட்டி

இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்த இரு ஆமைகள் ஒன்றாக வாழ்ந்தன. ஒரு நாள் முதல் ஆமை, இரண்டாவது ஆமையிடம், ''இந்த ஆற்றுக்குள்ளே கிடந்து புரளும் நீர்யானையிடம் நாம் ஒரு தந்திர விளையாட்டு விளையாடுவோமா?'' என்று கேட்டது.

இரண்டாவது ஆமை, ''என்ன விளையாட்டு?'' என்று கேட்டது.

''அந்த நீர்யானையை நம்முடன் நீச்சல் பந்தயத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்போம்.''


''என்ன! பந்தயமா? அப்படியானால் நிச்சயம் நாம் தோல்விதான் அடைவோம்'' என்றது இரண்டாவது ஆமை.

முதல் ஆமை, இரண்டாவது ஆமையின் காதில் இரகசியமாக ஏதோ சொன்னது. உடனே அது குஷியாகத் தலையை ஆட்டியது. பிறகு அந்த இரண்டாவது ஆமை ஆற்றின் எதிர்க் கரையை நோக்கி வேகமாக நீந்திச் சென்றது.

பிறகு முதல் ஆமை நீர்யானையிடம் சென்றது. ''இன்று நாம் இருவரும் நீச்சல் போட்டி நடத்தப் போகிறோம். போட்டியில் யார் ஜெயிக்கிறார்கள், பார்க்கலாமா?'' என்றது.

நீர்யானைக்கு வியப்பாகவும் சிரிப்பாகவும் இருந்தது. ஆமையின் பேச்சு, ''நீயோ மிகச் சிறு பிராணி. என்னை விட வேகமாக நீந்த உன்னால் முடியவே முடியாது.'' என்றது. ஆனால், ஆமை, ''எதிர்க் கரைக்கு நாம் இருவரும் இப்போதே போவோம். பிறகு, அங்கிருந்து இந்தக் கரைக்குத் திரும்பி வருவோம். அதுவும் நீருக்குள் மூழ்கியபடியே நீந்த வேண்டும். என்ன, துவங்குவோமா பந்தயத்தை?'' என்று விடாப் பிடியாகக் கேட்டது.

நீர்யானை வேறு வழியின்றி ஒத்துக் கொண்டது. வேகமாக எதிர்க் கரை நோக்கி நீந்தியது. கரையை அடைந்ததும் தலையைத் தூக்கிப் பார்த்தது. அங்கு ஆமை ஒரு பாறை மேல் அமர்ந்து கொண்டு, ''உனக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது?'' என்று அலுத்துக் கொண்டது.



நீர்யானைக்கு ஒரே ஆச்சரியம்! ஆனால், அது இரட்டை ஆமையில் இரண்டாவது ஆமை என்பது நீர்யானைக்குத் தெரியாது!


இரண்டாவது ஆமையோ, ''சரி, நாம் புறப்பட்ட இடத்துக்குச் செல்வோம்'' என்று கூறி வேகமாக நீரில் குதித்து நீந்தியது. நீர் யானை முன்னை விட வேகமாக நீந்தி, முன்பு புறப்பட்ட இடத்தை அடைந்தது. அதற்கு மறுபடியும் அதிர்ச்சி! அங்கு ஆமை அமர்ந்திருக்கக் கண்டது. ''என்ன, இப்போதும் இவ்வளவு மெதுவாக வருகிறாய்!'' என்று நீர் யானையைக் கேலி செய்தது.

முதல் ஆமைதான் அவ்வாறு கேட்டது. இரண்டு ஆமைகளும் ஒரே மாதிரி இருந்ததால், பாவம், நீர் யானைக்கு வித்தியாசமே தெரியவில்லை. தன் தோல்வியை ஒப்புக் கொண்டது!

பூனையும் எலியும்

ஒரு தீவில் பூனையும் எலியும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. பூனை மரத்தில் வாழும் பறவைகளைப் பிடித்துத் தின்று பசியைத் தீர்த்துக் கொண்டது. எலியோ, மரத்தின் வேர்கள், கொட்டைகள் முதலியவற்றை உணவாகக் கொண்டது.

ஒரு நாள் எலி, பூனையிடம் ''எனக்கு இந்தத் தீவு வாழ்க்கை அலுத்துவிட்டது. எனவே, நாம் இந்தக் கடலைக் கடந்து நிலத்துக்குச் சென்று விடுவோம். அங்கு நிலத்தைத் தோண்டி வேர் எடுக்க வேண்டாம். பறவைகளைப் பிடித்துத் தின்ன வேண்டாம். நிறைய விதம் விதமான உணவுகள் கிடைக்கும்'' என்றது. பூனையும் ''நல்ல



யோசனை. அப்படியே செய்வோம். ஆனால், எப்படி இந்தக் கடலைக் கடப்பது?'' என்றது.

எலி, ''நாம் வேர்களைக் கொண்டு படகு செய்வோம்.'' என்றது. எலியும் பூனையும் சேர்ந்து வேர்களைக் கொண்டு படகு செய்து முடித்தன. படகில் ஏறி இரண்டும் உல்லாசமாகக் கடலில் பயணத்தைத் தொடங்கின.

நிலப் பகுதி கண்ணுக்குத் தெரியவில்லை. இரண்டும் படகில் போய்க் கொண்டே இருந்தன. பசி எடுக்க ஆரம்பித்தது. அப்போதுதான், சாப்பிடுவதற்கு எதுவுமே கொண்டு வராதது ஞாபகத்திற்கு வந்தது. இரண்டும் பசியால் மிகவும் வாடின.

பூனை கண்ணை மூடிக் கொண்டு தூங்க ஆரம்பித்தது. அப்போது தீவில் பறவைகளைப் பிடிப்பது போல் அது கனவு கண்டது.

எலியால் பசியைத் தாங்க முடியவில்லை. வேரால் செய்த அந்தப் படகைச் சிறிது கடித்தது. அந்த ஓசையில் பூனை விழித்துப் பார்த்தது. உடனே எலி தூக்கத்தில் இருப்பது போல் நடித்தது. பூனை, 'நம் கனவில் வந்த சப்தம் போல் இருக்கிறது' என்று நினைத்து மீண்டும் தூங்க ஆரம்பித்தது.

சிறிது நேரம் சென்றது. எலி மறுபடியும் படகைக் கடித்தது. மீண்டும் பூனை விழித்துக் கொண்டது. எலி தூங்குவது போல் நடிக்க, பூனை மீண்டும் அது கனவில் கேட்ட சப்தம்தான் என்று நினைத்துத் தூங்க ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் எலி கடித்த இடத்தில் ஓட்டை விழுந்து படகுக்குள் தண்ணீர் வர ஆரம்பித்தது. பூனை விழித்துப் பார்த்தது. நிலைமையைப் புரிந்து கொண்டது. எலி மீது கோபமாகச் சீறியது. படகு மூழ்க ஆரம்பித்து விட்டது! இரண்டும் வேறு வழியின்றிக் கடலில் குதித்து நீந்தின. நல்ல வேளையாக, கரை அருகிலேயே இருப்பதைக் கண்டன. கடலைக் கடந்து கரையை அடைந்தன.

கரையை அடைந்ததும், பூனை எலியிடம், ''உனக்கு மூளையே இல்லை. நாம் செய்த படகு வேர்களால் ஆனதுதானே! நீ வேர்களைக் கடித்து உன் பசியைத் தீர்த்துக் கொண்டதால் தான் நாம் இப்படி அவதிப் படுகிறோம். இப்போது நான் என் பசி தீர உன்னைக் கடித்துத் தின்னப் போகிறேன்'' என்றது.

எலி, ''சரி, அப்படியே செய். ஆனால் இப்போது நாம் கடலில் நீந்தி வந்ததால், என் உடல் முழுவதும் உப்பாக இருக்கும். எனவே என் உடலில் உள்ள தண்ணீர் உலர்ந்ததும் நீ என்னைச் சாப்பிடு'' என்றது.

பூனையும், ''சரி'' என்றது. எலியோ திடீரென்று அருகில் இருந்த ஒரு வளைக்குள் புகுந்து கொண்டது. வளைக்குள் இருந்து கொண்டே, ''ஏ, பூனையே, நீ ரொம்பக் கெட்டிக்காரன் என்று நினைக்க வேண்டாம். இப்போது எப்படி என்னைப் பிடிப்பாய்?'' என்று கேட்டது.

பூனை, ''நான் இங்கேயே நிற்பேன். நீ எப்படியும் இந்த வழியாக வந்து தானே ஆக வேண்டும்? வெளியே வரும்போது பிடித்துக் கொள்வேன்'' என்றது.

எலி, ''ஆகா! அப்படியா?'' என்றது. பூனை அந்த வளையின் அருகிலேயே நின்று கொண்டிருந்தது. எலியோ அந்த வளையைக் குடைந்து குடைந்து

வேறொரு பக்கமாகத் தரைக்கு வந்து தப்பித்து ஓடிவிட்டது!

பூனையோ, ''இந்த வளையிலிருந்து எலி வரும், வரும்'' என்று இன்னும்கூட எதிர்பார்த்துக் காத்திருக்கிறது!

பலசாலி ஆமை!

ஒரு காட்டில் ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அது ''என்னைப் பாருங்கள்! நான் யானையைப் போல் தைரியசாலி. நீர்யானையைபோல் பலசாலி'' என்று கர்வத்துடன் கூறிக் கொண்டது. இந்த விஷயம் காடு முழுவதும் பரவியது.


ஒரு நாள் ஆமை யானையைத் தேடிச் சென்றது. யானை மரத்தடியில் படுத்திருந்தது.'' ஏ யானை நண்பனே, இதோ நான் வந்திருக்கிறேன்'' என்று கூறியது. யானை ஆமையைப் பார்த்து விட்டு, ''என்ன! நான் உன் நண்பனா! இவ்வளவு சின்னவனாக இருக்கும் நீ என்னை நண்பன் என்கிறாயே!'' என்றது கோபமாக.

ஆமையோ, ''நான் பார்க்கச் சின்னவனாக இருந்தாலும், உன்னைப் போல் பலமும் சக்தியும் பொருந்தியவன். என்னை உன் நண்பனாக ஏற்றுக் கொள்ள என்ன தயக்கம்? ஒருவேளை, உனக்கு என் பலத்தில் ஐயம் இருந்தால் கயிறு இழுக்கும் போட்டி நடத்துவோம். அதில் நான் வெற்றி பெற்றால் என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்'' என்றது.

யானையும் அதற்குச் சம்மதம் தெரிவித்தது. உடனே ஆமை மிகவும் நீளமான ஒரு கயிற்றைக் கொண்டு வந்தது. யானையிடம் அதன் ஒரு நுனியைக் கொடுத்துவிட்டு, ''நீ இந்த நுனியைப் பிடித்துக் கொள். நான் மறு நுனியைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். கயிறு நீளமாக இருப்பதால் சிறிது தூரம் சென்ற பின்பே இழுப்பேன். நீயும் இழு. நானும் இழுக்கிறேன். யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதைப் பார்த்துவிடலாம்'' என்றது.

ஆமை கயிற்றின் மற்றொரு நுனியைப் பிடித்துக் கொண்டு வேகமாகப் போனது. வழியிலிருந்த ஆற்றை அடைந்தது. அங்குதான் நீர்யானை இருந்தது. அந்த நீர்யானையிடம் சென்று, ''என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்'' என்றது ஆமை.

நீர்யானை ஆமையைப் பார்த்துக் கேலியாக, ''உன்னையா! என் நண்பனாகவா! ஏற்றுக் கொள்ள வேண்டுமா?'' என்று கூறிச் சிரித்தது.




''கேலி எதற்கு? நானும் உன்போல் பலசாலிதான். அதில் உனக்குச் சந்தேகமிருந்தால் இந்தக் கயிற்றைப் பிடித்துக்கொள். இதன் மறு முனை இன்னும் கொஞ்ச தூரத்தில் உள்ளது. அதை நான் பிடித்து இழுக்கிறேன். அதில் நான் வெற்றி பெற்றால், என்னை நண்பனாக ஏற்றுக் கொள்வாயா?'' என்றது.

நீர்யானையும் ஒப்புக் கொண்டது. ஆமை கயிற்றின் நுனியை நீர்யானையிடம் கொடுத்துவிட்டு, அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே, வந்த வழியில் சென்றது. கயிற்றின் நடுப் பகுதிக்கு வந்ததும் இரு பக்கமும் பார்த்தது. யானையும் நீர்யானையும் கண்ணில் படவில்லை. மரம் செடி கொடிகள் அவற்றை மறைத்திருந்தன. நடுவில் நின்ற ஆமை கயிற்றைப் பிடித்துச் சுண்டி இழுத்தது. உடனே யானையும் நீர்யானையும் ஆமைதான் மறு முனையில் கயிற்றை இழுக்கிறது என்று எண்ணி, தங்கள் பலத்தையெல்லாம் திரட்டி இழுத்தன. வெகு நேரம் இப்போட்டி நடந்தது. யாரும் வெற்றி பெறவில்லை. இனியும் தாமதிக்கக் கூடாது என்று ஆமை, அந்தக் கயிற்றை நடுவிலே கடித்து அறுத்து விட்டது. கயிறு அறுந்ததும் யானையும் நீர்யானையும் 'தொப்'பென்று மல்லாந்து விழுந்தன.

ஆமை யானையை நோக்கிப் போனது. யானை, ''ஆமையே, உன்னைச் சாதாரணமானவன் என்று நினைத்திருந்தேன். உண்மையிலேயே நீ பலசாலிதான். உன்னை நான் என் நண்பனாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்றது.

பிறகு ஆமை, நீர்யானையிடம் சென்றது. நீர்யானையும் ஆமையின் பலத்தைப் பல்வாறாகப் புகழ்ந்து அதனை நண்பனாக ஏற்றுக் கொண்டது.

இப்படி ஆமை, யானையின் நட்பையும் நீர்யானையின் நட்பையும் பெற்றது.



காசிப முனிவர் மாயை என்ற அரக்கியை மணந்தார். சூரபன்மன், சிங்கமுகன் தாரகன், அசமுகி என்று அசுரர் இனம் தழைத்தது. காசிபரின் அறவுரைகள் அசுரர்கட்குக் கசந்தது!. மாயை உபதேசித்தாள்...
வெற்றிவேல் வீரவேல் 6
கதை: சுகிசிவம்
படம்: விஜு
பிள்ளைகளே! நீங்கள் அடைய வேண்டியது கல்வியும் செல்வமும். இரண்டையும் பெற்றால் எல்லாமே பெற்றது போல்.
இரண்டில் எது சிறந்தது தாயே!
குழந்தாய்! கல்வியைவிடச் செல்வம் சிறந்தது. செல்வம் பெற்றால் கல்வி கற்றவர்களும் உன் காலடியில்.
அதனைப் பெறும் வழி என்ன?
சிவபெருமானைக் குறித்து யாகம் செய்யுங்கள். மனம் மகிழ்ந்து தோன்றுவார். எல்லாச் செல்வங்களையும் கேட்டுப் பெறலாம். யாகம் செய்ய உத்தர பூமியில் ஆலந்தீவு ஏற்ற இடம். ம்.. புறப்படுங்கள். தேவர்களை வீழ்த்துங்கள்.. ம்....
அசுரர்கள் தேவர்களின் தீராப் பகைவர்கள். தேவர்களை வீழ்த்த, யாகம் செய்ய அசுரர் படை புறப்பட்டது. அவர்கள் குலகுரு சுக்ராச்சார்யார் மந்திர உபதேசம் செய்து வைத்தார். அன்னை மாயை, யாகத்திற்கு வேண்டிய நச்சு சமித்துக்கள், மாமிசப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து ஆலந்தீவில் குவித்தாள்.
புறப்பட்டு விட்டோம் தாயே!


உங்கள் அன்பு உறுதியானது. மூவரும் நீடு வாழ்க!
சுவாமி! தாங்கள் யார்?
சூரபன்மா! 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் நீ ஒருவனே ஆளும் வரம் தந்தேன். நினைத்த உடன் நினைத்த இடம் செல்லும் இந்திரஜாலத் தேர் தந்தேன். நமது சக்தியன்றி வேறு யாராலும் உங்களை வெல்ல முடியாது.
தம்பி, தேவர் உலகம் நோக்கிப் படை எழுப்போம். முதலில் யாரை வீழ்த்துவது?
அண்ணா! செல்வம் உள்ள இடம் குபேரபுரி. முதலில் அதனைப் பிடிப்போம்.
அசுரர் படை, குபேரனை அடிமையாக்கி சுவர்க்கத்தைக் கொளுத்தி, அக்கினி, எமன், வருணன், வாயு போன்ற தேவர்களை வென்றது.
தாரகன் பாற்கடலில் நுழைந்து கலக்கினான். நாராயணரின் சக்கரப் படை ஏவ, தாரகன் அதனை மார்புப் பதக்கம் ஆக்கினான். சமாதானம் சிறந்தது! என்று திருமால் உணர்ந்தார்.
தாரகனே! நான் உனக்குப் பாட்டன் முறை! என் மீது என்ன பகை?
முன்னமே அது தோன்றவில்லையோ!



நடுவில் அமைந்த ஒற்றை ஓம குண்டத்தில் சூரபன்மன் தீ வளர்த்து வேள்வி செய்தான். சுற்றிலும் அமைந்த 108 குண்டங்களில் சிங்கமுகனும், அதனைச் சுற்றி அமைந்த 1008 குண்டங்களில் தாரகனும் வேள்வி செய்தனர். நீண்ட நாள் வேள்வி நிகழ்ந்தது.
ஆ! இன்னும் சிவபெருமானைக் காணமுடியவில்லை. என் தலையை வெட்டிப் பலி இடுகிறேன்.
அதிசயம்! வெட்ட வெட்ட தலை வளர்ந்தது. சூரன் வேறு முடிவு செய்தான்.
மேலே சென்று வச்சிரஸ்தம்பத்தில் பாய்ந்தான் சூரன். மாண்டு போனான். தம்பிகள் திகைத்து ஓடி வந்தனர்.
அண்ணா! எங்களைப் பிரியலாமா? நாங்களும் இதோ வந்தோம்.
அவர்களைக் கிழட்டுக் கை ஒன்று தடுத்தது.
சிவபெருமான் கிழவர் வடிவத்தில் வந்து அவர்கள் பாசத்தையும் தவத்தையும் சோதித்தார்.


வாழ்க! வாழ்க!
பிரபோ! இன்று முதல் நீங்களே எங்கள் அரசர்.
வெற்றிபெற்ற சூரன் வீரமகேந்திரம் என்ற நகர் அமைத்து அரசு செய்தான்.
திருமாலே! நீர் எனக்குப் பாட்டன் முறை! அழைக்கிறபோது வந்து ஆசீர்வாதம் செய்யலாம்...ம்... புறப்படலாம்... பிரம்மதேவரே! இங்குவந்து பஞ்சாங்கம் படிப்பது உமது வேலை...!
உத்தரவு!
காலம் கடந்தது. தேவர்களுக்கு அசுரர்கள் இழைத்த கொடுமைகள் கணக்கில. சூரபன்மன் கொடுங்கோலன் ஆனான்.
அமைச்சர்களே! தேவர்கள் வேலையின்றித் திரிகிறார்கள்! என்ன வேலை கொடுக்கலாம்.
மீன் பிடிக்கச் சொல்லலாம். வீடு வீடாகக் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லலாம்.
தேவர்கள் துன்பப்பட்டு மீன் பிடித்து, அசுரர் வீடுகளில் கொண்டு வந்து, கொடுத்தனர். தேவர்களுக்கு ஏன் இந்தத் துன்பம்?
வெட்கங் கெட்ட தேவர்களே! இதைவிட நீங்கள் சாகலாம். மானம் இல்லையா உங்களுக்கு?
தொடரும்



'ஆடு கத்தரி ஆடு!' என்றால் கத்தரி ஆடுமா? 'கத்தரிக்காய் ஆடுவதா? அது எப்படி சாத்தியமாகும்?' என்று தானே நினைக்கிறீர்கள்! ஆடப்போகும் கத்தரிக்காயைச் செய்யப் போவதும் நீங்கள்! ஆட்டி வைக்கப் போவதும் நீங்கள்!

நீங்கள் தயார் தானே?

உட் கருவை உபயோகித்த பின் தூக்கி எறிந்து விடுகிறீர்களே முட்டை ஓடு—

கடையிலிருந்து வாங்கி வந்த கத்தரிக்காயை நறுக்க ஆரம்பித்துத் தூக்கி எறிந்துவிடுகிறீர்களே கத்தரிக்காயின் குடை(காம்புப் பகுதி)-இவை இரண்டும் தான் தேவை நாம் நம் புதிய கத்தரிக்காயைச் செய்ய!

முட்டை ஓட்டுக்குள் சில சிறு சிறு செருப்பாணிகளைப் போட்டுவிடுவோம். அதிகம் வேண்டாம். ஐந்தாறே போதும்!

ஆணிகள் எதற்கு என்கிறீர்களா? அவைதானே கத்தரிக்காயை ஆட வைக்கப் போகின்றன!

இப்போது செருப்பாணிகள் அடங்கிய முட்டை ஓட்டின் திறந்த பகுதியைக் கத்தரிக்காய்க் குடையைச் சீராக வைத்து, கோந்து அல்லது செயற்கை இரசாயனப் பசையால் ஒட்டி விடுவோம். முட்டை ஓடு என்று தெரியாமல் இருக்க ஊதா வண்ணம் தீட்டிவிட்டால் அசல் கத்தரிக்காய் மாதிரிதான்!

ஆடுவதற்குக் கத்தரி ரெடி! ஆட்டுவிக்கக்கோல் வேண்டுமே!


பழைய ஊதுவத்திக் குழாய் மிகப் பொருத்தம்! அதனுள் அடங்கும்படி ஒரு காந்தத் துண்டை அடைத்துவிட வேண்டும். அவ்வளவுதான்!

தேவையானால் ஊதுவத்திக் குழாயின் மேல் ஜரிகை ஒட்டி, மறுபுறத்தில் பட்டுக் குஞ்சலம் கட்டி அழகு செய்யலாம். — இவையெல்லாம் தேவை என்றால்தான்!

இப்போது மந்திரக் கோலை மாயக் கத்தரி அருகே கொண்டு போய் ஆட்டுங்கள்! ஆட்டும் பக்கமெல்லாம் ஆடும்! அசைந்து அசைந்து ஆடும்!

அது சரி, முட்டை ஓடு சைவமா? அசைவமா?

'சாப்பிடுவதாக இருந்தால்தானே சைவம், அசைவம் என்பதெல்லாம்' என்கிறீர்களா? — அதுவும் சரிதான்!



நீங்கள் செய்யப் போகும் இந்த 'ஜல்ஜல் உருளை' உங்களுக்கு மட்டுமல்ல; உங்கள் வீட்டில் இருக்கும் சிறு குழந்தைகளுக்குக்கூட விளையாட்டாக, வேடிக்கையாக இருக்கும்.

இதற்குத் தேவை மூடியுடன் கூடிய உருளை வடிவமான ஒரு டப்பா, கிணுகிணுக்கும் சில சலங்கை மணிகள், தேவையான அளவுள்ள ஒரு ரப்பர் பேண்ட். இவ்வளவுதான்.

படத்தில் காட்டியுள்ளது போல் டப்பியின் அடிப்புறத்தில் இரண்டு துளைகள்; மூடியில் இரு துளைகள்—துளைகள் அருகருகே இருக்கட்டும். வட்ட வாரவ ரப்பர் பேண்டை வெட்டி ஒரு நீண்ட நூல் போல் ஆக்கிக் கொள்ளுங்கள். அடிப்புறத்தின் இரு துளைகள் வழியாக ரப்பர் பேண்ட் உட்புறம் வந்ததும் ௮ போல வரும்படி மாற்றிக் கொண்டு நடுவில் இப்போதே சலங்கை மணிகளைக் கெட்டியாக நூலில் கட்டித் தொங்க விட்டு விடுங்கள். ஜாக்கிரதை! ரப்பர் பேண்ட் அறுந்துவிடப் போகிறது. இரு முனைகளும் ௮ (எட்டு) வடிவம் பூர்த்தியாகும்படி மூடியின் இரு துளைகள் வழியாக வெளியே கொண்டு வந்து முடிச்சுப் போட்டு விடுங்கள்.

கெட்டிக்காரர்களானால் இந்தச் சலங்கை மணி விழும் இடத்திலும்

அமைக்கலாம். கண்ணாடி போன்ற பிளாஸ்டிக் டப்பா என்றால் உள்ளே சலங்கை எட்டு வடிவில் ரப்பர் பேண்ட் எல்லாம் தெரியும்! தகரம் என்றால் தெரியாது!

உருட்டி விடுங்கள் உருளையை! உருண்டு போகும்போது ரப்பர் பேண்ட் முறுக்கிக் கொள்ளும் அல்லவா? முறுக்குத் தளரும்போது உருளை தானே திரும்பும்! உருளை போய் வரும்போது உள்ளே சலங்கை மணி கிணு கிணுக்கும்!

ஜல் ஜல் உருளை ஜாலி உருளைதான்!



காற்றாடி விடுவதென்றால் கனகுஷிதான் உங்களுக்கு! இது பறக்கும் காற்றாடி அல்ல! — சுழலும் காற்றாடி!— காற்றாடி கூட அல்ல; கனலாடி — ஆம் நெருப்பாடியேதான்!

ஓலையால் காற்றாடி செய்து சுழலச் செய்ய ஓடிப் போய்ப் பார்க்க வேண்டாம்! உட்கார்ந்தபடியே சுழலச் செய்து ஓய்வாகப் பார்க்கலாம்!

அதிக கனமில்லாத அட்டையில் 5 செ. மீ. ஆரம் உள்ள வட்டம் வரைந்து வெட்டிக் கொள்ள வேண்டும். அதே மையத்தில் 1.5 செ. மீ. ஆரத்தில் ஒரு சிறிய வட்டம் வரைந்து கொண்டுவிட வேண்டும். சிறு வட்ட வெளிப்புறத்துக்கும் பெரிய வட்டத்துக்கும் இடையே சுமார் 15 முதல் 20 கோடுகள் சமமான இடைவெளி விட்டு வரைந்து கொள்ளுங்கள்.

இப்போது அந்தக் கோடுகள் மீதே கத்தரியால் சிறு வட்ட வெளிப்புறம் வரை சூரியனின் கதிர்கள் போல வெட்டி விடுங்கள். சிறு ரிப்பன் போல் சிறு வட்டத்தைச் சுற்றித் தொங்கும் அட்டைத் துண்டுகளை ஒரு புறமாகப் பனை ஓலைக் காற்றாடியை மடித்துச் சுழல வாகாய்ச் சுற்றச் செய்வதுபோல ஒரு முனையை மடித்துமடித்துவிடுங்கள். இந்த அட்டைக் காற்றாடியை நீண்ட ஊசியால் செருகிக் கையில் பிடித்துக் கொண்டு சுழலும் மின் விசிறிக்குக் கீழே பிடித்தால் வேகமாகச் சுழலும்.

ஆனால், நாம் செய்வது காற்றாடியல்லவே! நெருப்பாடியல்லவா?

நீண்ட இரும்பு ஊசியில செருகிய நம் அட்டைக் காற்றாடியைக் காற்று இல்லாமல் சுழலச் செய்வது எப்படி? ஊசியின் அடிப்புறத்தைக் கார்க்கிலோ, வேறு சிறு மேஜைத் துவாரத்திலோ செருகிவிடலாம். காற்றாடி கீழே இறங்காதபடி ஊசி, நுனியிலிருந்து அடிவரை கனமாகப் பருத்து இருக்க வேண்டும். இப்போது ஊசியை மெழுகுவர்த்தியாலோ வேறு விளக்காலோ நீண்ட நேரம் சூடேற்றினால் போதும். நன்றாகச் சூடேற ஏற அட்டைக் காற்றாடி அழகாய்ச் சுழலும் — தவறு — நெருப்பாடி நன்றாகச் சுழலும்! தேவை, பொறுமை!

போலீசுக்குப் பயந்தவர் யார்?

அழும் குழந்தையைத் •தொட்டிலில் போட்டுத் தூங்கவைக்க முயல்றாள் தாய். தாலாட்டுப் பாடித் தூங்கவைக்கத் தெரியாத அவள், ஏதேதோ சொல்லிக் குழந்தையை மிரட்டினாள். கடைசியாக, நீ "இப்படியே அழுதுக் கிட்டிருந்தால் போலீஸ்காரரைக் கூப்பிட்டுடுவேன். போலீஸ்! போலீஸ்!" என்று சற்று உரக்கவே கூவிவிட்டாள்.

அடுத்த நிமிஷம் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தாள். தாய் எதிரே ஒரு போலீஸ்காரர் நின்றார். "என்னம்மா, என்ன விஷயம்? எதற்காக அழைத்தீர்கள்?" என்று கேட்டார். தாய் போலீஸ்காரரைக் கண்டு பயந்து விட்டாள். ஆனால், குழந்தை போலீஸ்காரரின் தொப்பியையும், உடுப்பையும், மீசையையும், பெல்டையும்' பார்த்து ஆனந்தக் கூத்தாடியது.

கொத்தமங்கலம் சுப்பு ஒரு கூட்டத்தில் பேசக் கேட்டவர்: ரிஷபம்



சின்னன் சொன்ன தீர்ப்பு

எம்.ஆர்.ராஜன்



பள்ளிப்பட்டு, தாழம்பட்டு, பனப்பட்டு, பாப்பாரப்பட்டு, தென்னம்பட்டு இன்னும் சுற்று வட்டாரத்தில் உள்ள பத்துப் பதினைந்து கிராமங்களில் 'பச்சை'யைத் தெரியாதவர்கள் இடையாது. பச்சையப்பனைச் செல்லமாகப் பச்சை என்று அழைப்பது வழக்கம்.

பச்சை ரொம்ப நல்லவன். நாணயமானவன். சொன்ன சொல் தவறாதவன். பேராசை எண்ணமில்லாதவன். சலவைத் தொழில் செய்து பிழைத்து வந்தான். அவனிடம் ஒரே ஒரு கழுதை இருந்தது. அதிகாலையில் கழுதையை ஓட்டிக் கொண்டு காட்டாற்றுக்குப் போவான். ஆறு கல் தொலைவில் இருந்தது அந்தக் காட்டாறு.

கிராமம் கிராமமாகச் சென்று, அழுக்குத் துணிகளை வாங்கி வந்து, காட்டாற்றில் சலவை செய்து ஒரு துணிக்கு இருபது பைசா விதம் வாங்கிப் பிழைத்து வந்தான்.

அவனுக்கு யசோதா என்று ஒரு மனைவி. அவளும் பச்சை கூடவே ஆற்றுக்குப் போய் உச்சி வெயிலுக்குள் துணிகளை வெளுத்து வர உதவுவாள். அக்கம் பக்கத்துக் கிராமத்து ஜனங்களுக்கு அவனை ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

பச்சையைப்போலவே பழனி என்பவனும் சலவைத் தொழில் செய்பவன் தான். பட்டணத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு வந்துவிடவே, பழனி தன் கிராமமாகிய மாம்பட்டிக்கு வந்து சலவைத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தான். அவன் பேராசை பிடித்தவன். ஒரு நாள் ஆற்றங்கரையில் பிச்சையிடம் பேச்சுக் கொடுத்தான். ''இதோபாரு பிச்சை. இந்தப் பத்துப் பதினைந்து கிராமங்களுக்கு நானும் நீயும்தான் சலவை செய்து கொடுக்கிறோம். விலைவாசி எல்லாம் ஏறிக்கிட்டே போகுது. நீ இன்னும் துணிக்கு இருபது பைசாவே வாங்கிக்கிட்டிருக்கே. உன்னாலே நான் சலவைக் கூலியை ஏற்ற முடியவில்லை. அதனாலே நாம ரெண்டு பேரும் சேர்ந்து ஒன்னாக் கூலியை ஏற்றிட்டா, நமக்கு நெறைய லாபம் கிடைக்கும். நம்மை விட்டால் இந்தக் கிராமங்களுக்கும் வேறே ஆளு கிடையாது. என்ன சொல்றே?''

பச்சை பதில் சொன்னான்: ''நம்மை விட்டா வேற ஆள் இல்லேங்கிற காரணத்தினாலே நாம ஒரேயடியா கூலியை ஏற்றிக் கேட்கிறது தப்பு. நாலு மாசம் முன்னாலேதான பதினேழு பைசாவிலிருந்து இருபது பைசாவா உயர்த்தினேன்....''

பழனிக்குக் கோபம் வந்தது. ''அப்படியா...இனிமே நீ எப்படித் தொழில் செய்து பிழைக்கிறேன்னு பார்க்கிறேன்.'' என்று மிரட்டி விட்டுப் போய் விட்டான்.

இரண்டு நாட்களாயிற்று. பச்சைக்குக் காய்ச்சல் கண்டது. தொழிலுக்குப் போக முடியவில்லை. ஆனால், பள்ளிப்பட்டுக் கிராமத்துப்பெரிய தம்பி முதலியார் வீட்டில், பெரிய பெண்ணுக்குக் கல்யாணம். நிறைய அழுக்குத் துணிகள், தலையணை உறை, பெட்ஷீட், ஜமுக்காளம் இன்னும் என்னென்னவோ சலவை செய்து தரவேண்டி யிருந்தது. பச்சை தன் மனைவி யசோதையை ஆற்றுக்கு அனுப்பி வைத்தான். யசோதை, பாவம், தனியாளாய் அத்தனை துணிகளையும் துவைத்துக் காய வைத்து, காவல் இருந்தாள். வெய்யில் சற்றுக் கடுமையாக இருக்கவே ஒரு புங்க மரத்தடியில் கழுதையைக் கட்டி விட்டுத் தானும் படுத்தாள். நிறையத் துணிகளைத் துவைத்த களைப்பில் சிறிது கண்ணயர்ந்தாள். இதுதான் தக்க சமயம் என்று எண்ணி, சிறிது தூரத்தில் துணி துவைத்துக் கொண்டிருந்த பழனி மெதுவாக வந்து பச்சையின் கழுதையை அவிழ்த்து ஓட்டிக் கொண்டு போய்த் தன் வீட்டுக் கொட்டிலில் மறைத்து வைத்து விட்டான்.

கழுதையைக் காணுமென்று பச்சை தன்னிடம் வருவான். அப்போது மிரட்டி, ''வழிக்கு வா. இல்லையானால் கழுதையைக் கொன்று விடுவேன்'' என்று பயமுறுத்தலாம் என எண்ணியிருந்தான். ''அப்படிக் கழுதையைத் தேடி வரவில்லையானாலும்கூட, கழுதை இல்லாமல் பச்சையால் நிறையத் துணி சலவைக்கு எடுக்க முடியாது. எல்லோரும் என்னிடம்தான் துணி போடுவார்கள். நான் கூலியை ஏற்றி விடுவேன்...பணக்காரனாகலாம்'' என்று தனக்குள் நப்பாசை கொண்டான்.

ஒரு வாரமாயிற்று. கழுதையைக் காணாமல் பச்சை ரொம்பவும் வருத்தப்பட்டான். அவனுக்குப் பழனிதான் கழுதையைத் திருடியிருப்பான் என்று புரிந்து விட்டது.

பஞ்சாயத்துக்காரர்களிடம் பிராது கொடுத்தான். வழக்கு நடந்தது.

பழனி, தான் பச்சையின் கழுதையைத் திருடவில்லை என்றும், தன் கொட்டிலில் உள்ள கழுதை தன் மைத்துனன் கொடுத்த கழுதை என்றும் சொன்னான். கழுதையின் காதில் உள்ள ஓட்டை, முதுகில் உள்ள சூடு போட்ட அடையாளம் எல்லாவற்றையும் சொல்லி, அது தன் மைத்துனனின் கழுதையே என்று வாதாடினான்.


பச்சை தன் கழுதைக்கு என்னென்ன அடையாளங்களைச் சொன்னானோ, அதே அடையாளங்களைப் பழனியும் சொல்லவே பஞ்சாயத்துக்காரர்கள் தீர்ப்புச் சொல்ல முடியாமல் தவித்தார்கள்.

பஞ்சாயத்து கூடிய இடத்துக்குக் கொஞ்சம் தள்ளி சின்னான் என்ற சிறுவன் ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தான். வழக்கையும் கவனித்துக் கொண்டிருந்தான். பஞ்சாயத்துக்காரர்கள் தீர்ப்புச் சொல்ல முடியாமல் தவிப்பதைக் கண்டான்.

''ஏங்க... இந்த வழக்குக்குத் தீர்ப்பு சொல்ல இப்படி முழிக்கிறீங்களே... தீர்ப்பை நான் சொல்லவா?'' என்று கேட்டான். பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'பெரியபெரிய மனிதரெல்லாம் முழிக்கிறோம். ஒரு மாட்டுக்காரப் பையன் தீர்ப்புச் சொல்வதாவது!' என்று நினைத்தனர்.

ஆனால், நாட்டாண்மைக்காரர் மட்டும் 'சரி' என்று ஒப்புக்கொண்டார். ''சின்னப் பையனானாலும் புத்தி சில



மனிதனும் பறவையும் — உடல் வெப்ப நிலை

மனிதனுக்கும் விலங்குகளுக்கும்உடல் வெப்ப நிலை 98.4 டிகிரி பாரன்ஹீட். மனிதனுக்கு 106 டிகிரி இருந்தால், காய்ச்சல் அதிகமாகிப் பிதற்றத் தொடங்கி விடுவான்.

ஆனால், பறவைகளின் உடல் வெப்ப நிலை மனிதனை விடக் குறைவாக இருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. 104 முதல் 110 டிகிரி பாரன்ஹீட் வரை பறவைகளின் உடல் வெப்ப நிலை இருக்கும்!

நேரங்களில் சமயோசிதமாகச் செயல்படும். எனவே அவன் சொல்லட்டும்'' என்று அனுமதி வழங்கிவிட்டார்.

சின்னான் கழுதையையும் ஒரு அழுக்கு மூட்டையையும் தன்னிடம் தருமாறு கேட்டான். கொடுத்தார்கள். கிராமத்து ஜனங்களெல்லாம் என்ன நடக்கப் போகிறதென்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். சின்னான் அழுக்கு மூட்டையைக் கழுதையின் மீது வைத்தான். கழுதை தானாகவே நேராக நடந்து, பச்சை எந்தக் கல்லில் துணி துவைப்பானோ அங்கு போய் நின்றது. பச்சையை அழைத்து துவைக்கச் சொன்னான். துவைத்து உலர்த்திய துணிகளைக் கட்டினான். கழுதை மீது வைத்தான். கழுதை நேராகப் பச்சை வீட்டு வாசலில் வந்து நின்றது. எல்லோரும் பின்னாடியே தொடர்ந்து வந்தார்கள்.

பச்சை வீட்டு வாசலில் சின்னான் எல்லோரையும் கூட்டி நிறுத்தினான்.

''இதோ என் தீர்ப்பு: இந்தக் கழுதை பச்சையுடையதுதான். விலங்குகளுக்கு மனிதனைப் போல் பழகின இடத்துக்குத் துரோகம் செய்யத் தெரியாது. பொய் சொல்லித் திருடத் தெரியாது. அதனால்தான் தினமும் பழகிப்போன கல்லுக்கு அருகே போய் நின்றது. அங்கிருந்து கிளம்பியதும் நேராக இங்கு வந்து நின்றது. இது பழனியின் மைத்துனனின் கழுதையாக இருந்தால் பழனியின் வீட்டுக்குப் போய் நின்றிருக்கும், இல்லையா?''

பஞ்சாயத்துக்காரர்கள் சின்னான் சொன்ன தீர்ப்பையும், அவன் தீர்ப்பளித்த விதத்தையும் கண்டு அசந்து போய்விட்டனர்.

பழனி வெட்கிப்போய் ஊரைவிட்டே ஓடி விட்டான்.

அது முதல் எந்தச் சிக்கலான வழக்கானாலும், அது தீர்ப்புக்குச் சின்னானிடம் வந்துவிடும்.

''சிக்கலான வழக்குக்கு ஒரு சின்னான்'' என்ற பெயரே வந்துவிட்டது.

அடுத்த வழக்கு என்ன? பிறகு பார்ப்போம்!

கண்ணன்: என்னம்மா இது? அரிசி, பச்சைக் காய்கள் இவைகளை வைச்சு சாப்பிடச் சொல்றியே!

அம்மா: பல் தேய்ச்சுட்டு டிபன் சாப்பிட வாடா என்றால் "யானை, பூனை, ஆடு, மாடு எல்லாம் பல் தேய்க்குதா?" என்று கேட்டாயே, அவைகள் பல்லும் தேய்ப்பதில்லை; சமைச்சுச் சாப்பிடறதும் இல்லை. பச்சையாத்தான் சாப்பிடும். நீயும் பல் தேய்க்காததால் அவற்றைப் போலவே சாப்பிடு!

-லலிதா செல்லப்பா





கண்ணன்: பாபு கதவைப் 'படீர்'என்று அடிச்சுச் சாத்தியதற்காகக் கோவித்துக் கொண்டு கோபு அவன் வீட்டுக்குப் போறதில்லை.

முரளி: கதவைச் சாத்தினால் ஏன் கோவிச்சுக்கணும்? இதில் என்ன தப்பு?

கண்ணன்: கோபு அவன் வீட்டு வாசல்படி ஏறும்போது அல்லவா பாபு கதவைப் படீர்னு அடிச்சுச் சாத்தினான்.

-லலிதா செல்லப்பா

அனுமார் பொட்டு

மாயூரன்



வரதனுக்குத் தான் எங்கேயோ போவது போல் தோன்றியது. கண்ணைத் திறக்க முயன்றான். ஊஹூம். முடியவில்லை. 'எங்கே போகிறோம்? ஏதேனும் ஊர்தியில் பறக்கிறோமா?' தலை மிகவும் கனமாக ஏதோ சுழல்வது போல் தோன்றியது. என்ன? தனக்கு என்னவாயிற்று? மிகவும் பிரயாசைப்பட்டுக் கண்ணை மெதுவாகத் திறந்தான். எல்லாம் மங்கலாக, ஏதோ பனி மூட்டம் அல்லது புகைக்கு நடுவே நடைபெறுவது போலத் தெளிவில்லாமல் இருந்தது. தான் ஏதோ சைக்கிள் பின் சீட்டில் உட்கார்ந்துகொண்டு போவது மட்டும் புரிந்தது. முதுகில் புத்தகப் பை அழுத்துவதையும், உணர முடிந்தது.

சட்டென்று வரதனுக்கு ஞாபகம் வந்து விட்டது. காலையில் பள்ளிக் கூடம் வரும்போது யாரோ இரண்டு பேர் அவனை வழியில் சந்தித்தார்கள். ''பள்ளிக் கூடத்திற்குத் தனியாகப் போகாதே. இரண்டு மூன்று பேராய்ச் சேர்ந்து போங்கள்'' என்பார் அப்பா அடிக்கடி. ஆனால், அன்று அவன் தனியாகத்தான் கிளம்பினான். பெருமாள் கோவிலைத் தாண்டி வரும்போது யாரோ இரண்டு பேர் சைக்கிளில் வந்தார்கள். ''தம்பி, ஒரு நிமிஷம் நில்லேன்'' என்றான் அவர்களில் ஒருவன். வரதன் நின்றான்.

''போஸ்டாபீஸ் எங்கே இருக்கு?'' என்று கேட்டான் இன்னொருவன். வரதன் வழியைச் சொன்னான்.

''கொஞ்சம் கூட வந்து காட்டேன். உதவியாக இருக்கும்'' என்றான் அந்த ஆள்.

''ஊஹூம். எனக்குப் பள்ளிக் கூடத்துக்கு நேரமாகி விட்டது. என்னால் வர முடியாது'' என்று பதில் சொன்னான் வரதன்.

''என்னைப் பார், சைக்கிளில் ஏறிக் கொள். நானே உன்னை ஸ்கூலில் விட்டுவிடுகிறேன்'' என்றான் அந்த ஆள்.

''ஊஹூம், வேண்டாம்'' என்று மறுத்தான் வரதன்.

''பரவாயில்லை. ஏறு... சைக்கிளில் ஏறு'' என்று வற்புறுத்தினான் அந்த ஆள். அதற்குள் அந்த இன்னொரு ஆள் வரதனின் தலையை வருடி, ''சைக்கிளில் ஏறிக்க'' என்றான். முதல் ஆள் மீண்டும் வரதனின் கண்களை ஊடுருவுவது போல் பார்த்துவிட்டு, ''உம், சைக்கிளில் ஏறு'' என்றான். பிறகு நடந்தது எதுவும் வரதனுக்கு நினைவில்லை. தான் எப்படி சைக்கிளில் ஏறினோம், எப்படி உட்கார்ந்தோம், எதுவும் அவனுக்கு நினைவில்லை. இப்போது சைக்கிளில் எங்கேயோ வேகமாகப் போவது மட்டும் புரிந்தது.

ஒருவேளை தன்னை எங்கேயாவது கடத்திக் கொண்டு போகிறார்களோ? வரதனுக்கு உடலெல்லாம் குப்பென்று வியர்த்து விட்டது.

''ஏய் நிறுத்து, சைக்கிளை நிறுத்து'' என்று கத்த நினைத்தான். ஊஹூம். பயத்தில் வார்த்தைகளே வெளியில் வரவில்லை. அடிவயிற்றில் 'சுரீர்' என்று வலித்தது. அழுகை வேறு வந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு மிகவும் பிரயாசையுடன், தான் எங்கே போகிறோம் என்று பார்த்தான். சைக்கிள்

பீச் ரோடில் வேகமாகப் போவது புரிந்தது. தான் ஏமாற்றப்பட்டு எங்கேயோ கடத்திச் செல்லப்படுகிறோம் என்பதும் புரிந்தது. 'இப்போது என்ன செய்யலாம்?' சைக்கிள் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. குதித்தால் அடிபடலாம். தவிர, கார்களும் பஸ்களும் வேறு பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்தன. என்ன செய்யலாம், ஏதாவது உடனடியாகச் செய்தாக வேண்டும். வரதன் ஒரு முடிவுக்கு வருவதற்குள், சைக்கிள் சாலை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த ஒரு வேனுக்கு அருகில் நின்றது.

''பையன் மயக்கமாக இருக்கிறானா?'' —ஒரு கரகரத்த குரல்.

''உம், படுக்கப் போட்டால் மூன்று மணி நேரத்துக்கு எழுந்திருக்க மாட்டான்.''

''எங்கே இருந்து கொண்டு வருகிறாய்?''

''மயிலாப்பூரிலிருந்து...''

''யாரும் கவனிக்கலையே?''


''இல்லீங்க.''

''சரி, பையனை இறக்கி வண்டிக்



குள் மத்த பசங்களோடு படுக்க வை. திருவல்லிக்கேணிப் பக்கம் போனவன் இன்னும் வரவில்லை. வந்துவிட்டால் வண்டியை எடுத்துடலாம்.''

வரதனுக்கு இப்போது எல்லாம் தெளிவாகப் புரிந்து விட்டது. ஏதோ ஒரு பிள்ளை பிடிக்கும் கோஷ்டி. திட்டமிட்டுப் பள்ளிக்கூடம் போகும் பசங்களைப் பிடிக்கிறார்கள். அவர்களிடம் அவனும் இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறான். தப்பித்துக் கொள்ளவேண்டும் என்றால் இப்போது குதித்துக் குறுக்கே சந்தில் ஓடிவிடலாம். ஆனால், அந்த வேனில் தன்னைப் போல் எத்தனை பேர் மாட்டிக் கொண்டிருக்கிறார்களோ! பாவம், அவர்களையும் காப்பாற்ற வேண்டும். வரதன் காரின் நம்பரைக் கவனித்து மனத்தில் பதிய வைத்துக் கொண்டான். இதற்குள் அந்த ஆள் அருகில் வரவே மயக்கத்தில் இருப்பது போல் பாசாங்கு செய்தான். வரதனைச் சைக்கிளில்



இருந்து இறக்கி மெல்ல வானில் ஏற்றினான் அந்த ஆள். பட்டப் பகல் வேளை. நட்ட நடுச் சாலை. சென்னை நகரில் இந்த அக்கிரமம் நடைபெறுகிறது. இது யார் கண்ணிலும் படவில்லை!

வரதன் வேனுக்குள் இருந்த மற்ற சிறுவர் சிறுமிகளைப் பார்த்தான். எல்லாரும் அவனைப் போலவே 12லிருந்து 15 வயதுக்குள்தான் இருப்பார்கள். தங்களுக்கு என்ன நடக்கிறது என்பது அவர்களுக்கு இன்னும் தெரியாது. பாவம், அவர்களுடைய பெற்றோர்கள், குழந்தைகள் பள்ளிக் கூடம் போயிருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். மாலை ஐந்து மணிக்கு மேல் தான் குழந்தைகளைக் காணோமே என்று தேடத் துவங்குவார்கள். அதற்குள் இந்த வண்டி எங்கே போய்விடுமோ? என்ன நேருமோ? எல்லாரையும் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டும்.

வெளியே பேச்சு அரவம் கேட்டது. கார் கதவு திறக்கப்பட்டது. மயங்கியவன் போலவே கிடந்து வரதன் மெல்லக் கவனித்தான். திறந்த கதவின் வழியே ஒரு சிறுமியை உள்ளே படுக்க வைத்தார்கள். பிறகு கதவு மூடப்பட்டது. முன் பக்கத்தில் அந்த ஆட்கள் உட்கார்ந்து கொண்டார்கள். அந்த வேனோ மிகப் பழையது. கதவு நன்றாக மூடப்பட்டிருந்தாலும் கதவுக்குக் கீழே சிறிது இடைவெளி தெரிந்தது. அதன் வழியாகச் சாலையைப் பார்க்க முடிந்தது.

"எல்லாப் பையன்களுக்கும் இலவச பல்பொடி 32 பாக்கெட் தந்தார்கள்! உனக்குமட்டும் 24 பாக்கெட்தானா?"

"எனக்கு 8 பல்லு விழுந்துவிட்டதே, நயினா!"



என்ன செய்யலாம் என்று வரதன் யோசிப்பதற்குள் அந்த வண்டி புறப்பட்டு விட்டது. இப்போது முன் பக்கம் டிரைவர் சீட்டுக்கு அருகே பேச்சுக் குரல் கேட்டது. வரதன் உற்றுக் கவனித்தான்.

"இப்ப நேராகச் செம்பியம் போய் அப்புறம் ஹைதராபாத் எக்ஸ்பிரசுக்குப் போகணும்...." என்ற கரகரத்த குரல் கேட்டது.

வரதன் தன் புத்தகப் பையில் கை விட்டு மெதுவாக ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தான். அதிலிருந்து சில காகிதங்களைப் பிய்த்துக் கிடுகிடென்று எழுத ஆரம்பித்தான். "எஸ். ஓ. எஸ். உங்கள் கவனத்துக்கு. உடனே போலீஸ் உதவி தேவை. R. T. M. 7534 என்ற வேனில் சில குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். அவசரம். உடனே போலீஸ் உதவி தேவை." இந்த மாதிரி எழுதி ஒவ்வொரு காகிதமாக இடைவெளி வழியாக வெளியே தள்ளினான்.

அந்த வண்டி ஏதோ ஓர் இடத்தில் நின்றது. வரதன் இடைவெளி வழியாகப் பார்த்தான். சாலை தெரிந்தது. ஏதேனும் சிக்னலாக இருக்கும். பின்னால்கூட வண்டிகள் நிற்கலாம். எப்படியும் இங்கே போலீஸ் காவலர்கள் இருப்பார்கள். வரதன் இன்னொரு காகிதத்தை எடுத்தான். "போலீசார் பார்வைக்கு... R. T. M. 7534 என்ற வேனில் பத்துக் குழந்தைகள் மயக்கம் கொடுத்துக் கடத்தப் படுகிறார்கள். வண்டி இப்போது செம்பியம் செல்கிறதாம். பிறகு ஹைதராபாத் எக்ஸ்பிரஸுக்குக் கொண்டு செல்லப் போகிறார்கள். நான் அந்தக் காரிலிருந்து ஆர். வரதராஜன் என்ற மயிலாப்பூர் மாணவன் எழுதுகிறேன். எஸ். ஓ. எஸ். உடனே வந்து காப்பாற்றுங்கள்." வண்டி கிளம்பிச் சிக்னலைக் கடக்கும் நேரம் பார்த்து அந்தக் காகிதத்தை வெளியே வீசினான் வரதன்.

வரதன் முயற்சி பலித்து விட்டது. அதிர்ஷ்ட வசமாக அவன் வீசிய அந்தக் காகிதம் அங்கே போக்கு வரத்தைச் சரிபார்த்துக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மீது வந்து மோதியது. காகிதத்தை எடுத்து யதேச்சையாகப் பார்த்த இன்ஸ்பெக்டர் எஸ். ஓ. எஸ். என்ற பெரிய எழுத்துக்களைப் பார்த்ததும் அதைப் பரபரப்புடன் படித்தார். உடனே கண்ட்ரோல் நிலையத்தோடு தொடர்பு கொள்ள ஓடினார்.

வரதனுடைய முழு நோட்டு காலியாவதற்கும் அந்த வேன் நக

ரத்தைக் கடந்து ஏதோ ஒரு தெருவில் ஒரு வீட்டின் முன் நிற்பதற்கும் சரியாக இருந்தது. யாராவது வந்து கதவைத் திறப்பார்கள் என்று எதிர்பார்த்தான் வரதன். யாரும் வரவில்லை. பிறகு சுற்று முற்றும் பார்த்தான். வேறு அருகில் யாரும் இல்லை. அந்த வீட்டுக்குள் போயிருப்பார்கள் போலிருக்கிறது. பழைய ஓட்டு வீடு. மெல்லக் கதவைத் திறந்து கொண்டு வேனின் முன் பக்கம் வந்தான். உள்ளே டிரைவர் சாவியை விட்டு விட்டுப்போயிருப்பது தெரிந்தது. வரதன் சட்டென்று சாவியை எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டான்.

''யாரடா அது? வண்டிக் கிட்ட என்ன செய்யறே?'' குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் வரதன். கரகரத்த குரல்காரன் வந்து கொண்டிருந்தான். அருகில் வேறு ஒரு ஆள் புதிதாக இருந்தது.

''எங்க அப்பாரு வண்டி மாதிரி இருந்திச்சுங்க... அவரேதான் வந்திருக்காராங்காட்டியும்னுபார்த்தேன்.''

''யாருடா உங்கப்பாரு!''

''கம்பெனியிலே டிரைவரா இருக்காருங்க....''

அதற்குள் அந்த ஆள் அருகில் வந்து விட்டான். வரதனுடைய சீருடையும் பாட்ஜும் அவனுக்குச் சந்தேகத்தை வரவழைத்தன. கையைப் பிடித்துக் கொண்டான். ''டேய்... உண்மையைச் சொல்லு.... நீ எங்கிருந்து வர்றே? இந்தப் பக்கத்துப் பையன் மாதிரி தெரியல்லியே'' என்றான். அதே சமயம் அந்த வீட்டுக்குள்ளிருந்து மயிலாப்பூரில் வரதனைப் பிடித்த அந்தக் கைலிக்காரன் வெளியே வந்தான்.

''அண்ணே, இவன் எப்படி வெளியிலே? மயிலாப்பூரில புடிச்ச பய.... மயக்கம் போயிடுச்சா!'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் கைலிக்காரன்.

இனி தாமதித்தால் ஆபத்து என்று உணர்ந்த வரதன் சட்டென்று தன்னைப் பிடித்திருந்த கையை 'வெடுக்' கென்று கடித்து விடுவித்துக் கொண்டு எதிரே தெரிந்த சந்தில் அம்பு போல விரைந்தான்.

''பிடி, அவனை விடாதே'' என்று கடிபட்ட தன் கையைப் பிடித்துக் கொண்டே கத்தினான் கரகரத்த குரல். மூவரும் வண்டியில் ஏறி அமர்ந்தனர். சாவி இல்லை என்று அறிந்ததும் அந்தச் சந்தில் துரத்திக் கொண்டு ஓடினார்கள். அந்தச் சந்து ஒரு வீதியில்



முதலில் சென்றது?

ஆசிரியர்: சந்திர மண்டலத்துக்கு முதலில் பறந்து சென்றவர்கள் அமெரிக்கவாசிகளா? ரஷ்யவாசிகளா?''

மாணவன்: ''விலைவாசிதான்!''

—ஆர். அரிகோபி

கொண்டு விட்டது. பஸ் ஸ்டாப்பிலிருந்து உடனே கிளம்பத் தயாராக இருந்த ஒரு பஸ்ஸில் ஓடிவந்து முன் பக்கம் ஏறினான் வரதன்.

''டிரைவர் சார், என்னைக் காப்பாற்றுங்கள். மூணு பேர் என்னைத் துரத்திக்கிட்டு வராங்க. சீக்கிரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டுங்க, ப்ளீஸ்'' என்றான்.

டிரைவர் ஓர் இளைஞர். வரதனைப் பார்த்தார். அவனுடைய ஸ்கூல் ட்ரஸ்ஸும் இரைக்க இரைக்க ஓடிவந்த தோற்றமும் அவரை நம்ப வைத்தன.

''பயப்படாதே தம்பி, நாங்க பார்த்துக்கறோம்.'' என்றார். பிறகு கண்டக்டர் பக்கம் திரும்பி, ''மணி, இந்தப் பையனைத் துரத்திக்கிட்டு மூணு பேர் வராங்களாம். பிடிச்சுப் பஸ்ஸிலே போடு... போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்றார். அதற்குள் வரதனைத் துரத்திக் கொண்டு வந்த மூவரும் அதே பஸ்ஸில் அவசர அவசரமாக ஏறினார்கள். கண்டக்டரும் இதரப் பயணிகளுமாகச் சேர்ந்து அவர்களை அப்படியே பிடித்துக் கொண்டார்கள். பஸ் செம்பியம் காவல் நிலையம் முன் போய் நின்றது.

டிரைவர் வரதனை அழைத்துக் கொண்டு போக, கண்டக்டரும் இதர பயணிகள் சிலரும் அந்த மூவரையும் இழுத்துக் கொண்டு வந்தார்கள். வாசலில் ஜீப் நின்று கொண்டிருந்தது.

''இன்ஸ்பெக்டர் சார், இந்தப் பையன் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்க. இவனையும் இன்னும் பத்துப் பசங்களையும் இந்த மூணு பேரும் கடத்திக்கிட்டு வந்துட்டாங்களாம். இந்தப் பையன் தப்பிச்சு வந்து எங்க பஸ்ஸிலே ஏறி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு விடுங்கன்னு கேட்டுக்கிட்

டான்.'' என்றார் டிரைவர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம்.

''பொய். எல்லாம் கட்டுக்கதை!'' என்றான் கரகரத்த குரல்காரன். அவன் முகம் வெளிறிப் போயிருந்தது.

இன்ஸ்பெக்டர் வரதனைப் பார்த்தார். ''நீதானே மயிலாப்பூர் வரதராஜன்?'' என்று கேட்டார்.

''ஆமாம், சார்!'' என்றான் வரதன் ஆச்சரியத்துடன்.

''நீ கொடுத்த செய்தி கிடைத்து விட்டது. பல திசைகளிலும் ஆள் அனுப்பி யிருக்கிறோம், உன்னையும் அந்தப் பத்துக் குழந்தைகளையும் காப்பாற்ற. அந்த வேனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். சென்டிரல் நிலையத்திலும் பலத்த போலீஸ் காபந்து ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. உன்னுடைய தைரியத்தையும் புத்திசாலித்தனத்தையும்பெரிதும்பாராட்டுகிறேன். இன்னும் சில நிமிஷங்களில் இங்கே கமிஷனரே வர இருக்கிறார்.'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே இரண்டு மூன்று போலீஸ் ஜீப்புகள் வந்து நின்றன.

''இதோ கமிஷனர் வந்து விட்டார்'' என்று கூறி இன்ஸ்பெக்டர் கமிஷனர் முன் சென்று சல்யூட் செய்தார். ''சார், திஸ் ஈஸ் மயிலாப்பூர் வரதராஜன். அந்த மூணு பேர் தான் கடத்திக்கிட்டுப் போக முயற்சி செஞ்சவங்க. அவங்களையும் இந்தப் பையனே ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து விட்டான்!'' என்றார் இன்ஸ்பெக்டர். 'குட்' என்று வரதனைத் தட்டிக் கொடுத்தார் கமிஷனர். கடத்தல் பேர்வழிகள் மூவரும் காவல்காரர்களிடம் மாட்டிக்கொண்டார்கள்.

''உங்க அப்பா அடிக்கடி கிண்டி போவாராமே! என்ன! அவர் ரேஸ் பைத்தியமா?''

''ஊஹும்! அவருக்குக் குழந்தைகள் பார்க்கிலே வேலை''



நடந்ததைச் சுருக்கமாகக் கமிஷனரிடம் கூறிவிட்டு, ''சார், நான் போய் அந்தக் குழந்தைகளைப் பத்திரமாகக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று கிளம்பினார் இன்ஸ்பெக்டர்.

''சார், இதோ அந்த வேனுடைய சாவி!'' என்று தன் சட்டைப் பையிலிருந்து சாவியை ஞாபகமாக எடுத்துக் கொடுத்தான் வரதன்.

குழந்தைகள் எல்லோரும் காப்பாற்றப்பட்டு அவரவர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் பட்டார்கள். மறுநாள் பள்ளிக்கூடத்தில் வரதனுக்கு ஒரே பாராட்டு: புகழ்மாலை.

''அது சரி, அத்தனை பேரும் மயக்கமாக இருந்தபோது, உன்னை மட்டும் அது ஏன் பாதிக்கவில்லை? நீ எப்படிச் சீக்கிரம் மயக்கம் தெளிந்து எழுந்து கொண்டாய்?'' என்று கேட்டான் வரதனின் நண்பர்களில் ஒருவன்.

''அதுதான் அனுமார் பொட்டின் மகிமை!'' என்றான் வரதன்.

''அனுமார் பொட்டா! அப்படி-என்றால்?''

''சில நாட்களுக்கு முன்னால் எங்க வீட்டிற்கு ஒரு பெரியவர் வந்திருந்தார். 'பள்ளிக்கூடம் போகும்போதும், வெளியே போகும்போதும் தினமும் நெற்றியில் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும். சாந்து, சந்தனம், குங்குமம், எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அப்படி வைத்துக் கொண்டால் ஆபத்து எதுவும் வராது' என்று சொன்னார். அவர் அப்போது பொட்டு வைத்துக் கொள்வதற்காக ஒரு அனுமார் இலச்சினையும் கொடுத்தார். புருவங்களுக்கு மத்தியில் அந்தப் பொட்டு இருந்ததால் ஹிப்னடிஸம், மெஸ்மரிசம் எதுவும் முழுமையாக என்னைப் பாதிக்கவில்லை'' என்றான் வரதன்.

''அதற்குத்தான் சொன்னேன், பள்ளிக்கூடம் போகும்போது மூன்று நாலு பசங்கள் சேர்ந்தாற்போல் போங்கடான்னு'' என்றார் அப்பா.

''முன் பின் தெரியாதவர்கள் யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடக் கூடாது: முன் யோசனை இல்லாமல், யார் கூப்பிட்டாலும் அவர்கள் பின்னாடிப் போய்விடக் கூடாது'' என்றார் தாத்தா.

''தினமும் நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டு போகணும்டா, குழந்தை'' என்றாள் பாட்டி.

''அனுமார் பொட்டுத்தானே!'' என்று சொல்லிச் சிரித்தான் வரதன்.

புதிர் மன்றம்

கடத்தூர் நெடுமிடல்

புதிர்–1

அயல் நாட்டு அஞ்சல் தலைகளைத் தொகுப்பதிலும், அயல் நாட்டு நண்பர்களுடன் அஞ்சல் நட்புக் கொள்வதிலும் ஆர்வம் மிகுந்த பாண்டியன் என்னும் சிறுவனுக்கு, மொரீஷியஸ் நாட்டிலிருந்து ஒரு நண்பன் கொஞ்சம் அஞ்சல் தலைகளை அன்பளிப்பாக அனுப்பினான்; இன்னொரு நண்பன் ஈழத்திலிருந்து 24 அஞ்சல் தலைகளை அனுப்பினான். அதற்கு முன்பே பாண்டியனிடம் கொஞ்சம் தலைகள் இருந்தன. இப்பொழுது எல்லாம் சேர்ந்து அவனிடம் உள்ள தலைகளின் எண்ணிக்கை, அவன் முன்பே வைத்திருந்த எண்ணிக்கையைப் போல் இரு மடங்கு ஆகிவிட்டது. இந்த மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி மொரீஷியஸ் நண்பன் அனுப்பியவை. அப்படியென்றால் பாண்டியனிடம் முன்பே இருந்த தலைகள் எத்தனை?

புதிர்–2




கணக்குப் புலி என்னும் சிறுவனை அவன் நண்பன் ஒருவன் வயது என்ன என்று கேட்டபோது, ''எங்கள் வீட்டின் கதவு இலக்கத்தை இரண்டால் பெருக்கினால் இப்பொழுதுள்ள என் வயது கிடைக்கும். இன்னும் மூன்றாண்டுகள் போனால், கதவு எண்ணை மூன்றால் பெருக்கினால் வரும் எண், என் வயதாக இருக்கும்'' என்றான். கணக்குப் புலியின் வயது என்ன?

புதிர்–3

ஒரு கயிற்றை நான்கு சம துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் துண்டின் நீளத்தை விட, மூன்று சம துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் துண்டின் நீளம் ஒன்றரை அங்குலம் அதிகமாக இருக்கும். எனில் முழுக் கயிற்றின் நீளம் எத்தனை அங்குலம்?

புதிர்–4



மேலே படத்தில் உள்ளது எட்டு முனைகளைக் கொண்ட புதிர்க் கோணம் ஆகும். இதில் உள்ள பதினாறு வீடுகளில் 1 முதல் 16 வரையுள்ள எண்களைக் குறிக்க வேண்டும். சதுரத்தின் ஒவ்வொரு பக்கத்து எண்களின் கூட்டுத் தொகை 34 வரவேண்டும். சதுரத்தின் முனைகளில் உள்ள எண்களைக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 34 வரவேண்

டும். அந்த முறையில் எண்களை நிரப்ப உங்களால் முடியுமா?

புதிர்–5

ஒரு வெள்ளரித் தோட்டத்துக்கு மூன்று தோட்டக்காரர்கள். ஒரு நாள் முதல் தோட்டக்காரனின் மனைவி தோட்டத்துக்கு வந்தாள். அங்கே பறித்து வைத்திருந்த பழங்களில் ஒரு பழத்தை எடுத்துத் தன் மகனிடம் கொடுத்துவிட்டு, மீதிப் பழங்களை மூன்ருகப் பிரித்து ஒரு பங்கை எடுத்துக் கொண்டு, மீதி இரண்டு பங்கை வைத்து விட்டுப் போனுள்.

இரண்டாவது தோட்டக்காரனின் மனைவி வந்தாள். மீதி உள்ளவற்றில்



ஒரு பழத்தைத் தன் தங்கையிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு, மீதியை மூன்ருகப் பிரித்து, ஒரு பங்கை எடுத்துக்கொண்டு, இரண்டு பங்கை வைத்து விட்டாள்.

மூன்ருவது தோட்டக்காரனின் மனைவி தன் மகளுடன் வந்தாள். இருந்த பழங்களில் ஒன்றை எடுத்து மகள் கையில் கொடுத்துவிட்டு, மீதியை மூன்ருகப் பிரித்து ஒரு பங்கை எடுத்துக்கொண்டு, இரண்டு பங்கை வைத்து விட்டு வந்து விட்டாள்.

பிறகு மூன்று தோட்டக்காரர்களும் வந்தனர். மீதி இருந்த பழங்களை மிச்சமில்லாமல் மூன்ருகப் பிரித்து எடுத்துக் கொண்டனர். அப்படியானுல் அவர்கள் பறித்த பழங்கள் எத்தனை?

புதிர்–6

ஒரு பண்ணையில் உள்ள எருமைகள் ஒவ்வொன்றும் ஐந்து படி பாலும், பசுக்கள் ஒவ்வொன்றும் ஒரு படி பாலும், ஆடுகள் ஒவ்வொன்றும் அரைப் படி பாலும் கறக்கின்றன. ஒரு நாளைக்கு எல்லாம் சேர்ந்து மொத்தமாக 100 படி பால் கிடைக்கிறது. 100 படி பால் கறக்கும் இந்தக் கால்நடைகளின் கால்களின் எண்ணிக்கையும் நூறுதான்என்று பண்ணைக்காரன் சொன்னுன். அப்படியென்ருல் அவன் வைத்துள்ள எருமைகள் எத்தனை? பசுக்கள் எத்தனை? ஆடுகள் எத்தனை?


விடைகள்:

புதிர்–1: 72 அஞ்சல் தலைகள்

புதிர்–2: கணக்குப் புலியின் வயது 6


புதிர்–3: 18 அங்குலம்

புதிர்–4:



புதிர்–5: பறித்த பழங்கள் 25

புதிர்–6: எருமைகள் 19; பசுக்கள் 4; ஆடுகள் 2



விளையாட வேண்டுமா? இதோ சில யோசனைகள்!

குரங்கு வட்டம்


ஒரு வட்டம். அந்த வட்டத்தைச் சுற்றி இன்னொரு வட்டம். அதற்கு உள் வட்டம் என்று பெயர். உள் வட்டத்தைச் சுற்றி மற்றொரு வட்டம். அதற்கு வெளி வட்டம் என்று பெயர். இந்த ஆட்டத்தில் 9 முதல் 17 பேர் வரை கலந்து கொள்ளலாம்.

வட்டத்தின் நடுவே ஒரு சிறுவன் நிற்கவேண்டும். அப்படி நிற்பவன்தான் குரங்கு!

குரங்காக யார் இருப்பது? ஆட்டத்தில் கலந்துகொள்ள வரும் அனைவர் பெயர்களையும் சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு, முதலில் எடுக்கின்ற சீட்டில் வரும் பெயரை உடைய சிறுவன் தான் குரங்காக வேண்டும்!

மற்றவர்கள் இரண்டு இரண்டு பேராகக் கையைப் பிடித்துக்கொண்டு குரங்கைச் சுற்றி வட்டமாக நிற்கவேண்டும். அப்போது அவர்கள் பின்வரும் பாடலைப் பாடுவார்கள்:

வாலு நீண்ட குரங்கு ஒன்று
  வனத் தினிலே இருந்ததாம்.
சோலைக் குள்ளே பழங்கள் தின்று
  சுற்றிச் சுற்றி வந்ததாம்.
நீதில் லாத நண்பன் தன்னைத்
  தேடித் தேடிப் பார்த்ததாம்.
பாதை யிலே வந்தான் ஒருவன்.
  'டக்'கென் றவனைப் பிடித்ததாம்!



பாட்டு முடிந்தவுடனே சுற்றி நடந்து வருபவர்கள் ஒவ்வொருவரும் தன் நண்பனின் கையை விட்டு விட்டு, வேறொரு நண்பனை அடைய வேண்டும். அதாவது வெளி வட்டத்தில் உள்ளவன், தனக்கு முன்னேயுள்ள உள் வட்டத்தில் இருப்பவன் இடத்தைப் பிடிக்க வேண்டும். அந்த உள் வட்டத்தில் இருப்பவன் பக்கவாட்டில் வெளிப்புறமாக நகர்ந்து, தனக்குப் பின்னால் உள்ள வெளி வட்டத்தில் காலியாகும் இடத்தைப் பிடிக்க வேண்டும். (உதாரணம்: வெளி வட்டத்தில் உள்ள 'B', உள் வட்டத்தில் உள்ள 'C'யின் இடத்துக்குச் செல்வான். உள் வட்டத்தில் உள்ள 'C' வெளி வட்டத்தில் உள்ள 'B'யின் இடத்துக்குப் போவான். இப்படி ஒவ்வொருவரும் இடம் மாறும் வேளையில், தயாராக உள்ள குரங்கு, காலியாகும் ஏதாவது ஓர் இடத்தைத் தாவிப் பிடிக்கப் பார்க்கும். குரங்கு, முதலில் ஓர் இடத்தைப் பிடித்து விட்டால், அந்த இடத்தை இழந்தவன், நடுவில் வந்து குரங்காக நிற்க வேண்டும்.


ஆட்டக்காரர்கள் முன்பு போல இரண்டு இரண்டு பேராகக் கைகோத்துக்கொள்ளுவர்; பாட்டுப் பாடுவர், வட்டமாக நடந்து செல்வர். ஆட்டம் தொடரும்.

நரியும் முயல்களும்

விளையாடும் இடத்தை மூன்று பகுதிகளாகக் கோடு போட்டுப் பிரித்துக் கொள்ள வேண்டும். நடுவில் உள்ள பெரிய பகுதி காடு. அதில் நிற்பவன் தான் நரி. இரு கோடியிலும் உள்ள சிறு பகுதிகளும் வீடுகள். அவற்றில் மற்றவர்கள் இரு பகுதிகளாகப் பிரிந்து இருப்பார்கள். அவர்கள்தான் முயல்கள்.

ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குக் காட்டு வழியாக முயல்கள் வேகமாக ஓடவேண்டும். அப்படி ஓடும் போது முயல்களை நரி பிடிக்க முயலும். ஏதேனும் ஒரு முயலைப் பிடித்து விட்டால், அப்படிப் பிடித்ததும் 1, 2, 3

என்று 10 வரை எண்ணும். பத்து எண்ணுவதற்குள் நரியின் பிடியிலிருந்து அந்த முயல் தப்பித்துச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால், முயல் தோற்று நரியாக மாற வேண்டியதுதான்! பிறகு இரு நரிகளும் சேர்ந்து காட்டின் குறுக்கே ஓடும் மற்ற முயல்களைப் பிடிக்க வேண்டும்.



நரி காட்டிலேயே இருக்க வேண்டும்: வீட்டுக்குள் நுழையக் கூடாது. ஓடும் முயல்களும் முன்னோக்கித்தான் ஓட வேண்டும். பின்னோக்கி ஓடக் கூடாது.

கடைசிவரை பிடிபடாத முயல் தான் சிறந்தது என்ற பாராட்டைப் பெறும்.

இந்த விளையாட்டுக்களைச் சிறுவர்களும் ஆடலாம்; சிறுமிகளும் ஆடலாம்.


(அடுத்த இதழில் மேலும் சில யோசனைகள்)

—சித்ர ரதன்

கண்ணன்: போர்டில் 6 என்று எழுதிவிட்டு அதையே ஏண்டா பார்க்கறே?

முரளி: ஆறு ஓடும் என்றாரே, வாத்தியார். ஓடுகிறதா என்றுதான் பார்க்கறேன்!

— லலிதா செல்லப்பா





கண்ணன்: என் மாமாவின் மூக்கு எட்டாத விஷயங்களே இல்லை. எதுவும் சுலபமாக எட்டிவிடும்!

முரளி: ஆளைப் பார்த்தாலே தெரியுதே. சொல்ல வேறே வேணுமா என்ன?

- லலிதா செல்லப்பா

சிரி சிரியுங்கள்



பாட்டி சொன்ன பதில்

அன்று தைக் கார்த்திகை. அத்தோடு சஷ்டியும் வேறு. திருப்பரங்குன்றம் கோவிலில் கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா? பஸ்ஸிலும், ரயிலிலும் கால் நடையிலுமாக ஜனங்கள் முருகனைத் தரிசிக்கக் குவிந்த வண்ணம் இருந்தனர்.

பக்தர்கள் நல்ல முறையில் தரிசனம் செய்யத் தேவஸ்தானமும் காவல் படையினரும் நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். நடுவே கயிற்றைக் கட்டி ஆண்களையும் பெண்களையும் தனித் தனியே பிரித்து அனுப்பிக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் ஒருவனாக பத்ரியும் நின்று கொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்ல அவன் பொறுமை குறையலாயிற்று. வலது கையில் கட்டியிருந்த கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான். கோவிலுக்குள் நுழைந்து ஒரு மணி நேரத்துக்கு மேலாகி விட்டதே என்று முணு முணுத்தவன், எரிச்சலுடன் பெண்கள் வரிசையைப் பார்த்தான்.

அங்கு அவனது பாட்டி, பெண்கள் கூட்டத்தோடு கூட்டமாக நின்றபடி சஷ்டி கவசத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பத்ரிக்கு ஆத்திரமாக வந்தது. 'நம்ம ஊர் ஜனங்களுக்குக் கொஞ்சமாவது புத்தி கிடையாது. இன்று என் போட்டால், கீழே விழாத அளவுக்கு ஜனக் கும்பல் இருக்கே! நாளை இதே நேரத்தில் இங்கே ஈ, காக்கை கூட இருக்காது. அப்பொழுது இந்த முருகனைப் பார்த்துத் தரிசனம் செய்தால் புண்ணியம் கிடைக்காதா? காலையிலிருந்து எதுவுமே சாப்பிடாமல் பலர் வந்திருப்பார்கள். ஏதாவது சாப்பிட்டிருந்தாலும் இத்தனை நேரம் காத்திருந்ததில் ஜீரணமாகி யிருக்கும். பட்டினிக் களைப்போடு தரிசனம் செய்தால்தான் புண்ணியம் என்று நினைக்கிறார்களே!' என்று அங்கு கூடியிருந்தவர்களுக்காக அனுதாபப் பட்டான்.

முதலில் அவன் பாட்டி அவனைக் கோவிலுக்குத் துணைக்குக் கூப்பிட்டபோது தட்டிக் கழிக்கப் பார்த்தான். ''இன்னிக்கு ரொம்பக் கூட்டமா இருக்குமே பாட்டி. உன்னாலே முடியாது'' என்றான்.

''கூட்டத்தைப் பார்த்தால் முடியுமாடா. மனசிலே உறுதி இருக்கு. முருகனைத் தரிசித்த பிறகுதான் சாப்பாடு'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டாள். பத்ரியும் வேறு வழியின்றிப் பாட்டியைப் பின்தொடர்ந்தான்.

ஒரு வழியாக இருவருமாகச் சந்நிதிக்கு வந்து சேர்ந்தனர். கூட்டம் அதிகமாக இருக்கவே இரண்டு நிமிடங்

"குந்தவை"

களுக்கு மேல் அங்கு இருக்க முடியவில்லை.

ஒரு வழியாக இருவரும் வெளியே வந்ததும் பத்ரி கேட்டான்: ''என் பாட்டி, தரிசனம் ஆச்சா?''

''ஓ! பேஷா. உன் தயவிலே முருகனைக் கண் குளிரத் தரிசனம் பண்ணினேன். ஆனாலும், அப்பப்பா, என்ன கூட்டம்? நெருக்கித் தள்ளி விட்டதே! சந்நிதானத்திலே கூட, கொஞ்ச நேரம் நிற்க முடியவில்லையே!''

''பாட்டி! நான் சொல்கிறேனே என்று தப்பாய் நினைச்சுக்காதே. இன்று முருகனுக்கு அப்படியொன்றும் பிரமாதமான அலங்காரம் இல்லை. தினப்படி செய்கிற அலங்காரம்தான். இன்றைக்கும் அவன் கிருபையும் அப்படித்தான். எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும், இல்லையா? அப்படி இருக்கிறப்போ இது மாதிரிக் கூட்டத்திலே இடித்துப் புரண்டு பல மணி நேரம் காத்துக் கிடந்து தரிசனம் செய்துதான் ஆகணுமா? இப்படி நான் கேட்கிறதாலே எனக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை என்று நினைத்து விடாதே, பாட்டி.''

''பத்ரி! நீ சொல்றது உண்மைதான். ஆனால்,சாதாரண நாளிலே கூட்டமே இல்லாத நேரத்திலே உண்டாகிற ஒரு உணர்ச்சியும், கூட்டத்தோடு கூட்டமா ஒரு விநாடி மட்டுமே அவனைத் தரிசிப்பதால் உண்டாகும் உணர்ச்சியும் வேறு வேறுதான், கண்ணு! அதை வார்த்தையிலே விளக்க என்னாலே முடியலே. அனுபவத்திலேதான் அதைத் தெரிஞ்சுக்கணும். சரி... சரி. வீட்டிற்குப் போகலாம் வா'' என்று பாட்டி நடந்தாள்.

''காலையிலே பத்து மணிக்கு ரசம் சாதம் சாப்பிட்டுப் போன பிள்ளையாண்டானை இன்னும் காணோமே! மணி ஏழாகப் போறது. உடம்பு என்னத்துக்காகும்?'' என்று பாட்டி அங்கலாய்த்துக்கொண்டிருந்தபோது, ''என்ன பாட்டி, என் தலை உருளுது'' என்றவாறே நுழைந்தான் பத்ரி.

''ஏண்டா! காலையிலே போனவன் இப்பத்தான் வர்ரியா? எங்கே ஊரைச் சுற்றினே?''

''நான் அம்மா கிட்டே சொல்லி விட்டுத்தானே போனேன்! சினிமாவுக்குப் போயிட்டு வரேன்.''

''சினிமாவா! ஏண்டா அப்போ ரெண்டு ஷோ பார்த்துட்டு வரயா?''

''இல்லே பாட்டி! ஒரே ஒரு ஷோ தான். இன்னிக்கு சூப்பர் ஸ்டார் சூரியகாந்த் நடிச்ச படம் ரிலீஸாகியிருக்கு. மக்கள் டைரக்டர் மன்னார் சிங் டைரக்ட் செய்தது. கூட்டத்திற்குக் கேட்கணுமா? இரண்டரை மணி ஆட்டத்துக்கு டிக்கட் வாங்க, பத்து மணிக்கே க்யூவில் நின்னு டிக்கெட் வாங்கிப் படம் பார்த்துட்டு வரேன்.''

''அட முருகா! இது என்ன அநியாயம்! பசி, தாகம் பார்க்காமே, கிட்டத்தட்ட நாலு மணி நேரமா க்யூவிலே நின்னிருக்கியே!''

''ஆமாம், பாட்டி!என்ன பண்றது?''

''ஏண்டா, இத்தனை கஷ்டப்பட்டு அந்தப் படத்தை இன்னிக்கே பார்க்கணுமாடா? கொஞ்ச நாள் போனா கூட்டம் போய்க் காத்தாடுமே! அப்போ பார்த்தால் போதாதா?''

''அதெப்படி பாட்டி? ரிலீஸாகிற அன்னிக்கே கூட்டத்திலே அடிபட்டு, இடிபட்டு, டிக்கெட் வாங்கிக் கூட்டத்தோடு கூட்டமாப் படம் பார்க்கிறபோது உண்டாகிற 'த்ரில்' இருக்குதே....''

''என்ன? திரில்லா!''

''ஆமாம், பாட்டி! அப்போது ஏற்படுகிறதே உணர்ச்சி, அது கூட்டமெல்லாம் குறைஞ்சு போனப்புறம் பார்த்தால் வராது. உனக்கு இதெல்லாம் புரியாது பாட்டி.''

''பத்ரி! எனக்குப் புரியலே! போன வாரம் கிருத்திகையன்று என்னைக் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டுபோய்த் தரிசனம் ஆனதும் என்னிடம் ஒரு கேள்வி கேட்டாய், ஞாபகம் இருக்கா? அதற்கான பதிலை இன்று நீயே கூறி விட்டாய். இப்பொழுது சொன்னியே ஒரு வார்த்தை 'த்ரில்' என்று, அது மாதிரியான உணர்ச்சிதாண்டா எனக்கும் கூட்டத்தோடு கூட்டமா முருகனைத் தரிசனம் பண்றப்போ உண்டாகிறது!''


மரியாதை!

அம்மா: டேய் ராமு, சோமுவை நாய், பன்றி என்றெல்லாம் சொல்லித் திட்டினியாமே!

ராமு: இல்லையே. அந்தக் கழுதையை நான் அப்படியெல்லாம் மரியாதையில்லாமல் திட்டுவேனம்மா?''

—மு. கா. தமிழ்ச்செல்வன்





நான் செய்த நல்ல செயல்

நான் என் பாட்டியுடன் சினிமாவுக்குப் புறப்படத் தயாரானேன். என் தம்பி மூன்று வயது நிரம்பியவன் என்னுடன் வருவேன் என்று அடம் பிடித்து அழுதான். அவனையும் தூக்கிக் கொண்டு சினிமாவுக்குப் போனோம்.

எங்களைச் சினிமாப் பார்க்க விடவில்லை அந்தச் சுட்டிப் பயல்! அழுது கத்திக் கொண்டே இருந்தான். தூக்கினால் வரமாட்டேன் என்கிறான். அந்தக் கூட்டத்தில் அங்கு மிங்கும் ஓட வேண்டும் என்று அடம் பிடித்தான். அப்படிக் கொஞ்சம் ஓட விட்டபோது தான் அழுகைச் சப்தம் குறைந்தது—மற்றவர்கள் சினிமாப் பார்க்க முடிந்தது.

ஒரு வழியாகப் படம் முடிந்ததும் அவனைத் தூக்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம். வருகிற வழியெல்லாம் ஏதோ தண்டையைக் காண்பித்துக் கத்திக் கொண்டே வந்தான். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. முகப்பு முன் வாசலில் அவனை இறக்கி விட்டவுடன் ஆடிக் கொண்டு ஓடினான்.

விளக்கு வெளிச்சத்தில் பார்த்தால், அவன் கால் தண்டையில் சுமார் பத்துப் பவுன் உள்ள ஒரு தாலிச் சங்கிலி செருகித் தொங்கிக் கொண்டிருந்தது. எனக்கும் என் பாட்டிக்கும் தூக்கி வாரிப் போட்டது. 'யாருடையதோ பெருகிக் கீழே விழுந்திருக்கிறது. இவன் ஓடித் திரிகையில் தண்டையில் பின்னிக் கொண்டிருக்கிறது' என்று யூகித்தோம். அடுத்த வீட்டுப் பெரியம்மா பார்த்துவிட்டு, ''பையன் கண்டெடுத்திருக்கிறான். மிக அதிர்ஷ்டக்காரன்'' என்றுசந்தோஷப்பட்டாள்.

எனக்கு உடனே கோபம் வந்து விட்டது. ''யாரோ இழந்து பரிதவித்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பார்கள். இதை உடனே உரியவர்களிடம் சேர்க்க வேண்டும்'' என்று சொன்னேன். ''அடி போடி பைத்தியம். இதை வெளியே சொன்னால் என்னுடையது, உன்னுடையதுன்னு யாராவது வாங்கிக்கினு போயிடுவாங்க. உடையவர்களுக்குப் போய்ச் சேராது'' என்று சத்தம் போட்டாள் அந்தப் பெரியம்மா.

'அப்படி யில்லை; இதை எப்படியாவது உரியவர்களிடம் சேர்த்தால் தான் நிம்மதி' என்று எங்கள் அப்பா வந்ததும் விவரம் சொன்னேன். உடனே நானும் அப்பாவும் தியேட்டருக்குச் சென்றோம். தியேட்டர் மானேஜரிடம் ''யாராவது எதையாவது காணவில்லை என்று தேடினால் சரியான அடையாளத்துடன் இந்த விலாசத்துக்கு வரச் சொல்லுங்கள்'' என்று கூறி எங்கள் வீட்டு விலாசத்தைக் கொடுத்ததுதான் தாமதம். ''ஒருவர் கடிகாரத்தைக் காணோம் என்று தேடினார்'' என்று சொன்னார் மானேஜர். ''கடிகாரம் இல்லை. இது வேறு ஒரு பொருள்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினோம்.

எதிரில் பாதையில் பாட்டரி லைட்டுடன் இரண்டு அம்மாக்கள், மூன்று பெரியவர்கள் எதையோ தேடிக்கொண்டும் அழுது கொண்டும் வந்தார்கள். ''என்ன தேடுகிறீர்கள்?'' என்று கேட்டோம். ''அதை ஏன் கேட்கிறீர்கள்? என் மகள் சினிமாவுக்குப் போய்விட்டு வந்தாள்; வீட்டிற்கு வந்ததும் கழுத்தில் இருந்த தாலிச் சங்கிலியைக் காணோம்! திருட்டுப் போகக் காரணமில்லை; எங்காவது பெருகி விழுந்திருக்கும் என்று பார்க்கிறோம்'' என்றார்கள்.

எங்களுக்கு ஒரே சந்தோஷம், உரியவர்களைக் கண்டு பிடித்து விட்டோம் என்று. உடனே நான் அவர்களிடம் நடந்ததை யெல்லாம் சொன்னேன். ''நீங்கள் நாளைக் காலையில் எங்கள் வீட்டுக்கு வந்து தாலியின்

அடையாளத்தைச் சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறி, எங்கள் வீட்டு விலாசத்தைக் கொடுத்து விட்டுத் திருப்தியாக வீடு திரும்பினோம்.

அதே போல் மறு நாள் காலையில் அவர்கள் வந்தார்கள். தாலியின் அடையாளம் சொன்னார்கள். சரியாக இருந்தது. தாலியை அவர்களிடம் கொடுத்தோம். அப்போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. இந்தச் சுட்டிப் பயலையும் வாரி அணைத்து இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் கொடுத்தார்கள். மிட்டாய் என்றும், ரொட்டி என்றும் ஏராளமாகக் கொடுத்துப் போனார்கள். அந்தப் பெரியவர் என்னைப் பார்த்து, ''நீ உயர்ந்த சாதனை செய்திருக்கிறாய்'' என்று வாழ்த்தினார். அவர்களுடைய மகிழ்ச்சியைப் பார்க்கப் பார்க்க நான் மிகவும் பூரித்துப் போனேன்.

-சிவ. வீரமணி

பத்தாம் வகுப்பு
சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டையூர்



இனிப்பான வரலாறு

இன்று நாம் எல்லோரும் விருப்பத்துடன் வாங்கிச் சாப்பிடும் ஐஸ்கிரீமைப் பொதுமக்கள் யாரும் வாங்கவோ, தயாரிக்கவோ, சாப்பிடவோ கூடாது என்று ஓர் அரசன் சட்டமே போட்டிருந்தான். உண்மைதான். 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சீனாவை ஆண்டுவந்த குப்ளாஸ்கான் என்பவர்தான் அந்த அரசன்.

ஐஸ்கிரீமை முதன் முதலில் அதாவது 13ஆம் நூற்றாண்டில் கண்டு பிடித்த பெருமை சீனர்களுக்குத்தான். ஐஸ்கிரீம் கண்டு பிடிக்கப் பட்டதிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை சீன நாட்டு மன்னர் குடும்பத்தினரும் அரண்மனை வாசிகளுமே இதனைச் சுவைத்தனர். சாதாரண மக்களுக்கு இது எட்டாத பொருளாகவே இருந்து வந்தது.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மார்க்கோ போலோ சீனாவுக்குச் சென்ற போது ஐஸ்கிரீம் தயாரிப்பு முறை பற்றித் தெரிந்து கொண்டு ஐரோப்பாவுக்கு வந்தார். பின்னர் இது இத்தாலி, பிரான்ஸ் என்று மெதுவாகப் பரவியது.


1797ஆம் ஆண்டு அமெரிக்கப் பத்திரிகை ஒன்று ஐஸ்கிரீமைப் பற்றியும் அதன் தயாரிப்பு முறை பற்றியும் செய்தி வெளியிட்டுப் பிரமாதப் படுத்தியது. அன்று முதல் ஐஸ்கிரீம் உலகமெங்கும் வேகமாகப் பரவியது. பனிக்கட்டிகளிலேயே வீடு கட்டி வாழும் எஸ்கிமோக்கள்கூட ஒருவிதமான ஐஸ்கிரீமைத் தயாரித்துச் சுவைக்கிறார்கள்.

— அருள்மகன்

கண்ணன்: தாத்தா ஏன் இப்படி விக்கி விக்கி அழுறார்?

முரளி: அவரது முதியோர் கல்விப் பள்ளிக்கூடத்திலே கொடுத்த வீட்டுப் பாடத்தைச் செய்துதர மாட்டேன் என்று பாபு சொல்லிட்டானும். அதான் அழுறார்.

-லலிதா செல்லப்பா





குட்டை விரல்

எஸ். விஜயலெட்சுமி

எந்தன் கையில் ஐவிரல்
இவற்றில் நான்கு நெட்டையாம்!
மீதி உள்ள ஒருவிரல்
மிகவும் கட்டை குட்டையாம்!

நெட்டை யான விரல்களின்
நெஞ்சில் கர்வம் பிறந்தது:
கட்டை விரலைப் பார்த்தவை,
கடக டென்று சிரித்தன.

நான்கு விரல்கள்:

''வெண்டைப் பிஞ்சைப் போலவே
விரல்கள் நாங்கள் இருக்கிறோம்:
குண்டுக் கத்தரி போலவே
குட்டை யாக இருக்கிறாய்.

தங்க வைர மோதிரம்
எங்கள் அழகு மேனியில்,
என்றும் மாந்தர் அணிகிறார்:
எங்கள் பெருமை புரிந்ததா?''

* * *


பெருமை யோடு கர்வமாய்ப்
பேசும் தம்பி மார்களைக்
கட்டை விரலும் பார்த்தது:
கனிந்து பேச லானது.

கட்டை விரல்:

''உருவம் எனது குட்டைதான்:
உண்மை உண்மை உண்மையே!
உதவி எனது இன்றியே
உலகில் வாழ முடியுமோ?

உண்ணும் உணவைப் பிசையவும்
உருட்டி 'வாயில் போடவும்,
எழுதி எழுதிப் படிக்கவும்,
எனது உதவி வேண்டுமே!

ஒன்று சேர்ந்து நாமுமே,
உயர்ந்து வாழ முயலுவோம்?
உயர்வு தாழ்வு பேசுவோர்
உலகில் என்றும் உருப்படார்!



'பால்பாயிண்ட்' பேனா

ஆ. முத்துக்காளத்தி

திருவள்ளுவன் திருவல்லிக்கேணி போவதற்காக, இராயபுரத்தில் பஸ் ஏறினான். நிறையக் கூட்டம். உட்கார இடம் கிடைக்கவில்லை. நிற்பதே கடினமாக இருந்தது. இடிக்காமலும், இடிக்சப் படாமலும் இருக்க மிகவும் அவதிப்பட்டான். கையில் தயாராக வைத்திருந்த சில்லறையைக் கொடுத்து டிக்கட் எடுத்தான்.

பீச் ஸ்டாப்பில் பஸ் நின்றது. நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியது போல, 'பொல பொல' என்று மக்கள் இறங்கி ஓடினார்கள். ஒருசிலரே ஏறினர். அதனால் திருவள்ளுவனுக்கு உட்கார இடம் கிடைத்தது. ஒரு சீட்டில் உட்கார்ந்தான். என்ன ஆச்சரியம்? பக்கத்தில் பாலமுருகன் அமர்ந்திருந்தான். ''நான் மவுண்ட் ரோடு வரை போறேன். உன்னைப் பார்த்ததில் மகிழ்ச்சி...''

திருவள்ளுவனின் கண்ணில் கீழே கிடந்த 'பால் பாயிண்ட்' பேனா ஒன்று தென்பட்டது. ''உன்னுடைய பேனாவா அது? கீழே கிடக்கிறதே!'' என்றான்.

''என்னுடையது அல்ல. நான் உன்னுடையதாக இருக்கும் என்று நினைத்தேன்...''

''வேறு யாருடையது என்று கேட்டுப் பார்ப்போம். எவருமே சொந்தம் கொண்டாடவில்லை என்றால் கண்டக்டரிடம் எடுத்துக்கொடுத்து விடுவோம். தொலைந்தவர்கள் வந்து கேட்டால் கண்டக்டர் அவர்களிடம் கொடுத்து விடுவார்.''

''நீ என்னடா பெரிய திருவள்ளுவர் போலவே பேசறே? யாரும் கேட்கலேன்னு, பேனாவை ஏன் கண்டக்டரிடம் கொடுக்கணும்? நாம ரெண்டு பேர்தான் பார்த்தோம். ஒண்ணு நீ எடுத்துக்க, இல்லே, நான் எடுத்துக்கறேன்...''

''ஐயோ, எனக்குப் பிறத்தியார் சொத்து வேண்டாம்.''

''இது எப்படிப் பிறத்தியார் சொத்தைத் திருடிக்கிறதா ஆகும்? கீழே கிடந்தது. யாரும் பார்க்கலே. யாரும் கேக்கலே. நான் எடுத்துக்கறேன்...''

''எனக்கென்னவோ அது தப்புன்னு தான் படுது.''

''இதிலே ஒண்ணும் தப்பு இல்லே'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, அந்தப் பால்பாயிண்ட் பேனாவை எடுத்துச் சட்டைப்பையில் செருகிக் கொண்டான் பாலமுருகன்.

பஸ் பாரி முனையைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு பயணி ''கண்டக்டர்!'' என்று குரல் கொடுத்தார். ''என் பர்சைக் காணோம்பா. எவனோ பிக்பாக்கெட் பண்ணிட்டான்....''

ஒவ்வொருவரும் உஷாராகி, தங்கள் பைகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டனர். கீழே குனிந்து ஏதாவது விழுந்திருக்கிறதா என்று தேடிப் பார்த்தனர்.

''போலீசில் புகார் செய்யலாம் சார். பணம் எவ்வளவு இருந்தது?''

பணத்தைப் பறி கொடுத்த நபர் பரபரப்புடன் பஸ் முழுக்கத் துழாவினார். ஒவ்வொருவரையும் ''திருடன்'' என்ற ஐயத்துடன் கூர்மையாகப் பார்த்து வந்தார். பிறகு கண்டக்டரிடம், ''போனால் போகட்டும். பர்

சில் மூணு ரூபாய்தான் இருந்தது. இதைப் போய் போலீசில் புகார் செய்ய வேண்டாம். பையில் குத்தியிருந்த பால்பாயிண்ட் பேனாவையும் காணோம்!'' என்றார்.

திடுக்கிட்டுப் போய்த் திருவள்ளுவனும் பாலமுருகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அதோ அதான் என் பால் பாயிண்ட் பேனா. திருட்டு ராஸ்கல்! நீதான் என் பர்சை பிக் பாக்கெட் பண்ணினியா?''என்று அந்த மனிதர் பாய்ந்து வந்து, பாலமுருகனின் மென்னியைப் பிடித்துக் கொண்டார்.

பாலமுருகன் வெல வெலத்துப் போனான். ''ஐயா, நான் உங்கள் பர்சை எடுக்கவில்லை. நான் எதையும் திருடவில்லை. பேனா கீழே கிடந்தது. எடுத்தேன்....'' என்று கண்ணீர் மல்கக் கூறினான்.

''பொய் வேறயா? இன்னும் எங்கே யார் கிட்ட எவ்வளவு திருடியிருக்கே? சொல்லு. உன்னைப் போலீசிலே ஒப்படைக்கணும்....''

பாலமுருகனுக்கு சப்த நாடியும் ஒடுங்கியது. திருவள்ளுவன் செய்வதறியாது திகைத்தான். ஏதோ சொல்ல நினைத்தான். வார்த்தை வாயை விட்டு வெளி வரவில்லை. அப்பொழுது பின்னால் இருந்த ஒரு பெரியவர் பேசினார். ''இந்தப் பையன் திருடவில்லை. கீழே கிடந்த பேனாவை எடுத்து வைத்துக் கொண்டான். அதுதான் அவன் செய்த தவறு. நானே கண்ணால் பார்த்தேன். அவனும் இந்தத் தம்பியும் பேசினதைக் காது கொடுத்துக் கேட்டேன். யாரோ பிக்பாக்கெட் செய்திருக்கிறான். அப்பொழுது பேனா கீழே விழுந்திருக்கிறது. அதை இந்தப் பையன் எடுத்து வைத்துக் கொண்டான். அறியாப் பருவம். தெரியாமல் செய்து விட்டான். மன்னித்து விட்டு விடு அப்பா.....''

''பெரியவர் சொல்றதுனாலே உன்னைச் சும்மா விடறேன். இனிமே இப்படிச் செய்யாதே....''

''செய்யவே மாட்டேன் சார். பிறத்தியார் பொருளுக்கு ஆசைப்பட மாட்டேன்...'' உண்மையாகவே உள்ளம் கசிந்து சொன்னான் பாலமுருகன்.



பாட்டியின் வீட்டில் பலே திருடன்

நா. ஜெயபாலன்



பத்ரகாளிபுரம் ஒரு சிறிய கிராமம். ஆண்டுதோறும் அங்கே சித்திரை மாதத்தில் பத்ரகாளியம்மன் திருவிழா நடைபெறும். நான்கைந்து நாட்கள் நாடகம், பாட்டுக் கச்சேரி, கரக ஆட்டம் என்று வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள்.

இந்த ஆண்டும் திருவிழாவை ரொம்ப ரொம்பக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

ஊரின் நடுவில் இருந்த பொது மைதானத்தில் அன்று இரவு சினிமாப் பாட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

முதல் நாள் இரவு கரக ஆட்டத்தை விடிய விடிய வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததால், மூக்காயிப் பாட்டிக்குச் சோர்வாக இருந்தது. எனவே, அவள் வீட்டில் படுத்து நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய வீடு ஊரின் தெற்குக் கோடியில் இருந்தது. அது சிறிய வீடு மட்டுமல்ல; ரொம்பப் பழைய வீடும் கூட. அதன் கூரை சதுர வடிமான ஓடுகளால் வேயப்பட்டிருந்தது. அந்த வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை. தானே உழைத்து, தானே சாப்பிட்டு நிம்மதியாய் வாழ்ந்து வந்தாள் அவள்.

* * *

பௌர்ணமி நிலவு பாலாய் ஒளியைப் பொழிந்து கொண்டிருந்தது.

அப்போது—

'கடபுடா' என்ற சத்தம் கேட்டுப் பசக்கென்று விழித்துக் கொண்டாள், பாட்டி. மல்லாந்து படுத்தபடி பார்த்தவளுக்குப் பயமாகவும் திகைப்பாகவும் இருந்தது. கூரையிலிருந்து நான்கு ஓடுகளைப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்தன இரண்டு கைகள்.

யாரோ திருடன்!

மூக்காயிப் பாட்டிக்கு 'ஆ! ஊ!' என்று கத்த வேண்டும் போலிருந்தது. கண்களை இறுக மூடி, தைரியத்தை வரவழைத்துக் கொண்டாள்.

திருடன் உள்ளே நுழைந்துவிட்டதை மெலிதான ஒலிகளிலிருந்து தெரிந்து கொண்ட பாட்டி, மெல்லக் கண் திறந்து பார்த்தாள். பின் மூடிக் கொண்டாள்.

கீழே நின்ற திருடன் அறை முழுக்க நோட்டம் விட்டான். படுத்திருந்த பாட்டிக்கு எதிர்ப் பக்கத்தில் ஒரு மூலையில் அடுக்கப் பட்டிருந்த பானைகள் அவன் கண்களில் பட்டன.

கதவின் தாழ்ப்பாளைத் திறந்து வைத்துவிட்டு, தான் உடுத்தியிருந்த வெள்ளை வேட்டியை எடுத்துத் தரையில் விரித்தான். பின் அடுக்கிலிருந்து ஒவ்வொரு பானையாக இறக்கினான்.

முதலில் ஒரு வெற்றுப் பானை வந்தது. இரண்டாவதாக ஒரு பானையில் கேழ்வரகு இருந்தது. மூன்றாவது பானையில் கொஞ்சம் சோளம் இருந்தது. நான்காவது பானை நிறைய அரிசி இருக்கக் கண்ட திருடன், சந்தோஷமாய்ப் பாட்டியைப் பார்த்தான்.

பாட்டி தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தாள்.

'இன்று சரியான வேட்டை' என்று எண்ணிக் கொண்டே அரிசி நிறைந்த பானையைத் தூக்க முடியாமல் தூக்கினான் திருடன். அரிசியை அள்ளி அள்ளி வேட்டியில் போட்டுக் கொண்டு முடிச்சுப் போடுவதற்காக அவசர அவசரமாக அதன் நுனிகளைத் தேடினான். சிக்கவில்லை.

துளாவித் துளாவிப் பார்த்து, ஏமாந்து போன திருடன், ''ஐயையே, வேட்டியைக் காணுமே! அரிசியைத் தரையில் கொட்டி விட்டேனே...'' என்று திடுக்கிட்டான். நிமிர்ந்தும் குனிந்தும் வேட்டியைத் தேட ஆரம்பித்தபோது—

வேகமாய் எழுந்த பாட்டி அவனைக் கீழே தள்ளி விட்டாள், பின் வெளியே ஓடி, கதவை இழுத்து அடைத்தாள்.

உள்ளே சிக்கிக்கொண்ட திருடன் படபடவென்று கதவைத் தட்டினான். அந்தச் சத்தத்தையும் மீறிக்கொண்டு வெளியே நின்ற பாட்டி, ''ஐயோ, திருடன்! திருடன்! யாராவது வாங்க. சீக்கிரம்!'' என்று கூப்பாடு போட்டாள்.

ஏழெட்டுப் பேர் கூடி விட்டனர். கூரை மேல் ஒருவர் ஏறி, துவாரத்தின் வழியாகத் திருடன் தப்பி விடாமல் பார்த்துக் கொண்டார். கதவைத் திறந்து திருடனைப் பிடித்து அடி அடி என்று அடித்து வெளியே இழுத்து வந்து பாட்டியின் முன் நிறுத்தினார்கள்.

இதற்குள் இன்னும் பலர் வந்து கூடிவிட்டார்கள்.

பாட்டி பக்கத்தில் கிடந்த முறத்தை எடுத்து மடார் மடார் என்று திருடனை அடித்தாள்.

''ஏண்டா, திருட்டுப் பயலே! நான் பல நாளாய்ப் பாடுபட்டுத் தேடி வச்சிருக்கிறதை, நீ ஒரே நாளில் கருட்டப் பார்க்கிறியே? எருமை மாடு மாதிரி இருக்கிற உடம்பை வைச்சு உழைச்சுப் பிழைக்க வேண்டா!'' என்று சொல் அடியும் கொடுத்து, ''போய்த் தொலை!'' என்று விரட்டி விட்டாள்.



நிறைய தர்ம தான அடிகளை வாங்கிக்கொண்ட திருடன், உயிர் தப்பினால் போதும் என்று விழுந்தடித்துக்கொண்டு ஓடினான்.

பாட்டி எவ்வாறு திருடனைப் பிடித்தாள் என்று எல்லோருக்கும் ஆச்சரியமாய் இருந்தது.

அது ஒரு தந்திரம்!

திருடன் அடுக்குப் பானைகளைத் தூக்கிக்கொண்டிருந்தபோது பாட்டி என்ன செய்தாள் தெரியுமா? திருடன் விரித்து வைத்திருந்த வேட்டியை மெல்லக் கைநீட்டி நைஸாக இழுத்துச் சுருட்டி, தன் வயிற்றோடு சேர்த்து வைத்துக் கொண்டாள்.

அவள் வேட்டியை இழுத்து வைத்துக்கொண்ட பின்னும் தரையில் வேட்டி விரித்திருப்பது போல் தெரிந்தது. அது என்ன தெரியுமா?

திருடன் கூரையின் ஓடுகளைப் பிரித்து வைத்திருந்தான் அல்லவா? அந்தத் துவாரத்தின் வழியாக, சதுரமாகத் தரையில் விழுந்த பால் போன்ற நிலாவின் வெளிச்சமே ஒரு வேட்டி மாதிரி தெரிந்தது.

பாட்டியின் சாமர்த்தியத்தையும் தந்திரத்தையும் அறிந்த ஊரார் பாட்டியை வெகுவாகப் பாராட்டினார்கள்.

அவர்களில் ஒருவர் பாட்டியிடம் இருந்த திருடனின் வேட்டியை வாங்கி, ''பலே திருடனைத் தந்திரமாகப் பிடித்துக் கொடுத்த பாட்டியின் துணிச்சலைப் பாராட்டி, இந்தப் 'பொன்னாடை'யைப் பாட்டிக்குப் போர்த்துகிறேன்'' என்று சொல்லிப் போர்த்தி விட்டார்.

பாட்டி உட்பட எல்லோரும் கெக்கெக்கே என்று சந்தோஷமாய்ச் சிரித்தார்கள்.

உருவத்தைப் பார்த்து...

ஜி. சுமன்ந் (284)



ஜனக மன்னனின் அரசவை. கற்றறிந்த புலவர்கள் பலர் கூடியிருக்கின்றனர். புலவர்கள் தத்தம் புலமையையும் திறமையையும் காட்டிப் பரிசும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பேரவையில் புலவர் ஒருவர் அப்போது நுழைந்தார். குட்டையான உருவம். கூன்விழுந்த முதுகு. எலும்பும் தோலுமான உடல். கறுப்பு நிறம். அழுக்குப் படிந்த உடை. உள்ளே நுழைந்த அவரைப் பார்த்ததும் கூடியிருந்த புலவர்கள் கலீரென்று சிரித்துவிட்டார்கள்.

''அறிவாளிகள் கூடியிருக்கும் அரசவையில் இந்த அவலட்சணத்துக்கு என்ன வேலை? இடம் மாறி வந்துவிட்டதோ?'' என்றார் ஒருவர். சபையில் மீண்டும் சிரிப்பு. வந்தவர் முகம் கறுத்து விட்டது.

''புலமையைக் காட்ட இங்கே புலவர்கள் இருப்பதாக அறிந்து வந்தேன். மன்னிக்க வேண்டும். தவறான இடத்திற்கு வந்து விட்டேன்'' என்று கூறித் திரும்பினார் புலவர்.

''ஜனக மன்னனின் புலவர் பெருமன்றம்தான் இது. அதில் சந்தேகம் ஏதும் வேண்டாம்'' என்ற மன்னரின் குரல் புலவரைத் தடுத்தது.

அவர் திரும்பினார். மன்னரைப் பார்த்தார்.

''மன்னா, கசாப்புக் கடைக்காரனின் கவனம்தான் மாமிசத்தின் மீது இருக்கும்; செருப்புத் தைப்பவன், தோலுக்கு மதிப்புக் கொடுப்பான். சுடுகாட்டுக் காவலாளி, எலும்பின் மீது கவனம் செலுத்துவான். புலவர்கள் புலமையைத்தான் மதிப்பார்கள்; ரசிப்பார்கள். இங்கே கூடியிருப்பவர்கள் இந்தத் தோலையும், சதையையும், எலும்புக் கூட்டையும் பார்த்து மகிழ்ச்சி அடைவது போல் தெரிகிறது. இவர்களை நான் என்னவென்று அழைப்பது?'' என்றார் புலவர்.

புலவரின் பேச்சில் இருந்த உண்மையை அரசர் உணர்ந்தார். மற்றவர்களுடைய அறியாமைக்காக, தானே மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். புலவரை அமரச் செய்து, அவர் புலமையை அறிந்து, மனமாரப் பாராட்டி, பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்.

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்


உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து



டென்னிஸ் ஆடுவோம்

குண்டுமணி

டென்னிஸ் புராதனமான விளையாட்டு. முன்பு கிரேக்கர்கள் இம்மாதிரி ஆட்டம் ஒன்றை ஆடியிருக்கிறார்கள். அது குரூரமாக இருந்தது. நவீன டென்னிஸ் ஆட்டம் பிரான்ஸ் நாட்டில்தான் தொடங்கியது. பிரஞ்சுக்காரர்களே பந்தை மட்டையால் அடிக்கும் வழக்கத்தைக் கடைப்பிடித்தனர். இங்கிலாந்து, பிரெஞ்சு மன்னர் குடும்பங்கள் 'டென்னிஸ்' ஆட்டத்தைத் தொடங்கியதால் 'அரச விளையாட்டு' என்ற பெயரும் டென்னிஸுக்கு உண்டு.

டென்னிஸில் தனியர், இரட்டையர் ஆட்டம் என்று ஆடுவார்கள். டென்னிஸ் மைதானம் 78 அடி நீளமும் 27 அடி அகலமும் கொண்டது. மைதானத்தின் நடுவில் மூன்றடி உயரத்தில் ஒரு வலை இருக்கும்.

டென்னிஸ் பந்து மட்டையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பந்து ஒன்றரை அங்குல விட்டம் கொண்டது. ரப்பரினால் பந்து தயாரிக்கப்படும்.


இந்த டென்னிஸ் ஆட்டத்தின் குறிக்கோள் எதிரியின் மைதானத்தில் பந்தைத் தட்டி அவர் எடுக்க இயலாமல் செய்வதுதான். 'சர்வர்' முதலில் பந்தைப் போடுவார். 'சர்வர்' எதிரி பந்தை அடிக்கத் தவறிவிட்டால் மறுபடியும் பாயிண்டுடன் 'சர்வ்' செய்வார். சர்வினில் இரண்டு தரம் 'சர்வ்' செய்தும் தவறி விட்டால் எதிரிக்குப் பாயிண்ட்!


எந்தக் கட்சி ஆறு கேம்களை எடுக்கிறதோ அந்தக் கட்சி ஜெயித்ததாகக் கருதப்படும். இரண்டு கட்சிகளும் ஐந்து 'கேம்'களை எடுத்திருந்தால் மேலும் இரண்டு கேம்கள் ஆடி வெற்றியை நிர்ணயிப்பார்கள்.

இங்கிலாந்தில் டென்னிஸ் ஆட்டத்தை 1874ம் வருஷம் வில் பீல்டு பிராபல்யப்படுத்தினர். முதல் விம்பிள்டன் டென்னிஸ் பந்தயம் 1877ம் வருஷம் நடைபெற்றது.

1900ம் வருஷம் டேவிஸ் என்பவர் டென்னிஸைச் சர்வ தேசப் பந்தயமாக உயர்த்துவதற்கு ஒருகோப்பையை வழங்க முன்வந்தார். டேவிஸ் கோப்பைப் பந்தயம் உலகில் எந்த நாடு டென்னிஸில் தலைசிறந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது.

மைதானத்தில் விரைவாகப் பாய்ந்து சென்று தவறாமல்நின்று ஆடுவது டென்னிஸில் தனித்திறமை.





விம்பிள்டன் கோப்பை

1923ம் வருஷத்தில் ஜார்ஜ் வொயிட் மேன் அமெரிக்கா, இங்கிலாந்து, டென்னிஸ் ஆட்டக்காரர்களுக்காக ஒரு போட்டி நிறுவி வொயிட் மன் கோப்பை கொடுக்க முன்வந்தார்.

விம்பிள்டன், டென்னிஸ் ஆட்டக்காரர்களுக்கு மெக்காவைப் போல் புனிதமானது. ஒவ்வொரு டென்னிஸ் ஆட்டக்காரரின் கனவும் விம்பிள்டனில் ஆடிவிட வேண்டும் என்பது-தான். நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆர். கிருஷ்ணன், விஜய் அமிர்தராஜ் விம்பிள்டனில் ஆடியுள்ளனர் என்பது பெருமைக்குரிய விஷயம்.

டென்னிஸில் மூன்று தலைமுறையாகப் பங்கேற்பது தனிச் சிறப்பு. தாத்தா ராமநாதன், அவரது புதல்வர் கிருஷ்ணன், பேரன் ரமேஷ் என்று டென்னிஸில் புகழ் பரப்பி யிருக்கிறார்கள்.

டென்னிஸ் ஆட்டத்தை அம்பயரும், வலை நீதிபதியும் Foot fault நீதிபதியும், லையன்ஸ்மென்களும் நிர்வகிப்பார்கள்.

மைதானத்தில் எந்தப் பக்கம் ஆடுவது, சர்வீஸ் யார் போடுவது என்பதைப் பூவா தலையா போட்டு நிர்ணயிப்பார்கள்.

பந்து வலை மீது பட்டுச் சென்றால் சர்வீஸ் 'லெட்' என்று சொல்லி மறுபடி ஆடச் சொல்லுவார்கள்.

பந்தயங்களில் அம்பயரின் தீர்ப்பே முடிவானது.

ஆட்டக்காரர்கள் ஆடும்போது பார்வையாளர்கள் நடுவில் வந்து குறுக்கிட்டதால் ஆட்டக்காரர்களுக்கு ஆட முடியாமல் போனால் அம்பயர் 'லெட்' என்று சொல்லி மறுபடி ஆடச் சொல்லலாம்.


விம்பிள்டனில் அரச குடும்பத்திற்காக 80 இருக்கைகள் உள்ள தனி ஒதுக்கீடு உண்டு. விம்பிள்டன் பந்தயங்களை விமரிசிக்கக் கிட்டத்தட்ட ஐந்நூறு அகில உலக விமர்சகர்கள், புகைப்படக்காரர்கள் விசேஷ இருக்கைகளில் அமர்ந்திருப்பார்கள்.

1982ம் வருஷம் விம்பிள்டன் போட்டியில் ஜிம்மி கார்னர்ஸ் வெற்றி வாகை சூடியது அனைவருக்கும் நினைவிருக்கும்.

விம்பிள்டனில் முதல் பெண்மணிகளுக்கான போட்டியின் 1884ம் வருஷம் வாட்ஸன் வெற்றிபெற்றார். 1982ம் வருஷம் விம்பிள்டன் வெற்றி வீராங்கனை மார்ட்டினா நவரதிலோவா.

இந்த வருஷம் விம்பிள்டன் போட்டிகளை வெகு ஆவலுடன் எதிர் நோக்கி யிருக்கிறோம். விம்பிள்டனில் யார் யார் வெற்றி பெறுவார்கள் என்பது ஸஸ்பென்ஸ்! திரில்லிங் மாட்ச்களை டெலிவிஷனில் பார்த்து ரசிக்கலாம்.

விம்பிள்டனில் பெண்களுக்கான விருது





கையொப்பம்

— எஸ். எஸ். ராமன் —

(கோகுலம் சிறுவர் சங்க முதல் உறுப்பினர்)

காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. ஆனால், மோகனின் உடம்பிலோ வேர்வை வழிந்து கொண்டிருந்தது. ஏன்? நீல நிற ஷர்ட்டும், சிவப்பு நிற அழகான அரைக்கால் சட்டையும், அவனுக்கு அவன் நிறத்திற்கு மிகவும் அழகூட்டின. ஆனால், அவன் முகத்திலோ அழுகை படிந்திருந்தது. அதற்குக் காரணம்தான் என்ன?

மோகன் ஆறும் வகுப்புப் படிக்கும் சிறுவன். தன் தாய் தந்தையருடன் அமைந்தகரையில் வாழ்ந்து வந்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் வீட்டில் டிபன், காப்பி சாப்பிடாமல் விளையாடச் சென்று விடுவான், தன் நண்பர்களுடன். அவனில்லாமல் விளையாட்டும் இல்லை, அவன் நண்பர்களுக்கு. அப்படி விளையாடுபவனின் படிப்பைப் பற்றி....

அவன் அன்று முதல் தடவையாக வாழ்க்கையில் அழுகிறான் என்றே சொல்ல வேண்டும். அவன் அப்பாவின் அளவுகடந்த செல்லம் அவன் அழுகையை இதுவரை தடுத்திருந்தது. ஆனால், அவரே இன்று இவனை அழ வைத்து விட்டார். அடித்து அல்ல; திட்டியே.

மோகன் வராந்தாவில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் முன்பு நடந்த நிகழ்ச்சியை நினைத்து....

ஃ ஃ ஃ

அன்று மாதாந்தரத் தேர்ச்சி அறிக்கையைப் பள்ளியில் எல்லோருக்கும் கொடுத்து விட்டார்கள். பலருக்கு மகிழ்ச்சி. ஆனால் சிலருக்குக் கவலை. இந்த இரண்டு விதத்திலேயும் சேராதவன் மோகன். கவலை இல்லாமல் ஜாலியாகப் பேசிக்கொண்டு வந்தான்.

வகுப்பிலேயே முதலாவதாக வரும் பாலு அவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

''மோகன், இந்தத் தடவையும் நீ நல்ல மார்க் வாங்கவில்லையே! ஏன் இப்படிச் செய்யறே? உன் அப்பா செல்லம் நிறையக் கொடுப்பதனால் எப்போதும் தேர்ச்சி அறிக்கையில் கையெழுத்துப் போட்டுவிடுகிறார். ஒரு நாள் போடாமல் இருந்து உன்னை அழ வைத்தார் என்றால் என்ன செய்வாய்? உன் விளையாட்டை விட்டு விட்டுக் கொஞ்சம் படிப்பில் கவனம் செலுத்தினாயானால்...'' அவன் முடிக்கவில்லை. அதற்குள்....

''பாலு! நீ முதலாவதாக வந்தால் எனக்கு அறிவுரை சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. நீ நன்றாகப் படி. மற்றவர்களை நிம்மதியாக விடு'' என்று திமிராகக் கூறிவிட்டுப் போய் விட்டான் மோகன்.

வீட்டுக்கும் வந்து விட்டான். அப்பா கூடத்தில் உட்கார்ந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பா அவ்வளவு சீக்கிரம் வந்து விட்டதைப் பார்த்தவுடன் அவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

மகிழ்ச்சியுடன் அப்பாவிடம் தேர்ச்சி அறிக்கையைக் கொண்டு போய்க் காண்பித்தான். எப்போதும் போலக் கையெழுத்துப் போடுவார் என்று நினைத்தவனுக்கு அந்தத் தடவை ஏமாற்றம். அப்பாவின் முகத்தில் ஒரு சலனமும் இல்லை. தேர்ச்சி அறிக்கையைத் திறந்து பார்த்தார். உள்ளே இருந்த மார்க்கைப் பார்த்தவுடன் அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

''டேய் மோகன்! என்னடா இது மார்க்கு! ஐந்தும் பத்துமாக வாங்கியிருக்கே! இந்தத் தடவை கையெழுத்துப் போட முடியாது. போ'' என்றவாறு அப்பா அதைத் தூக்கி எறிந்து விட்டார்.

அவர் போட்ட சப்தம் அவனை நடு நடுங்க வைத்தது.

''அப்பா, இதுவே கடைசித் தடவை. அடுத்த தடவை நான் நிச்சயமாக...''

''போட முடியாது'' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார் அப்பா.

அந்தப் பேச்சு அவன் வாயை அடைத்து விட்டது. அதே சமயத்தில் கண்களில் தாரை தாரையாகக் குற்றால அருவி போல் நீரையும் வரவழைத்தது.

ஃ ஃ ஃ

அப்பா இரைந்து சப்தம் போடக் காரணமில்லாமல் இல்லை. குழந்தைப் பிராயத்தில்கூட அவனை அழவிட்டுப் பார்த்திருக்க மாட்டார் அவன் அப்பா. அப்படிப்பட்டவர் இன்று இப்படிச் செய்தார் என்றால் காரணம் இருக்க வேண்டும்.

அன்று ஒரு நாள் மோகனின் அப்பா, ஆசிரியர் ராகவாச்சாரியாரை மார்க்கெட்டில் சந்தித்தார். இவரைப் பார்த்த அவரும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் மோகனைப்பற்றிப் புகார் கூற முன் வந்தார். பேச்சு ஆரம்பமாகியது.

''நான் சொல்றேன் என்று தப்பாக எடுத்துக்கொள்ளாதேள்! மோகன் என் பிள்ளை மாதிரி. நான் அவனை மட்டுமல்ல; எல்லோரையும் அப்படித்தான் பாவிக்கிறேன். அவன் இதுவரைக்கும் எல்லா வகுப்புக்களையும் எப்படியோ பாஸ் பண்ணிவிட்டு இப்போது ஆறாவது வந்திருக்கிறான். அதனால் நான் இப்ப.....'' என்று அவர் முடிப்பதற்குள்;

''சரி, விஷயத்துக்கு வாங்கோ'' என்றார் மோகனின் அப்பா.

''ஆங்! நம்ம மோகன் நன்றாகப் படிக்க மாட்டேன் என்கிறான். பள்ளியில் சொல்லிக் கொடுக்கும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டோ, அல்லது பேசிக் கொண்டோ இருக்கிறான். அதுவும் இல்லாமல் எப்பப் பார்த்தாலும் விளையாட்டோடு ஓட்டிக் கொண்டிருக்கிறான். அவனை நீங்கள் திருத்தணும். நன்றாகப் படிப்பான். அவன் ஆறாவது வரைக்கும் வந்தது பெரிதில்லை. இப்போது ஏழாவது போவதுதான் பெரிசு. அதுவும் இல்லாமல், நீங்கள் அவனுக்கு அதிகச் செல்லம் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். நீங்க கொஞ்சம் கண்டிக்கணும். நான் கிளம்பறேன். இன்னும் நிறையக் காய்கறி வாங்கணும்'' என்று சொல்லியவாறு கிளம்பி விட்டார்.

அப்போதுதான் மோகனின் அப்பாவுக்கு உறைத்தது. 'இத்தனை நாள், நாம் விட்டு வைத்தது தப்பு. இனி மேல் அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று நினைத்துக்கொண்டிருந்தபோது,

''சார், இன்னும் என்ன காய் வேண்டும்?'' என்று கடைக்காரன் கேட்டான்.

''ஒன்றும் வேண்டாம்பா. மொத்தம் எவ்வளவு தரணும்?'' என்று ரேட்டு ரூபாயைக் கொடுத்துவிட்டுக் கிளம்பினார்.

ஃ ஃ ஃ

மோகன் அழுது அழுது பயனில்லாமல் போயிற்று. ஆனால், அவன் அன்று சாயங்காலம் பாலு சொன்னதை நினைத்துப் பார்த்தான். அவன் சொன்னது சரியாக அல்லவா போயிற்று!


அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். அவனுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை.

மயிலே, மயிலே, இறகு போடு!

'மயிலே, மயிலே இறகு போடு!' என்று நாம் வேடிக்கையாகச் சொல்கிறோம். இறகைப் புத்தகங்களில் வைத்துச்சிலர் தினமும்திறந்துபார்ப்பார்கள்.

இராஜஸ்தானில்தான் மயில்கள் அதிகமாகக்காணப்படுகின்றனமயில் வேட்டையைத் தடை செய்து முதல் முதலாகச் சட்டம் இயற்றியவர் அசோகச் சக்கரவர்த்திதான். இன்றும் மயில்களை வேட்டையாடிக் கொல்லக் கூடாது என்று சட்டம் இருக்கிறது.

—ராமா ராமநாதன்





ஆனால் அம்மா திட்டுவாளே! அதற்காகவாவது சாப்பிட வேண்டும் என்று நினைத்தவன் போய் உட்கார்ந்தான்.

அடுத்த நாள். அம்மாவிடம் காசு வாங்கிக் கொண்டு கடையில் போய் ஒரு ப்ரௌன் கவர் வாங்கி வந்து பை போலச் செய்து அதில் தேர்ச்சி அறிக்கையை வைத்து மூடினான். பிறகு அம்மாவுக்கு உதவி செய்ய அடுப்டங்கரைக்குள் சென்றான்.

அடுத்த சில நிமிஷங்களில் அவன் பள்ளியில் இருந்தான். அவன் அவ்வளவு சீக்கிரம் வந்தது ராகவாச்சாரியாருக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. தினமும் லேட்டாக வந்து தம்மிடம் திட்டு வாங்குபவன் இன்று இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கிறானே! தமது கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கண்ணில் போட்டுக் கொண்டு பார்த்தார். சந்தேகமே இல்லை. மோகன்தான்! அவனிடம் வந்தார். ''தேர்ச்சி அறிக்கையைக் கொண்டு வந்தாயா?'' என்று கேட்டார்.

பதில் பேசாத மோகன், கையில் ஒரு வித நடுக்கத்துடன் பையிலிருந்து தேர்ச்சி அறிக்கையை எடுத்துக்கொடுத்தான். அவர் வாங்கினார். ஆனால், முகத்தில் சந்தோஷத்துடன் வாங்கியதைப் பார்த்ததும் மேலும் ஆச்சரியமடைந்தான் மோகன்.

''அட பரவாயில்லையே! தேர்ச்சி அறிக்கையை அழகாகக் கவர் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறாயே, நான்சொல்லாமலேயே!'' என்றவர் அதைத் திருப்பிக்கூடப் பார்க்காமல் பைக்குள் வைத்துக்கொண்டார.

பெருமூச்சு விட்டான் மோகன். ஆனால் அவன் மனத்தில் ஒரு தீர்மானம் எழுந்தது.

அவன் சில நாட்களாக அதிகம் பேசாமல் இருப்பதும், அதிகமாக விளையாடாமல் இருப்பதும், அவ்வப்போது அம்மாவுக்கு உதவி செய்வதும், அப்பா கொடுக்கும் வேலையை மறுக்காமல் செய்வதும், அம்மாவுக்கென்ன; அப்பாவுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது!

ஆனால் மோகனின் அப்பாவுக்குப் புரியவில்லை. தேர்ச்சி அறிக்கையை வீட்டில் காணோம். பள்ளியில் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவர் கையொப்பமிடவில்லையே! எப்படி ஆசிரியர் எடுத்துக் கொண்டார்? இது புரியாத புதிராக இருந்தது, மோகனின் அப்பாவுக்கு. திடீரென்று 'இப்படி இருக்குமோ?' என்று அவர் நினைத்தார். ஆனால் தம் பிள்ளை அப்படிச் செய்ய மாட்டான் என்று தமக்குத் தாமே ஆறுதல் சொல்லிக் கொண்டார். அவனிடம் கேட்கவும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஒரு தர்ம சங்கடமான சூழ்நிலையில் இருந்தார் அவர்.

ஒரு மாதம் கடந்தோடியது.

அன்று மோகன் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த நாள். பள்ளியில் நுழைந்தான். ஆசிரியர் வந்தவுடன் மரியாதை செலுத்தும் வகையில் எல்லோரும் எழுந்து நின்றனர். எல்லாம் முடிந்த பிறகு, ராகவாச்சாரியார் அந்த மாதத் தேர்விலே மாணவர்கள்

பெற்ற மதிப்பெண்களை அறிவிக்க எழுந்து நின்றார்.

''மாணவர்களே! இன்று நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த நாள் வந்து விட்டது. தேர்ச்சி அறிக்கையை எல்லோருக்கும் கொடுக்கும் முன், வகுப்பில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களின் பெயர்களை வழக்கம் போல் அறிவிக்க விரும்புகிறேன். ஆனால் இந்தத் தடவை எப்போதைக்கும் இல்லாத ஓர் ஆச்சரியச் செய்தி இருக்கிறது'' என்று சொன்னவர் மேலும் தொடர்ந்தார்.

''முதலாவதில் மாற்றம் இல்லை. பாலு 400 மதிப்பெண்களுடன் முதலிடம். இரண்டாவதில் ஒரு மாற்றம். உங்கள் எல்லோருக்கும் ஆச்சரியம் கொடுக்கும் ஒரு பெரிய மாற்றம்! இந்த மாற்றத்தினால் நம் வகுப்பில் நிறைய மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. இரண்டாவது இடத்தைப் பெற்றவன் மோகன்....!'' அவர் பேசிக் கொண்டிருந்தாரே தவிர வகுப்பில் சலசலப்பு.

மோகன் ஆசிரியரின் முன் போய்த் தேர்ச்சி அறிக்கையை வாங்கக் கையை நீட்டினான். அவன் கை நடுங்கியதை நன்றாகப் பார்த்தார் ஆசிரியர் ராகவாச்சாரியார். ஒரு கேள்வியையும் கேட்டார்.

''மோகன்! போன தடவை ஏன் கையெழுத்து வாங்காமல் என்னிடம் கொடுத்தாய்?''

''.....'' அவனிடமிருந்து பதில் இல்லை. ஆனால்.. தலையைக் குனிந்து கொண்டான். கண்களில் இருந்து கண்ணீர் பெருகி, ஆசிரியரின் பாதத்தில் விழுந்தது. ஆசிரியர் அவன் தலையைத் தடவி விட்டு, அன்பாக முதுகில் தட்டிக் கொடுத்துத் தேர்ச்சி அறிக்கையை அவனிடம் கொடுத்தார்.

வாங்கிக் கொண்டு நகர்ந்தான். மாலை பள்ளி விட்டவுடன் வீட்டை நோக்கி அவன் ஓடின ஓட்டம்! அவன் 100 மீட்டர் பந்தயத்தில் ஓடியிருந்தால் ஒரு தங்கப் பதக்கம் கிடைத்திருக்கும். அவ்வளவு வேகம்! வீட்டிற்கு வந்தான். அப்பா இன்னும் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரவில்லை. அம்மா இருந்தாள். அம்மாவிடம் காண்பித்தான். அம்மாவின் முகம் சந்தோஷத்தால் பூரித்தது. அப்பா ஐந்து மணிக்கு வந்தார்.

அப்பாவிடம் பெருமையுடன் தேர்ச்சி அறிக்கையை நீட்டினான். இப்போதும் அப்பா முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொண்டார். ஆனால், அறிக்கையின் உள்ளே பார்த்தவுடன் அப்பாவின் முகத்தில் மகிழ்ச்சியின் அறிகுறிகள் தெரிந்தன. அப்போதுதான் மோகனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. அப்பாவை ஏறிட்டு நோக்கினான்.

அப்பா உடனே சந்தேகத்துடன் அறிக்கையின் பின் பக்கம் பார்த்தார். போன மாதத்தில் போட வேண்டிய கையொப்பம் போடாமலேயே இருந்தது. இரண்டு கையொப்பமாகப் போட்டுவிட்டு, அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

அம்மாடி! எவ்வளவு பெரிய தலைப்பு!




'ராபின்சன் குருசோ' கதைதான் உங்களுக்குத் தெரியுமே! ஏற்கெனவே படிக்காதவர்களும் கோகுலம் (மார்ச் 83) இதழில் படித்திருக்கலாம். இக்கதை முதல் முதலாக வெளியிடப்பட்டது 1719ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் தேதி. அக்கால வழக்கப்படி இந்த நாவலுக்கு மிக நீண்ட பெயரை ஆசிரியர் வைத்திருந்தார். அவர் வைத்த பெயர் இதுதான்:

'கப்பல் உடைந்து எல்லோரும்
செத்துவிட, தப்பிப் பிழைத்த
யார்க்நகரைச் சேர்ந்த மாலுமி
ராபின்சன் குருசோ'

—எஸ். விஜயா சீனிவாசன்

யாரை நம்புவது!

இளமதி காந்தன்



சுப்புவும் ராமனும் ஒரு மளிகைக் கடையில் வேலை பார்த்து வந்தார்கள். மளிகைக் கடை முதலாளி அப்துல்லா நல்ல மனிதர்; வசதியானவர்; கடவுள் மீதும் தமது மதத்தின் மீதும் மிகுந்த நம்பிக்கையுள்ளவர்.

சுப்புவையும் ராமனையும் அவர் வேலைக்காரர்கள் போல் நடத்தவில்லை. தமது குழந்தைகளைப் போல் அன்பு காட்டி, அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்.

அப்துல்லாவின் மனைவியான மும்தாஜ் பேகமும் ராமனையும் சுப்புவையும் தமது கணவர் எப்படிக் கவனித்துக் கொள்வாரோ, அப்படியே கவனித்து வந்தாள் பாசத்துடன்.

சுப்பு உழைத்து முன்னேற வேண்டும் என்று, என்றுமே நினைத்தவன் அல்ல! லாட்டரி, சூதாட்டம் போன்ற குறுக்கு வழிகளில் முன்னேற வேண்டும் என்று நினைப்பவன்! ராமனோ உழைத்து முன்னேற வேண்டும் என்று நினைப்பவன். சூதாட்டம் போன்றவை அவனுக்குப் பிடிக்காது.

சில நேரங்களில், ராமனுக்கும் சுப்புவுக்கும் பெரிய வாக்கு வாதமே வந்து விடும். சுப்பு ராமனை, ''உழைத்து ஒரு நாளும் முன்னேற முடியாது! நேர்மையும் நியாயமும் சோறு போடாது! நீ உழைத்து முன்னேறு வதைப் பார்க்கிறேன்!'' என்று கேலியும் கிண்டலும் செய்வான்.

அப்துல்லா வெளியூர்ப் பயணம் சென்றால், ராமனைக் கூட அழைத்துச் செல்வார். மளிகைக் கடையை சுப்புவைக் கவனித்துக் கொள்ளச் சொல்லு வார். சுப்பு முதலாளி தன்னை நம்பிக் கடையை விட்டுச் சென்று இருக்கிறாரே என்று நினையாமல், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று பணத்தைத் திருடி விடுவான்.

ஒரு சமயம் சுப்புவுக்குக் கடுமையான ஜுரம். எழுந்து நடமாட முடியாமல் படுத்த படுக்கையில் பத்து நாள் இருந்தான். மளிகைக் கடையை ராமனைப் பார்த்துக் கொள்ளச்சொல்லி விட்டு, அப்துல்லாவும் தம் உறவினர் ஒருவரது திருமணத்துக்கு வெளியூர் சென்று விட்டார். ராமன் மட்டும் கடையில் இருந்தான். இதுபோல் சுப்புவுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் பல ரூபாய்களைத் திருடி இருப்பான்.

ஜுரம் நின்று கடைக்கு வந்த சுப்பு ராமனைப் பார்த்து, ''அடேய் முட்டாள், நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டாயே? நானாக இருந்தால் நிறையப் பணத்தை எடுத்திருப்பேன்'' என்றான்.

ராமன் கூறினான்: ''முதலாளி நம்மை எவ்வளவு தூரம் நம்புகிறார்! அவருக்குத் துரோகம் செய்யலாமா? உழைக்காமல் வரும் பணத்தை நான் விரும்ப மாட்டேன்! நேர்மை, கடின உழைப்பு நம்மிடமிருந்தால் நிச்சயம் வாழ்க்கையில் முன்னேறலாம்.''

ராமன் கூறியதை சுப்பு ஒத்துக் கொள்ளவில்லை. ''பிழைக்கத் தெரியாத பயல்'' என்று கிண்டல் செய்தான்.

அப்துல்லாவுக்கு வயது அதிகமாகிவிட்டது. சில நேரங்களில் கண் பார்வை கூடச் சரியாகத் தெரியாது. அவர் இறப்பதற்குள் மக்காவிற்கு யாத்திரை போக விரும்பினார். கண்ணும் சில நேரங்களில் தெரியாமல் போகவே, இனி யாத்திரை போக இருப்பதைத் தள்ளிப் போடக் கூடாது என்று எண்ணினார்.

ராமனையும் சுப்புவையும் வீட்டிற்கு விடுமுறை நாளான ஒரு ஞாயிற்றுக்கிழமை கூப்பிட்டார். ராமனும் சுப்புவும் போனார்கள்.

அப்துல்லா ராமனையும் சுப்புவையும் தம்முடன் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டு முடிந்ததும், அப்துல்லா ஒரு கவரைச் சுப்புவிடம் கொடுத்தார். சுப்பு ஒன்றும் புரியாமல் அவர் கொடுத்த கவரை வாங்கிக் கொண்டான்.

அப்துல்லா கூறினார்: ''சுப்பு, உன்னை ஆரம்பத்திலிருந்து கவனித்து வருகிறேன். உழைத்து முன்னேற வேண்டும் என்று நீ நினைக்கவில்லை. குறுக்கு வழியில் திருடியாவது முன்னேற நினைக்கிறாய். அப்படி முன்னேறினாலும் அது நிலைக்காது. இந்தக் கவரில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. இதை வைத்து, நீ சொந்த வியாபாரம் செய்து, நல்ல முறையில் முன்னேறு! நாளையிலிருந்து கடைக்கு வர வேண்டாம்.''

சுப்பு திடுக்கிட்டான். ஏதோ கூற வாயெடுத்தான். ''எதுவும் சொல்லத் தேவையில்லை. போய் வா. நாணயமாக உழைத்துப் பிழை'' என்று கூறி அவனை அனுப்பி விட்டார்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு சுப்பு சென்றதும், ராமனை அழைத்த அப்துல்லா, ''சுப்புவை நான் பலமுறை சந்தேகப்பட்டிருக்கிறேன்! அவனைக் கடையில் தனியாக விட்டால் பணத்தைத் திருடிவிடுகிறான். ராமா, உன்னை நம்புகிறேன். நீ உழைத்து முன்னேற வேண்டும் என்று உறுதியாய் இருக்கிறாய்! இதுதான் எனக்கு வேண்டும். அடுத்த வாரம்நான் மெக்காவுக்குப்போகிறேன். கடையை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். கடையை மட்டுமல்ல; வீட்டையும் நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும். பிள்ளை இல்லாத எனக்கு வேறு யாரப்பா துணை?'' என்று உருக்கமாய்க் கூறினார்.

மழைப்பாட்டு

குழ. கதிரேசன்

மழையே, மழையே, மாமழையே!
மண்ணில் இறங்கி வா மழையே!

கண்ணீர்த் துளிகளைக் காண்மழையே!
கருணை மழை நீ தாமழையே!

வயல்கள் எல்லாம் வாய்பிளந்து
'வாவா' என்றுனை அழைக்கிறது!

கடல்அலை கைகளை நீட்டிஉனைக்
'கனமழை பெய், பெய்' என்கிறது!

அப்பா அம்மா நீர் இன்றி
அங்கும் இங்கும் அலைவதைப் பார்!

எத்தனை தொல்லைகள் தினம்தினமே!
இரங்கி நீ வருவாய் இத்தினமே!

அக்கினிக் குழம்பு வெய்யிலிலே
அத்தனை உயிர்களும் வேகிறதே!

உக்கிர வெய்யிலை அணைத்திடுவாய்!
உடனே 'சோ'வெனப் பெய்திடுவாய்!



காரியம் நடக்காது

செல்லகணபதி




ஆம்பிக் கிடக்கும் ரொட்டித் துண்டுகள்
சாப்பிட உதவாது
சோம்பிக் கிடந்தால் வாழ்வில் யார்க்கும்
காரியம் நடக்காது

போர்த்திக் கொண்டு தூங்குவ தாலே
கடுங்குளிர் விலகாது
வேர்க்க நடந்தால் மார்கழி மாதக்
குளிரும் தெரியாது

கண்ணிருந் தாலும் மூடிக் கிடந்தால்
காட்சிகள் தெரியாது
எண்ணம் இருந்து செயல் செய்யாவிடில்
ஏற்றம் கிடைக்காது

அயர்ந்து படுத்தால் சோறிருந்தாலும்
சாப்பிட முடியாது
முயற்சி தொடர்ந்தால் முடியா தென்பது
உலகில் கிடையாது

பிறக்கும் பிள்ளையில் பெரியவன் சிறியவன்
பேதம் கிடையாது
உறக்கம் குறைந்தவன், உழைப்பில் மிகுந்தவன்
உயர்வது தவறாது



1. பாவம் பைத்தியம்!

தலைக்கு மேலே கொளுத்துகிற வெயிலைத் துச்சமாக மதித்து வீராணம் ஏரியின் நடுவில் எருமை மாட்டின் மேல் அமர்ந்த வண்ணம், சுகமாகச் சவாரி செய்து கொண்டிருந்தான் அய்யாசாமி. ஏரியின் நடுவில் எப்படி அது சாத்தியமாகும் என்று கேட்கிறீர்களா? நாட்டு நடப்பு உங்களுக்குத் தெரியாது போல் இருக்கிறது. ஏரிதான் வறண்டு போய்ச் சகாரா பாலைவனம் போல் கிடக்கிறதே!

அய்யாசாமிக்குக் கண்களைச் சுழற்றிக்கொண்டு தூக்கம் வந்தது. அன்று மதியம் அவன் வீட்டில் தடபுடலான விருந்து. பம்பாயிலிருந்து அவனுடைய மாமா விஞ்ஞானி வீராசாமி வந்திருந்தார். அப்புறம் கேட்பானேன்? 'ஹாவ்! ஹாவ்!' என்று பலமாகக் கொட்டாவி விட்டபடி கண்களை மூடிக் கொண்டான் அய்யாசாமி. ஆஹா! விதவிதமான கனவுகள் அவன் கண்களில் வந்து நாட்டியமாடின!

ஒரு கனவில் ஏரிக் கரையின் மீது 'டக்டக்' என்று குதிரையின் மீது ஏறிச் செல்லும் வந்தியத் தேவனாக அவன் இருந்தான். பாதிக் கனவிலே அவன் 'டிஷ்யூம் டிஷ்யூம்' குத்துக்களைச் சரமாரியாகப் பரிமாறும் சூப்பர் ஸ்டாராக மாறி விட்டான்....

''ஏலே, அய்யாசாமி! அய்யாசாமி'' என்ற அலறல் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தான் அவன். வியர்க்க விறுவிறுக்க அவனை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார் அவனுடைய அப்பா. ''அடடா! வகையாக மாட்டிக்கொண்டோமே! பள்ளிக்கூடம் போகாமல் இப்படி எருமை மாட்டுச் சவாரி செய்வது தெரிந்து விட்டதே!'' என்று நடுங்கிய வண்ணம் கீழே குதித்தான் அய்யாசாமி. 'எந்தப் பக்கம் ஓடலாம்?' என்று திசைகளை ஆராய்ந்து கொண்டிருந்தான் அவன்.

அவனுடைய திட்டத்தை யூகித்த அவனுடைய அப்பா அற்புதசாமி, ''எலே! ஓடாதேடா! அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வந்திருக்குடா!'' என்று கத்தினார்.

அய்யாசாமி ஒரு கணம் தாமதித்தான். எந்த அதிர்ஷ்டம்? ஒருவேளை அடி உதைகளை மறைமுகமாக அப்படிக் குறிப்பிடுகிறாரோ?

''மாமா உன்னை பம்பாய்க்குக் கூட்டிக்கிட்டுப் போகப் போகிறாராம்! சீக்கிரம் வாடா!''

அதிர்ஷ்டம் அடித்தால் இப்படி அல்லவோ அடிக்க வேண்டும், 'பள்ளிக் கூடத்துக்கு ஒரு 'பை பை';பம்பாய்க்கு எடு பையை!' என்று!

※ ※ ※

விஞ்ஞானி வீராசாமி அண்டார்க்டிகா பயணக் குழுவில் ஓர் உறுப்பினர்! இரண்டு முறை அண்டார்க்டிகா போய் வந்திருக்கிறார். மூன்றாம் முறையாக அண்டார்க்டிகா போகவிருக்கும் பயணக் குழுவில் சிறுவர்கள் இருவரை அழைத்துச் செல்லும் திட்டம் இருக்கிறதாம். எப்படியும் அய்யாசாமிக்கு அந்த வாய்ப்பை வழங்கியே தீருவது என்று மாமா வீராசாமி தீர்மானம் செய்திருந்தார். அதன் பலனாக அன்று இரவு இராமேஸ்வரம் மெயிலில் சென்னையை நோக்கி மாமாவுடன் பயணம் செய்து கொண்டிருந்தான் அய்யாசாமி.

எருமைப்பட்டிக் கிராமத்தில் அன்று மாலையில் நடந்த கூத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டான் அய்யாசாமி. அவனுடைய பாட்டி ராமாயி ஒவ்வொரு

வீடாகப் போய், ''என் பேரன் அண்டாவைக் கடிக்கப் போகிறான்! அண்டாவைக் கடிக்கப் போகிறான்!'' என்று பெருமையுடன் தம்பட்டம் அடித்து விட்டு வந்தாள். பாவம்! 'அண்டார்டிகா' என்ற வார்த்தை அவள் வாயில் நுழைந்தால்தானே! கொஞ்ச நேரத்திற்குள் அய்யாசாமி வீட்டின் முன் ஒரே கூட்டம் கூடிவிட்டது. ''அண்டாவுமில்லை! குண்டானுமில்லை! போய்த் தொலையுங்கள்!'' என்று அற்புதசாமி அவர்களை அடித்து விரட்ட வேண்டியிருந்தது! 'அண்டாவைக் கடிக்கும்' வித்தையைக் காணாமலேயே ஊர்க்காரர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியிருந்தது!

ஜோஸ்யர்: பல்லி விழும் பலன் பார்த்துச் சொல்லணுமா? சரி. பல்லி எங்கே விழுந்தது?

முரளி: எங்க வீட்டுச் சாம்பாரில் அல்லவா பல்லி விழுந்தது!

— லலிதா செல்லப்பா



அய்யாசாமியின் உறவினர் பலர் அவனை வாழ்த்திப் பரிசாக ஐந்து, பத்து என்று நோட்டுக்களைத் தள்ளினார்கள். அவனுடைய சித்தப்பா சின்னசாமி உள்ளூரிலேயே பெரிய அரசியல்வாதி. வழக்கம் போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, காசு ஏதும் தராமல் பேச ஆரம்பித்தார்: ''தோழர்களே! பண்டைக் காலத்தில் தமிழன், 'கங்கை கொண்டான்', 'கடாரங்கொண்டான்' என்று பெயர் பெற்றான்! இன்று நம் வீரத் தம்பிக்கு 'அண்டார்டிகா கொண்டான்' என்று உங்கள் சார்பாகப் பெயர் சூட்டி வாழ்த்துகிறேன்!'' என்று கைதட்டலுக்கிடையே பேசி முடித்தார்.

இரயில் வண்டி கடகடவென்று ஒலி எழுப்பிய வண்ணம் விழுப்புரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பெட்டியில் அய்யாசாமி ஒருவனுக்கு மட்டுமே தூக்கம் வரவில்லை. 'அண்டார்க்டிகா'வைப் பற்றி அவன் மாமா சொன்னதையெல்லாம் எண்ணி எண்ணி அவன் உள்ளூர மகிழ்ந்து கொண்டிருந்தான். சுற்றிலும் இருந்த பயணிகளை ஒரு நோட்டம் விட்டான். அவனுடைய மாமா மூலையில் தலையைச் சாய்த்த வண்ணம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

விழுப்புரத்தில் வண்டி நின்றதும் மிகவும் பருமனான ஒரு மனிதர் வண்டியில் ஏறினார். உலக்கை போன்ற கையால் அய்யாசாமியை ஒரு தள்ளுத் தள்ளி விட்டு அவன் அருகில் 'தொப்'பென்று விழுந்தார். அவரைப் பார்க்கவே அய்யாசாமிக்கு அச்சமாக இருந்தது. கண்களை மெதுவாக மூடிக் கொண்டான். வண்டி நகர ஆரம்பித்ததும், அந்த மனிதர் அய்யாசாமியை உலுக்கி, ''தம்பீ! எங்கே போறே?'' என்று கேட்டார்.

அய்யாசாமி அரக்கப் பரக்க விழித்தபடி, ''அண்டார்க்டிகாவுக்கு!'' என்றான்.

ஒரு கணம் அதிர்ந்து போன அவர் மீண்டும், ''எங்கே?'' என்று கேட்டார்.

''அண்டார்க்டிகாவுக்கு!'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் அவன்.

அவ்வளவுதான்! அலறியடித்துக் கொண்டு அந்த மனிதர் எழுந்து எதிர் பெஞ்சியில் போய் அமர்ந்தார். நன்முகக் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கினார். சர்க்கஸில் காண்டாமிருகம் வாயை அகலத் திறந்து காட்டுவதைப் போலத் திறந்து இருந்தது அவருடைய வாய்! அதற்குள் பல ஈக்கள் உள்ளே போய் வெளியே வந்தன! சில ஈக்கள் உள்ளே போனவை போனவைதான்! சிலர் முன்னும் பின்னுமாகவும், வேறு சிலர் பக்கவாட்டிலும் தலையை அசைத்த வண்ணம் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள்.

செங்கல்பட்டு வந்ததும் மாமா விழித்துக்கொண்டு அய்யாசாமிக்குக் காப்பி வாங்கித் தந்தார். அதைப் பார்த்த அந்தக் குண்டு மனிதர் ''உங்கள் பையனா?'' என்று அசட்டுச் சிரிப்புடன் மாமாவைக் கேட்டார்.

மாமாவும், ''என் அக்கா பையன்!'' என்று பதிலளித்தார்.

''பாவம்! ஹூம்! எல்லாம் கடவுளோட சித்தம்!'' என்று பெருமூச்சு விட்டார் அந்த மனிதர். வேறு ஒன்றுமில்லை; அய்யாசாமியை, பைத்தியம் என்றே முடிவு கட்டியிருந்தார் அந்த மனிதர்.

2. குமுறும் கடல்!

பம்பாய் வந்து சேர்ந்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. அண்டார்க்டிகாவை நோக்கிச் செல்லும் கப்பல் பம்பாய் துறைமுகத்தில் தயாராகக் காத்திருந்தது. மாமாவுடன் அய்யாசாமி கப்பல் தளத்தை அடைந்ததும், அவன் வயதுடைய மற்றொரு சிறுவன் எங்கேயோ பார்த்த வண்ணம் லட்டு ஒன்றைக் கடித்துத் தின்று கொண்டிருந்தான். அய்யாசாமி அவன் அருகில் சென்றான்.

''உன் பெயர் என்ன?''

''லட்டு!'' திரும்பிப் பார்க்காமல் பதில் சொன்னான் அந்தப் பையன்.

''நீ தின்பதைக் கேட்கவில்லை! உன் பெயரைக் கேட்டேன்!'' என்றான் அய்யாசாமி.

''இதுவும் லட்டுதான்! என் பெயரும் லட்டுதான்! முழுப் பெயர் லட்சுமணன்! எல்லோரும் லட்டு என்றே கூப்பிடுவார்கள். உன் பெயர் என்ன? கிட்டுவா!'' என்று மடமடவென்று பேசித் தள்ளிவிட்டு மீதியிருந்த லட்டை வாயில் திணித்துக் கொண்டான் அவன்.

அய்யாசாமி தன் பெயரைச் சொன்னான். 'லட்டு'வின் சொந்த ஊர் லால்குடியாம். 'லட்டு'வின் சித்தப்பாவும் ஒரு விஞ்ஞானியாம். கடைசியில் 'லட்டு' எனப்படும் லட்சுமணன் அய்யாசாமியைப் பார்த்து ஏக்கத்துடன் கேட்டான்:

''ஆமாம்! அண்டார்க்டிகாவில் லட்டு கிடைக்குமா?''

அய்யாசாமிக்கு ஒரே ஆச்சரியம்! 'என்ன இவன், சரியான சாப்பாட்டு ராமனு இருப்பான் போலிருக்கிறதே!' என்று நினைத்துக் கொண்டான். அவன் நினைத்ததும் ஓரளவு சரிதான். இரண்டு டின் நிறைய லட்டுகளைக் கையோடு கொண்டு வந்திருந்தான் லட்சுமணன்! அது தீர்ந்து விட்டால் என்ன செய்வது? அதுதான் அவனுடைய கவலை! சில நாட்களில் இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விட்டார்கள்.


கப்பல் 'மொரீஷியஸ்' தீவை அடைந்தது. இறுதியாகத் தன் இலக்கை நோக்கி அது நகர ஆரம்பித்தது. அய்யாசாமியின் நினைவெல்லாம் தன் எருமை மாட்டின் மீதே இருந்தது!

ஆயிற்று! கப்பல் 40 டிகிரி தென் அட்சத்தை எட்டிப் பிடித்தது. அப்பாடா! இது என்ன கடலா, இல்லை சீறும் எரிமலையா? அந்த இடத்தில் கடல் அலைகள் பொங்கி எழுந்து கப்பலை அலைக்கழித்தன. உலகிலேயே மிகவும் மோசமான கடல் பிராந்தியம் அது தானாம்! அலைகள் மேலும் கோழமாகக் கப்பலைப் புரட்டி எடுத்தன! ஓவென்ற பயங்கரமான இரைச்சல்!

கப்பலின் மேல் தளத்தில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் உருண்டு விழுந்தன. பல பொருள்கள் உடைந்தன. கப்பலில் இருந்த ஹெலிகாப்டர் ஒன்றும், பனியில் செல்லும் ஸ்கூட்டரும் சேதமடைந்து விடும்போல் தோன்றின.

அய்யாசாமிக்குக் கவலை அதிகமாகியது. குமுறி எழுந்து கப்பலை அலைக்கழிக்கும் கடல் அலைகளை எண்ணி வருந்திக் கொண்டிருந்தான் அவன். இனி அவன் உயிரோடு வீடு திரும்ப முடியுமா? தன் அருமையான எருமையை மீண்டும் சந்திக்க முடியுமா?

அப்போது கண்ணீர் வழிய லட்டு அவனிடம் வந்தான். அய்யாசாமி தைரியத்தை வரவழைத்தபடி,



மொட்டை மயம்!

"என்னங்க, உங்க பிள்ளைகளுக்கெல்லாம் வரிசையா மொட்டை அடிச்சிட்டீங்க. வேண்டுதலா இல்லே வெய்யிலுன்னு?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க. பையன்களுக்குள்ளாற நடக்கிற குடுமி பிடி சண்டையைத் தவிர்க்கத்தான்.

-ஏ. ஆர். திருநாவுக்கரசு

''என்ன லட்டு! நீ ஒன்றும் கவலைப் படாதே! நம்ம விஞ்ஞானிகள் எப்படியாவது கப்பலை அமைதியான கடல் பகுதிக்குக் கொண்டு போய் விடுவார்கள். அழாதே!'' என்றான்.

'லட்டு'வும் மூக்கைச் சிந்தியபடி,

''ஊஹூம்! அதற்கில்லை. டின்னி விருந்த லட்டெல்லாம் தீர்ந்துவிட்டது'' என்று சொல்லிக் கொண்டே விம்ம ஆரம்பித்தான்.

''அடப் பாவி! இதற்கா இப்படி அழுகிறாய்? அண்டார்க்டிகா போனதும் அண்டா நிறைய லட்டு வாங்கித் தருகிறேன்!'' என்று புளுகி வைத்தான் அய்யாசாமி.

அப்போது விஞ்ஞானி வீராசாமி கவலையுடன், ''தம்பிகளா! கவலைப் படாமல் இருங்கள். நான் ஹெலிகாப்டரில் பறந்து சென்று எந்தத் திசையில் தெளிவான கடல் பகுதி இருக்கிறது என்று பார்த்து வருகிறேன். பாதை தெரியாமல் கப்பல் சென்றால் பனிக்கட்டிப் பாறையில் மோதி நொறுங்கிவிடும்! வருகிறேன்'' என்றபடி மேல் தளத்தில் நிற்கும் ஹெலிகாப்டரை நோக்கி விரைந்தார்.

''மாமா! நானும் வருகிறேன்!'' என்று அவரைப் பின் தொடர்ந்தான் அய்யாசாமி.

''என்னையும் கூட்டிப் போங்கள்!'' என்று கெஞ்சினான் 'லட்டு'.

வேறு வழியில்லாமல் அவர்களையும் கூட்டிக் கொண்டு போனார் வீராசாமி.

ஹெலிகாப்டர் வானில் பறந்து பல திசைகளிலும் சென்று பார்த்தது. எங்கே போனாலும் உறுமும் கடல் அலைகள்! அல்லது பனிக்கட்டிப்-பாறைகள் மிதக்கும் கடல் பிராந்தியம்! அமைதியான கடல் பகுதி எங்கோ அருகில்தான் இருக்க வேண்டும்!

திடீரென்று புயல் காற்றைப் போல் பயங்கரமான காற்று வீசியது. பயங்கரமான மழை! ஹெலிகாப்டரிலிருந்த திசை காட்டும் கருவி பழுதாகிப் போனது. கண்ணை மூடிக் கொண்டு ஏதேதோ திசைகளில் செலுத்தினார் வீராசாமி. இதற்கிடையில் கப்பல் நின்ற இடமும் தெரியவில்லை. ஹெலிகாப்டரிலோ எரிபொருளும் தீரக் கூடிய நேரம் நெருங்கி விட்டது!

திடீரென்று ஒரு தீவுத் திட்டு தெரிந்தது. மெல்ல ஹெலிகாப்டரை அந்தத் தீவை நோக்கித் தாழ்த்திச் செலுத்தினார் வீராசாமி. ஹெலிகாப்டரை மேட்டுப் பகுதி ஒன்றில் இறக்கினார் அவர்.

கதவைத் திறந்து முதலில் எட்டிப் பார்த்தது 'லட்டு'தான். ''அடடே! சினிமா ஷூட்டிங் நடக்குது இங்கே!'' என்று கத்தினான் அவன்.

வீராசாமியும் அய்யாசாமியும் கீழே இறங்கினார்கள். அவர்கள் கண்களை அவர்களால் நம்பவே முடியவில்லை. மூவேந்தர் காலத்து மனிதர் போல் உடையணிந்து நின்ற சிலர். ஹெலி



காப்டனரை நோக்கி வந்தனர்.

"வணக்கம்! வருக வருக!" என்றான் அவர்களில் ஒருவன். வீராசாமிக்கு மயக்கமே வந்து விட்டது!

"வணக்கம்! நாங்கள் எங்கே இருக்கிறோம் என்று தெரிந்துகொள்ளலாமா?"

"இது புதுப்பாண்டி நாடு!" கூட்டத்திலிருந்த ஒருவன் இவ்வாறு பதிலளித்தான்.

"தமிழ் நன்றாகப் பேசுகின்றீர். உடுக்கும் முறையோ விந்தையாக உள்ளதே!" என்று மற்றொருவன் வீராசாமியைப் பார்த்துச் சொன்னான்.

"தமிழகத்திலிருந்துவருகின்றீரோ?" என்று கேட்டான் இன்னொருவன்.

"ஆம்!" என்று வீராசாமி சொன்னதும், அவர்களில் சிலர் ஓடிவந்து வீராசாமியையும் சிறுவர்களையும் கட்டியணைத்துக் கொண்டார்கள்!

"என்னருமைத் தமிழ் மக்காள்! தாயகம் நன்று உளதோ?" என்று கேட்டுத் தேம்பி அழுதனர்.

அவர்கள் சொன்ன கதை விந்தையானது: 'கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி' என்ற ஒரு பாண்டிய மன்னனைப் பற்றி நாம் தமிழ் இலக்கியத்திலே படிக்கிறோம் அல்லவா? அந்த மன்னனின் பரம்பரையில் வந்தவர்கள்தாம் அம்மக்கள்! இளம் பெரு வழுதி கடலில் சென்றபோது கப்பல் மூழ்கி மாண்டதாக நாம் கருதியிருக்கிறோம். ஆனால், உண்மையில் நடந்தது வேறாம்! அவனும் அவனைச் சார்ந்த நண்பர் சிலரும் தம் குடும்பத்தினர் புடைசூழக் கப்பலில் பொழுது போக்காகச் சென்றபோது, பெரும் புயலில் கப்பல் சிக்கியது. வழி தவறியது! தெற்கு நோக்கியே சென்று கொண்டிருந்த கப்பல், நடுவில் மீண்டும் ஒரு புயல் பிராந்தியத்தில் சிக்கியது. தன் போக்கில் சென்ற கப்பல் இறுதியில் அத்தீவை அடைந்ததாம். மனிதர்கள் இல்லாத அத்தீவில் புதிய மனித சமுதாயத்தைப் படைத்தனர் இளம்பெரு வழுதியின் குடியினர்!



வீராசாமிக்கு வியப்புத் தாளவில்லை. இளம் பெருவழுதியின் சந்ததியில் வந்த ஒருவர், தற்போது அத்தீவின் அரசராக உள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

''எங்கள் மன்னர் பெருங்குடுமிப் பாண்டியன் நும்மைக் காணின் மகிழ்வார்! வருக! வருக!'' என்று அரண்மனைக்கு அழைத்தனர் அம்மக்கள்.

''லட்டு கிடைக்குமோ?'' என்று கேட்டான் லட்டு.

''எது கேட்டனை?'' என்று கேட்டான் ஒருவன்.

''லட்டு என்னும் தின்பண்டம் கிடைக்குமோ?'' என்று அய்யாசாமி விளக்கமாகக் கேட்டான்.

''பிட்டுதானே! கவலைப்பட வேண்டாம். எங்கள் காலை உணவே பிட்டுதான். நிரம்பத் தருகிறோம்!'' என்றான் கூட்டத்தில் இருந்த ஒருவன்.

'லட்டு' தலையைத் தொங்க விட்டவாறு பின்னே சென்றான்.

இழு கயிற்றுப் போட்டி

பெயருக்குத் தகுந்தாற் போலவே பெரிய குடுமியுடன் காட்சி அளித்தான் பெருங்குடுமிப் பாண்டியன். புதியவர்களிடம் அன்பாகப் பேசினான். நல்லதொரு விருந்து தந்தான். விருந்தில் 'லட்டு' இல்லாத குறை ஒன்றுதான் லட்டுவை வாட்டிய விஷயம்!

வீராசாமி தங்கள் வரலாற்றை விவரமாகக் கூறினார். மீண்டும் தம் கப்பலைத் தேடிச் செல்ல வேண்டும் என்று கூறி விடை கேட்டார்.

''மீண்டும் போவதா? மாண்டு போவீர்கள்! எம்மிற் பலர் தாயகம் திரும்பப் பல தடவை கப்பலில் சென்றனர். வானூர்தியில் சென்றனர்! ஆனால் உயிரிழந்து போனார்கள். காரணம், நடுவில் இருக்கும் புயல் பிராந்தியம்தான். லட்சத்தில் ஒரு தடவைதான் உயிருடன் அப்பிராந்தியத்தைக் கடக்க இயலும். அவ்வாறு முதலில் வந்தது இளம் பெருவழுதியின் கப்பல்! இப்போது உமது வானளர்தி! மீண்டும் வேண்டாம் வீண் வம்பு!'' என்றான் வேந்தன்.

ஆனால் வீராசாமி தம் கடமையை நினைவு கூர்ந்தார். திரும்பிச் செல்வதில் அவர் உறுதியாக இருந்ததால் விடை கொடுக்க ஒப்புக் கொண்டான் வேந்தன்.

''இன்று இரவு வெண் நிலவு வேளையில், தேய்புரிப் பழங்கயிற்றுப் போட்டியைக் கண்டு களியுங்கள்! பிறகு நிலவு ஒளியில் இயங்கும் எமது விண்ணூர்தியில் நீங்கள் புறப்படலாம்! அவ்வூர்தியை இயக்கும் விதத்தை எமது அறிஞர்கள் விளக்குவர்!'' என்றான் வேந்தன்.

விஞ்ஞானத்திலும் புதுப்பாண்டி நாட்டுத் தமிழர் முன்னேறிவிட்டனரே! வீராசாமி வியந்தார். நிலவொளியில் இயங்கும் விண்ணூர்தியா! வியப்பான வியப்பு! சூரிய வெப்பக் கருவிகளையே அவர் கேள்விப்பட்டிருந்தார். இது என்ன புதுமை!

''அது என்ன கயிற்றுப் போட்டி?'' என்று கேட்டான் லட்டு.

''பொறு. இரவில் தெரியும்!'' என்றார் வீராசாமி.

• • •

இரவு வந்தது. மேட்டுத் திடலில் மக்கள் கூடியிருந்தனர். வட்டமான மைதானத்தைச் சுற்றியிருந்த அடுக்கடுக்கான தட்டுகளில் மக்கள் அமர்ந்திருந்தனர். பயங்கரமாகப் பிளிறிய இரண்டு காட்டு யானைகளை மைதானத்திற்குள் மாவுத்தர்கள் கொண்டு வந்தனர். தேர் வடத்தைப் போன்று பத்து மடங்கு பருமனான கயிறு ஒன்றைப் பலர் சுமக்க முடியாமல்

காரணம் என்ன?

தலைவரின் செயலாளர்: நமது தலைவர் யார் யாரைக் கட்டித் தழுவினரோ அவர்களையெல்லாம் உள்ளே அழைத்து வரச் சொல்கிறார்.

கூட்டத்தில் ஒருவர்: ஏன்?

செயலாளர்: அவர் கழுத்தில் கிடந்த தங்கச் செயினைக் காணோமாம்!

-பெ. வெங்கடலட்சுமிகாந்தன்



சுமந்து வந்தனர். அதன் ஒரு நுனியை ஒரு யானையின் வயிற்றில் கட்டினர். மறு நுனி மற்ற யானையின் வயிற்றில் கட்டப்பட்டது. யானைகளின் முதுகில் மாவுத்தர்கள் ஏறிக் கொண்டனர். ஒரு யானை கிழக்கை நோக்கி நிறுத்தப் பட்டிருந்தது. மற்ற யானை மேற்குத் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இரவு மணி ஏழு! வேந்தர் பெருங் குடுமிப் பாண்டியன் உயரமான தமது இருக்கையில் வந்து அமர்ந்தான்.

''வேந்தர் வேந்தன் பெருங்குடுமிப் பாண்டியன் வாழ்க! வாழ்க!'' என்ற கூக்குரல் விண்ணைப் பிளந்தது.

படைத் தலைவனைப் போல் காட்சி யளித்த ஒருவன், கையில் சங்கொன்றை ஏந்திய வண்ணம் யானையின் அருகே சென்றான். இரண்டு யானைகளிட மிருந்தும் சம தொலைவில் இருக்கு மாறு நடுவில் ஒரு கோடு வரைந்தான். அவ்விடத்தில் நின்ற வண்ணம் வேந் தனை நோக்கினான். வேந்தனும் தலை யசைத்தான். உடனே சங்க நாதம் கிளம்பியது.

மாவுத்தர்கள் இருவரும் தத்தம் யானைகளை அங்குசத்தால் குத்தி விரட் டினர். சம பலமுள்ள யானைகள் அவை. எனவே இழுபறிப் போராட் டம் அங்கே நடந்தது. நடுவில் கிழித்த கோட்டைத் தாண்டி எந்த யானை பின்னோக்கி வந்ததோ அது தோற்ற யானையாம்! ஆனால் அவ்வாறு நிகழ வில்லை. யானைகள் முனைப்புடன் கயிறு இழுக்கும் போட்டியில் ஈடுபட்டிருந் தன!

''ஏலேலோ! ஐலேசா!'' ''ஏலேலோ ஐலேசா!'' என்று மக்கள் குரல் எழுப்பி யானைகளுக்கு உற்சாகம் ஊட்டினர். ஒரு யானை பின்னோக்கி வந்து கோட் டைத் தாண்டி விடுமோ என்று அஞ்சும் வேளையில் அது பிளிறிய வண்ணம் பத்தடி முன்னே சென்று விடும்! சரியான இழுபறிப் போராட்டம்!

பழங்காலத்தில் தேய்ந்த பழங் கயிற்றைக் கொண்டு இவ் வேடிக்கை யைத் தமிழர்கள் செய்து மகிழ்ந் திருக்கிறார்களாம். சற்று நேரத்துக் குள்ளாகவே கயிறு அறுந்து போய் விடுமாம். வேடிக்கையை நீட்டிக்க வேண்டியே புதுப் பாண்டி நாட்டினர் பெரிய வடக் கயிற்றினைப் பயன் படுத்துகிறார்களாம். (தேய்புரிப் பழங் கயிற்றினை யானைகள் இழுத்த கதை நற்றிணையில் கூறப்பட்டுள்ளது)

இரண்டு மணி நேர இடைவிடாப் போராட்டத்திற்குப் பிறகு கயிறு தேய்ந்து 'படார்' என்று அறுந்து போயிற்று. யானைகள் சம வேகமாக எதிரெதிர் திசைகளில் முன்னேறி ஓடின! ஓடியே போயின! உடன் கொம்புகள் ஊதப்பட்டன! கொட்டு முழக்கு முழங்கியது! வேடிக்கை முடி வடைந்தது.

வேந்தன் பெருங்குடுமிப் பாண்டிய னும், அமைச்சர் குழாமும் வீராசாமி குழுவினரை விண்ணூர்தியில் ஏற்றி விடை கொடுத்தனுப்பினர். விண்-ணூர்தி வெகு விரைவாக வட திசை யில் பறந்தது. அதோ. புயல் பிராந் தியத்திற்குள் நுழைந்து விட்டது. சிறு வர்கள் இருவரும் சடவுளை வேண்டி வணங்கினார்கள். விண்ணூர்தி புயலில் தத்தளித்தது. சில கருவிகள் பழு தாயின. எத்திசையில் விண்ணூர்தி செல் கிறது என்று வீராசாமிக்கும் புரிய வில்லை. பல குட்டிக் கரணங்களை அடித்துக்கொண்டு விண்ணூர்தி நகர்ந்து கொண்டிருந்தது. அந்த ஊர்தியில் இருந்த மூவரும் மயங்கிச் சாய்ந் தனர்.



ஆசிரியருக்குக் கடிதம்

ஒருமாணவன் ஆசிரியருக்குக்கடிதம் எழுதினன்:

உயர்திரு ஆசிரியர் அவர்களுக்கு

என் மகன் குமாருக்கு உடம்பு சரி யில்லை. ஆகையால் அவனுக்கு இன்று ஒரு நாள் மட்டும் லீவு தரும்படி கேட் டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
எங்கப்பா.

-பட்டுக்கோட்டை ரவி

4. வெள்ளைப் பாலைவனம்

மீண்டும் வீராசாமி சுய உணர்வு பெற்றபொழுது பெரும் புயலின்



சீற்றம் தணிந்திருந்தது. இப்போது மணிக்கு 10 கி.மீ. அளவிலான காற்று மட்டும் வீசிய வண்ணம் இருந்தது. வெள்ளிப் பாளங்களைப் போன்று பளபளத்த திடல்வெளி, திடீரென்று வீராசாமியின் கண்களில் பட்டது. மெல்ல அவர் விண்ணூர்தியைத் திடல் வெளியில் இறக்கினார். மயங்கிக் கிடந்த சிறுவர்களையும் தட்டி எழுப்பினார். அவர்கள் கீழே இறங்கியபோது முற்றிலும் விசித்திரமான வரவேற்பாளர்கள் விண்ணூர்தியைச் சுற்றிலும் குழுமியிருந்தனர் அவர்கள் வேறு யாருமல்ல! பெங்குவின் பறவைகள் தாம்!

ஆம், அவர்கள் இறுதியாக அண்டார்க்டிகாவுக்குள்ளே வந்திறங்கிவிட்டார்கள். என்ன வியப்பு! வீராசாமி குழுவினர் கடுமையான குளிர் காற்றினையும் பொருட்படுத்தாது கீழிறங்கி அதிசய உலகைக் கண்ணிமைக்காமல் பார்த்து நின்றனர். அப்போது பெங்குவின்கள் ஒவ்வொன்றாக அவர்கள் காலடியில் வந்து அழகான கூழாங்கற்களைப் பரிசாக வைத்துவிட்டு ஓடிப் போய் எட்ட நின்று கொண்டன. சிறு பெங்குவின் குட்டிகள் தங்கள் மகிழ்ச்சியைக் குட்டிக்கரணம் அடித்துத் தெரிவித்துக் கொண்டன. வேறு சில பெங்குவின் பறவைகள் பனி மூட்டங்களில் ஏறிச் சிறுவர் போல் வழுக்கி வேடிக்கை காட்டின.

லட்சுமணன் 'லட்'டையும் மறந்து இந்த அதிசயக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தான். என்ன அற்புதம்! ஒரு பெங்குவின், கோமாளி போல் குதித்துக் குதித்து ஆடியது. மற்றொரு பெங்குவின் அரசரைப் போல் அங்குமிங்கும் உலவி மற்ற பறவைகளை அடக்கி ஏதோ கட்டளைகளைப் பிறப்பிப்பது போலத் தெரிந்தது. அப்பறவைகளில் சக்கரவர்த்தி பெங்குவின், கோமாளிப் பெங்குவின் என்று பல வகைகள் உண்டென்று வீராசாமி சிறுவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

கடுங் குளிரையும் பொருட்படுத்தாது சற்றுத் தூரம் உலவி வர மூவரும் கிளம்பிச் சென்றனர். குளிரைத் தாங்கவல்ல உல்லன் ஆடைகளையும் கவசங்களையும் அவர்கள் அணிந்திருந்த போதும் அண்டார்க்டிகாவில் வீசும் கடும் புயற் காற்று அவர்களை நடுங்க வைத்துக் கொண்டிருந்தது. பேசிக் கொண்டே அவர்கள் வெகு தூரம் விண்ணூர்தியை விட்டு விலகி வந்து விட்டனர் இப்போது அவர்கள் முற்றிலும் எதிர்பாராத விபத்து ஒன்று நேரிட்டது.

அந்த விபத்து நிகழக் காரணமாயிருந்தவர் வீராசாமிதான். ஆமாம், போகும் வழியெல்லாம் அண்டார்க்டிகா கண்டத்தைப் பற்றிய கதைகளை அளந்து கொண்டு வந்தார் அவர். அண்டார்க்டிகாவின் வெப்ப நிலை சராசரியாக 30 டிகிரி செண்டிகிரேடாக இருக்குமாம். யார் கேட்டார்கள் இதை? மணிக்கு 10 கி. மீ. வேகத்தில் வீசும் காற்று சில சமயம் 100 கி. மீ. வேகத்திலும் வீசுமாம்! நமக்கு எதற்கு இது? ஆனால், உலகத்தின் 'ஐஸ்' இருப்பைக் கணக்கெடுத்துப் பார்த்தால் அண்டார்க்டிகாவில் மட்டும் 90 சதவீதம் இருக்கும் என்றபோது அய்யாசாமியின் நாவில் நீர் ஊறியது. ஆனால் 'லட்டு' வின் பற்களோ கடகடவெனத் தந்தியடித்துக் கிட்டித்தன!

அப்போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது! எதிர்பாராத நிலையில் பின்புறமாக வந்த சிறுத்தை சீல் ஒன்று தன் பயங்கரமான தாடைகளால் 'லட்டு'வின் முட்டியைப் பார்த்து ஒரு போடு போட்டது! அவ்வளவுதான்! 'லட்டு' 'ஹா' வென்று அலறிய வண்ணம் கீழே சாய்ந்தான். மாமா திரும்பிப் பார்த்து அருகில் வருவதற்குள் சீல் நழுவி வெகு வேகமாகச் சென்று விட்டது. 'லட்டு'வால் நடக்க முடியவில்லை. அவனைத் தோளில் சுமந்து கொண்டு விண்ணூர்தியை நோக்கி நடக்கலானார் மாமா. ஆட்டுக் குட்டி போலப் பின்தொடர்ந்தான் அய்யாசாமி.

திடீரென்று பனிப் பொழிவு அதிகமாகியது. காற்றின் வேகமும் அதிகரித்தது. தற்காப்புக்காகத் தோளில் சுமந்து வந்திருந்த 'டென்ட்' துணியை விரித்துக் கூடாரம் ஒன்றை அமைத்தார் மாமா. கூடாரத்திற்குள் குளிரில் நடுங்கியபடி நாங்கள் கிடந்தோம். பனிப் பொழிவு நின்றால்தான் நாங்கள் வெளியில் வந்து விண்ணூர்தியை நோக்கி நடக்க இயலும்.

லட்டுவோ சுத்தமாக நடக்கும் சக்தியற்றுப் போய்ப் பிதற்றிக் கொண்டு கிடந்தான். உண்ணுவதற்கு உணவுப் பொருளும் கைவசம் இல்லை. விண்ணூர்தியை நோக்கிப் போனால்தான் அதுவும் கிட்டும். என்ன செய்வது? மாமாவும் களைத்துப் போயிருந்தார்.

சாவின் அருகிலே நாங்கள் நின்று கொண்டிருந்தோம். விண்ணூர்தி நிற்கும் தொலைவு இரண்டு கி. மீ. இருந்தது. விரைந்து ஓடி விண்ணூர்திக்குள் நுழைந்து வெப்பக் கருவியைக்கொண்டு

கொய்யாப் பழம்



"குண்டுப்பழம் கொய்யாப்பழம்
கொண்டு வரட்டுமா?
கூடச்சேர்ந்து உண்பதற்கு
நானும் வரட்டுமா?

கொஞ்சும்கிளி குருவிமைனா
கூட வரட்டுமா?
கொறித்துக் கொறித்துத்
தின்பதற்கு அணிலும் வரட்டுமா?

நறுக்கிஅம்மா தந்திடுவாள்;
நன்றாய் இருக்குமே!
நாக்கில்எச்சில் ஊறும்போது
தின்றால் ருசிக்குமே!

நல்லபழம் நல்லபழம்
சாப்பிட வாங்க.
வெள்ளைமனக் குழந்தைகளே,
விரும்பியே வாங்க!"

செம்பை சேவியர்

கேள்வி இரண்டு; விடை ஒன்று

திங்கள் வருவதேன்?
திருவிளக்கு ஏற்றுவதேன்? — ஞாயிறு போவதால்

எருக்கிலை காய்வதேன்?
எருமைக் கன்று சாவதேன்? — பால் வற்றியதால்

பௌர்ணமி வருவதேன்?
பட்டம் பெறுவதேன்? — கலை வளர்வதால்

வாழ்க்கை வளமாவதேன்?
வழுக்கி விழுவதேன்? — பாசத்தால்



-லட்சுமி நடராஜன்

உஷ்ணப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் குளிரில் விரைத்துப் பசியால் வாடிச் சாக வேண்டியதுதான். இதற்கிடையில் லட்டுவை வேறு தூக்கிச் செல்ல வேண்டும்.

லட்டு எங்களை நோக்கி, ''நீங்கள் ஓடித் தப்புங்கள்! என்னைத் தூக்கிக் கொண்டு ஓடினால் நேரம்அதிகம் ஆகும். குளிரில் மூவரும் சாக வேண்டி யிருக்கும். நீங்கள் இருவராவது தப்பிப் பிழையுங்கள்! என்னைப் பற்றிக் கவலை வேண்டாம்!'' என்றான்.

ஆனால் மாமாவோ லட்டுவை விட்டு விட்டு உயிர் தப்ப விரும்பவில்லை. நானும் அவருடன் டெண்ட் படுதாவைச் சரிசெய்து கொண்டிருக்கும் நேரத்தில் எங்களுக்குத் தெரியாமல் 'லட்டு' உறை பனியில் நழுவி மறைந்தே போய் விட்டான். 'லட்டு! லட்டு!' என்று நாங்கள் கதறிய கதறல் எங்கும் எதிரொலித்தது. பக்கத்தில் கிடந்த டைரியில் லட்டு பென்சிலால் (பேனாவால் அண்டார்க்டிகாவில் எழுத முடியாது. இங்க் உறைந்து விடும்!) லட்டு லட்டாகப் பின் வரும் வரிகளை எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தான்.

''நான் போகிறேன். என்னைத் தேட வேண்டாம். நீங்களாவது தப்பிப் பிழையுங்கள். உங்களுக்குச் சுமையாக இருக்க நான் விரும்பவில்லை.''

லட்டுவின் வாசகங்களைப் படித்ததும் மாமாவின் தொண்டை கம்மியது! என் கண்கள் குளமாயின!

இறுதியில் லட்டு அந்த வெள்ளைப் பாலைவனத்தில் — பனியின் அந்தகாரத்தில் எங்கோ தவழ்ந்து சென்று மறைந்து விட்டான்!

மாமா உடன் முணு முணுத்தார். ''அய்யாசாமி! சாவு அரக்கன் நம்மை விரட்டிக் கொண்டு வருகிறான்! வா! முடிந்தவரை ஓடுவோம்! மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடுவோம்!''

ஓடினோம்; ஓடினோம்; ஓடினோம்! விண்ணூர்தி எங்கள் கண்ணில் படும்வரை ஓடினோம். விண்ணூர்தியில் போய் விழுந்து ஹீட்டரைத் தட்டி விட்டதும் தான் எங்கள் உயிர் எங்களுக்கு வந்தது; பாதி உயிர்தான்; மீதி உயிரை லட்டு எடுத்துக் கொண்டு போய் விட்டானே!

விண்ணூர்திக்குள் வந்ததும் 'லட்டு! லட்டு!' என்று கதறி அழுதேன். மாமாவும் கண்கலங்க என் முதுகில் மெல்லத் தட்டிக் கொடுத்தார். ஆனால் இது என்ன? வரவரப் பலமாகத் தட்டுகிறாரே! அய்யோ! வலிக்கிறதே! அய்யோ! மாமாவுக்கு என்ன ஆயிற்று?

பட்டென்று அய்யாசாமிக்கு விழிப்பு ஏற்பட்டது! கண்களைக் கசக்கிப் பார்த்தான். அய்யாசாமியின் அப்பா அவன் முதுகைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தார். அய்யாசாமி எருமை மாட்டின்மீதுதான் அமர்ந்து கொண்டிருந்தான். எருமை மாடோ கண்களை மூடிய வண்ணம் அசை போட்டுக் கொண்டிருந்தது. அப்படியானால், நடந்ததெல்லாம் கனவுதானா? உண்மையில் அவன் அண்டார்க்டிகா போகவில்லையா?

''படவா, ராஸ்கல்! பள்ளிக்கூடத்திற்கு மட்டமா போட்டிருக்கிறாய்?'' என்று இன்னமும் அவன் முதுகில் 'சாணி' தட்டிக் கொண்டிருந்தார் அய்யாசாமியின் அப்பா!

சிபாரிசு



ஆர். ஆனந்த்

5–6–83

காலை மணி ஏழு.

''டேய் ராகவா! இங்கே வாடா!''

''என்னப்பா?'' ராகவன் வினவினான்.

''பேப்பரைப் பார்த்தியாடா?''

''இல்லே. என்னப்பா நியூஸ்?''

பேப்பரை மகிழ்ச்சியுடன் காட்டினார் சேஷாத்திரி. 'திருவள்ளுவர் கழகம் 16–6–83 (வியாழக் கிழமை) 'ராமன் ஹாலில்' பத்து மணிக்குப் பேச்சுப் போட்டி நடத்துகிறது. போட்டிக்கான தலைப்பு போட்டிக்கு, 15 நிமிடங்கள் முன்னதாகத் தரப்படும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள், கழகச் செயலாளர் திரு கார்த்திகேயனிடம் 12–6–83-ஆம் தேதிக்கு முன்னதாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். போட்டிக்குத் தலைமை தாங்கிப் பரிசளிக்க, திரு. ராமனுதன் அவர்கள் இசைந்துள்ளார்கள்' — ராகவன் பேப்பரைப் படித்து முடித்தான்.

தலைமை தாங்கும் ராமனுதன் நினைத்தால் நடக்காதது ஒன்றும் கிடையாது.

ராகவனை அவர் மூலம் ஏதாவது ஒரு வேலையில் சேர்த்து விடலாம் என்று சேஷாத்திரி எண்ணியிருந்தார். அப்படிப்பட்ட சமயத்தில் அறிமுகப்படுத்திக்கொள்ள இப்படி ஒரு சந்தர்ப்பம்!

பேச்சுப் போட்டியில் ராகவனும் (ஒரு விஷயம்: ராகவன் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டான் என்றால், முதற் பரிசு அவனுக்குத்தான்) தன் பெயரைப் பதிவு செய்து கொண்டான்.

16–6–83

காலை மணி 9–45.

போட்டிக்கான தலைப்பு தரப்பட்டது: ''சிபாரிசினல் ஏற்படும் தீமைகள்''.

ராகவன் தலைப்பைக் கண்டு சற்றுத் தயங்கினன். அப்பொழுது அவனது மனசாட்சி(?) பேசியது: ''டேய் ராகவா! பேசறதுக்கும் செய்யறதுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாதுடா! ஏண்டா மடையா, 'இன்று பல 'தலைவர்கள், பேசுவதையா செய்கிறார்கள்? அப்படிச்செய்திருந்தால், நம் நாடு என்றோ சுபிட்சமடைந்திருக்குமேடா! என்னை அமைதியாகபாரதியாரையும் திருவள்ளுவரையும் மேற்கோள் காட்டிப் பேசறாங்க? ஆனல் செய்யறது? — உனக்கு அவங்கதாண்டா குரு. ம்... தயங்காதே. சிறப்பாகப் பேசு. அட்வான்ஸாகவேசொல்லிடறேன்—கங்கிராட்ஸ்!'

16–6–83

காலை மணி 10.

போட்டி துவங்கியது. ராகவன் உள்பட பலர் பேசினர்


பகல் ஒரு மணிக்கு முடிவு அறிவிக்கப்பட்டது ராகவன் முதல் பரிசு பெற்றிருந்தான்.

தலைவர் ராமனுதன் பேசினர்: அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் இந்தப் போட்டியில் சிறப்பாகப் பேசி அனைவரையும் சிந்திக்கச் செய்த தம்பி ராகவனுக்கு நான் ஒரு சிறப்புப் பரிசு அளிக்க விரும்புகிறேன் அவனுடைய பேச்சுக்கு ஐம்பது ரூபாயோ, நூறு ரூபாயோ தர நான் விரும்பவில்லை. சிபாரிசு மூலம் ஏற்படும் தீமைகளை அருமையாகச் சுட்டிக் காட்டினான். நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப் பட்டிருப்பதற்கு அது ஒரு முக்கிய காரணம் என்பதை உணருகிறேன். எனவே, இனி என் வாழ்நாளில் நான் யாருக்கும் சிபாரிசு செய்வதில்லை, யாருடைய சிபாரிசையும் ஏற்பதில்லை என்றும் உறுதியாகக் கூறுகிறேன். இதுவே அவனது பேச்சுக்கு அளிக்கப் படக்கூடிய சிறந்த பரிசு என்று நினைக்கிறேன். நன்றி, வணக்கம்!' என்று கூறி விடை பெற்றார்.

அனைவருடைய கரவொலியும் விண்ணைப் பிளந்தது.

ராகவன் மனம்...?

அவன் பரிசினைப் பெற்றுக் கொள்ளாமலேயே வீட்டிற்குக் கிளம்பி விட்டான்.



அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி
கோடை வெய்யிலின்
வெப்பக் கொடுமை தாங்கி டாமல்
வேகி றேனடா!

குப்புசாமி:

தெப்பக் குளத்தில் மூழ்கி மூழ்கித்
தினமும் குளியுங்கள்!
வெப்பக் கொடுமை விரைந்தே ஓடும்;
வேறு வழியில்லை.

அப்புசாமி:

தெப்பக் குளத்தில் தண்ணீர் ஏது?
இப்போ அதற்குள்ளே
கப்பு, சோமு கிரிக்கெட் ஆட்டம்
தொடர்ந்து நடக்குதே!

குப்புசாமி:

தெப்பக் குளத்தில் மூன்று மாதம்
சென்று பாருங்கள்.
அப்போ நிறைய நீர் இருக்கும்;
அதிலே குளிக்கலாம்.

அப்புசாமி:

தெப்பக் குளத்தில் மூன்று மாதம்
சென்று குளிக்கவா
இப்போ தெனக்கு யோசனை நீ
எடுத்துச் சொல்கிறாய்?
வெப்பக் கொடுமை யாலே நானும்
வெந்து சாகவே
அற்புத மாய் வழியைச் சொன்ன
அறிஞன் நீயடா!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

